நவம்பர் 2005

ஞானம்

கலை இலக்கியச் சஞ்சிகை

66

30/=

கலாபூஷணம்

கவிஞர் ஏ. இக்பால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானம்

ஒளி – 06 சுடர் – 06

**பகிர்தலின்
மூலம்
விரிவும்
ஆழமும்
பெறுவது
ஞானம்.**

ஆசிரியர் :
தி. ஞானசேகரன்

இணை ஆசிரியர் :
ஞானம் ஞானசேகரன்

ஓவியர்கள் :
புஷ்பா
சந்திரா

தலைமை அலுவலகம் :
19/7, பேராதனை வீதி, கண்டி.

தொடர்புகளுக்கு... :
தி. ஞானசேகரன்
ஞானம் கிளை அலுவலகம்
3-B, 46வது ஒழுங்கை,
கொழும்பு – 06.
தொலைபேசி : 011–2586013
0777–306506
தொலைநகல் : 011–2586013
E-mail : editor@gnanam.info
Web : www.gnanam.info

இதழினுள்ளே .....

- *கவிதைகள்*

ஸ்ரீ. பிரசாந்தன் 06
வாகரைவாணன் 07
சந்திரகாந்தா 36
மடவளை அன்சார் எம். ஷியாம் 42
செல்வி சுப்பிரமணியம் சுதாஜினி 54

- *கட்டுரைகள்*

அ. ஸ. மு. ராசீக் 09
த. சிவசுப்பிரமணியம் 19
முருகபூபதி 37
யதீந்திரா 40
அந்தனி ஜீவா 51
இ. இராஜேஸ்கண்ணன் 57

- *சிறுகதைகள்*

கெ. சர்வேஸ்வரன் 04
கே. ஆர். டேவிட் 13
எஸ். பிரமிலானிஸா தில்றுக்க்ஷி/
ஆறுமுகம் தங்க வேலாயுதம் 25

- *நேர்காணல்*

எஸ். பொ. / தி. ஞானசேகரன் 30

- *வாசகர் பேசுகிறார்* 43

- *பத்தி எழுத்துக்கள்*

தேடலோன் 23
சிவசுப்பிரமணியம் 48
கலாநிதி துரை மனோகரன் 55

- *நூல் மதிப்புரை* 67

முகப்போவியம் : **மும்தாஸ்**

ஞானம் சஞ்சிகையில் பிரசுரமாகும் படைப்புகளின் கருத்துகட்கு அவற்றை எழுதிய ஆசிரியர்களே பொறுப்புடையவர்கள். புனைபெயரில் எழுதுபவர்கள் தமது சொந்தப் பெயர், முகவரி ஆகியவற்றை வேறாக இணைத்தல் வேண்டும். பிரசுரத்திற்கு ஏற்றுக் கொள்ளப்படும் படைப்புகளைச் செவ்வைப்படுத்த ஆசிரியருக்கு உரிமையுண்டு. – **ஆசிரியர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானம்

கலை இலக்கியச் சஞ்சிகை

வெள்ளத்தின் பெருக்கைப்போல் கலைப்பெருக்கும்
கவிப்பெருக்கும் மேவு மாயின்,
பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெல்லாம்
விழிபெற்றுப் பதவி கொள்வார்.

நலிவுற்றுச் செல்லும் புலம் பெயர்ந்தோர் இலக்கிய முயற்சிகள்

புலம்பெயர்ந்தோர் இலக்கியம் என்ற புதிய இலக்கிய வகையினை நவீனத்தமிழ் இலக்கியத்திற்கு அளித்தவர்கள் என்ற பெருமை ஈழத் தமிழ் இலக்கியவாதிகளுக்கே உரியது. இனப்பிரச்சனையின் பாதிப்பினால் இலங்கையை விட்டுப் புலம் பெயர்ந்து ஐரோப்பிய, அமெரிக்க, அவுஸ்திரேலியக் கண்டங்களில் குடியேறியவர்களால் படைக்கப்படும் இலக்கியங்கள் புலம் பெயர்ந்தோர் இலக்கியம் என அழைக்கப்பட்டது.

ஆரம்பத்தில் புலம்பெயர்ந்தோர் இலக்கியத்தின் கருப்பொருள் களாகத் தாம் பிரிந்துவந்த மண்ணின் ஏக்கம், பிரிந்துவந்த உறவுகள் பற்றிய ஏக்கம், பிரிந்து வந்த சுற்றாடல் சமூகம் பற்றிய ஏக்கம் ஆகியவை இடம்பெற்றன.

பின்னர் புலம்பெயர்ந்தோர் இலக்கியம் புகலிட இலக்கியமாகப் பரிணாமம் பெற்றது. வேறுபட்ட ஒரு சமூகச் சூழலில் தம்மைப் பொருத்திக் கொள்வதற்கு எப்படியெல்லாம் கஷ்டப்பட வேண்டி யுள்ளது, எப்படியெல்லாம் போராட வேண்டியுள்ளது, எத்தகைய இழப்புக்களைச் சந்திக்கவேண்டியுள்ளது என்பதை இந்த இரண்டாவது கட்ட இலக்கியங்கள் பேசுகின்றன. இதுவே புகலிட இலக்கியம் என அழைக்கப்பட்டது.

இந்த இலக்கியங்கள் தமிழ் இலக்கியத்திற்கு புதிய புலத்தை, புதிய சிந்தனைகளை, புதிய பொருட்பரப்பினை, புதிய வெளிப்பாட்டு முறைகளை அறிமுகப்படுத்தின.

புகலிட இலக்கிய வாதிகளால் ஏராளமான கவிதைகள் கட்டு ரைகள் சிறுகதைகள் எழுதப்பட்டன. இருபது நாவல்கள் வரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியிடப்பட்டன. புலம்பெயர் நாடுகளிலிருந்து ஏறத்தாழ நூறு சஞ்சிகைகள் வெளிவந்ததாக ஒரு கணிப்புக் கூறுகிறது.

'புலம்பெயர்ந்தோர் இலக்கியமே இருபத்தோராம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியத்திற்குத் தலைமை தாங்கப்போகிறது' எனப் புலம்பெயர்ந்து வாழும் மூத்த எழுத்தாளரான எஸ். பொ. பெருமையுடன் குறிப்பிடும் அளவுக்குப் புலம்பெயர்ந்தோர் இலக்கியம் எழுச்சி கண்டிருந்தது.

ஆனால் கடந்த சில ஆண்டுகளாக நிலைமை தலைகீழாக மாறியுள்ளது. புலம் பெயர்ந்த நாடுகளிலிருந்து வெளிவந்து கொண்டிருந்த ஏராளமான சஞ்சிகைகள் காலப்போக்கில் நின்று விட்டன.

"புலம்பெயர்ந்து சென்ற எழுத்தாளர்கள் தமது அனைத்துப் படைப்பிலக்கியங்களையும் படைத்து விட்டனர். இனி அவர்களுக்கு எதனைப் படைப்பது என்ற கேள்வி எழுந்துள்ளது. இதனால் அவர்கள் வாதப்பிரதி வாதங்களில் ஈடுபட்டு வீண் பொழுது போக்குகிறார்கள்" என்றும் சிலர் கூற முற்பட்டுள்ளனர்.

புலம்பெயர்ந்து வாழும் எதிர்காலச் சந்ததியினரால் தமிழில் ஆக்க இலக்கியம் படைக்க முடியுமா என்ற கேள்வியும் எழுந்துள்ளது. இதற்கான பதிலைத் திட்டவட்டமாகக் கூறமுடியாதுள்ளது.

புலம்பெயர்ந்த நாட்டில் வாழும் சிறார்கள் தாம் வாழும் நாட்டு மொழியையே கற்று அம்மொழியிலேயே பேசவும் எழுதவும் வேண்டியுள்ளதால், தாய் மொழியான தமிழைக் கற்று அதிலே இலக்கியம் படைப்பார்கள் என்று கூறமுடியாது.

புலம் பெயர்ந்து வாழும் நாடுகளில் உள்ள சிறார்கள் எதிர் காலத்தில் அவ்வவ் நாட்டு மொழிகளிலே இலக்கியம் படைக்கும் சாத்தியம் இருக்கிறது. ஆனாலும் அவர்களது உணர்வும் அனுபவமும் தமிழ் நிலைப்பட்டதாக இருக்கும். ஏற்கனவே புலம் பெயர்ந்து வாழும் அடுத்த தலைமுறையினர் வேற்று மொழிகளில் இலக்கியங்கள் படைப்பதையும் காணமுடிகிறது.

ஆரம்பத்தில் புலம்பெயர் நாடுகளில் விரிந்து சென்ற தமிழ் இலக்கியக் களம் இப்போது சுருங்கிச் செல்லும் நிலையில் உள்ளது.

இந்நிலை மாறவேண்டும். இதற்கான சிந்தனைகளை புலம் பெயர்ந்து வாழும் மூத்த இலக்கியவாதிகள் முன்னெடுத்து, திட்டமிட்டுச் செயலாற்ற வேண்டியது காலத்தின் தேவையாகி யுள்ளது என்பதனை ஞானம் வலியுறுத்தி நிற்கிறது.

❏

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

கமலா மாமி இண்டைக்கு வெள்ளாப் போடையே எழும்பீட்டா. இண்டைக்குத்தான் கௌரிக்காப்பெண்டதாலை வெள்ளாப்போடையே எழும்பி சீனி அரியதரம் சுட்டவ. மாமி நிறையக் காலமா இந்த விரதம் இருக்கிறாவா. விரத நாட்களிலை காலமை எழும்பின உடன ரேடியோவில ஏதாவது பக்திப் பாட்டுக் கசட்டை நாலூருக்குக் கேட்கிற மாதிரி போட்டுடுவா. பிறகுதான் சமைக்கிறது, குளிக்கிறது எல்லாம்.

ஊரில் கமலா மாமி விரதங்கள் இருக்கிறவர் எண்டு தெரியாத பொம்பிளையள் இல்லை. அந்த அளவுக்கு அவவுடைய விரதம் பேமஸ். யாராவது ஏதாவது விரதம் புதுசாப் பிடிக்கத் தொடங்கிறதெண்டால் அவவிட்டைத் தான் வருவினம் அட்வைஸ் கேக்க.

கமலா மாமிக்கு குழந்தையில்லை. எந்த நாளும் குமார் மாமாவோடை சண்டை பிடிப்பா. அவரும் சண்டை பிடிக்கிறவர். மாமி, 'நீங்கள் சாமிமேல பக்தியில்லை. கோயில் பக்கம் போறேல்லை. அதனால்தான் வீட்டிலை 'இந்தத் தரித்திரம்' எண்டு சொற்களைப் போட்டுடைப்பா. அவரும் விடமாட்டார். 'கமலாமாமின்ரை வாயாலதான் தங்களுக்கு ஒண்டும் சித்திக்கிற தில்லை' எண்டு அவவை ஏசுவார். என்ன விரதம், என்ன திருவிழா வந்தாலும் இந்த சொற்போருக்கு குறைவில்லை.

எந்த விரதமெண்டாலும் குளிச்சிட்டு காலைப் பூசைக்குக் கோயிலுக்குத் தவறாமை போயிடுவா. போகேக்கை வழிநெடுக, 'இண்டைக்கு இந்த விரதமெல்லே அதுதான் கோயிலுக்குப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போறன். ஏன் நீ பிடிக்கிறேல்லையே? இந்த விரதம் பிடிச்சா புருசனுக்கு நல்லதாம். அதற்கு நல்லதாம், இதற்கு நல்லதாம்' எண்டு காணுகிற பொம்பிளைளோடை நின்று அளவளாவி கோயிலுக்குப் போய்ச் சேர ஒருமணித்தியாலம் எடுக்கும்.

கோயிலில கமலா மாமிக்கு நல்ல மதிப்பு. கோயிலுக்கு வந்தா கொத்துமணி அடிக்கிறது அவதான். ஏதாவது கோயில் அபிசேகம் எண்டால் பஞ்சாமிருதம் எடுக்கிறதிலையும் முன்னுக்கு நிப்பா. பஞ்சாமிருதம் எடுக்கும் போதே உலகத்தை ஒரு முறை சுத்திக்கொண்டு வந்திடுவா. பக்கத்திலை ஒருத்தர் இருந்தாச் சரி. இருக்கிறவர் கேக்கவேணுமெண்டில்லை. அவவே எடுத்து முடியும்வரை ஏதாவது சொல்லுவா. கோயில் பூசைமுடிய விரத நாட்களிலை அந்தந்த விரதத்துக்குரிய தோத்திரம், தேவாரங்களைக் சத்தம்போட்டுப் படிப்பா.

பிறகு கோயிலாலை வரேக்கையும் அதே மாதிரி காணுகிற பொம்பிளையளோடை எல்லாம் கதைச்சுக் கொண்டுதான் வருவா. அந்த வழியிலைதான் அவ வழமையாச் சாமான் வாங்கிற கடை இருக்கிறதாலை, சாமான் வாங்காட்டிலும் அதிலையொருக்காத் தலை காட்டுவா. அங்க காசு வாங்கும் குழந்தை அக்காதான் பெரும்பாலான ஊர்புதினங்களைக் கமலா மாமிக்குச் சொல்லுவா. ஊரிலை அது தான் ஒரு கடையெண்டதாலை ஊர் புதினங்களை எல்லாம் அங்க வழமையா பின்னேரங்களில அலசுவினம்.

அதுக்குப் பிறகுபோய்த்தான் சமையல். இதனாலை விரத நாளெண்டால் குமார் மாமா பெரும்பாலும் வெளியிலைதான் சாப்பிடுறவர். அவருக்கு சாப்பிடாம இருக்கேலாது. இதனாலேயே நிறையநாள் அவருக்கும் கமலா மாமிக்கும் சண்டை வரும். 'இஞ்ச நான் கஸ்டப்பட்டு விரதமிருக்கிறன். காலமேலையிருந்து வாயிலை ஒரு வாய் தேத்தண்ணிகூடக் குடிக்கேல்லை. இப்பிடி நான் புனிதமா இருக்க நீங்கள் வெளியிலை போய் கண்டதைகரியதைச் சாப்பிட்டுட்டு வாறியள். இதனாலதான் வீடு விறுத்தியில்லாமக் கிடக்கு' என்று கமலா மாமி சிலவேளைகளில் சண்டையைத் தொடக்குவா. பிறகு சொல்லத்தேவையில்லை. குமார் மாமாவும் லேசில விடமாட்டார்.

படுக்கப் போகேக்கையும் தோத்திரங்கள் எல்லாம் படிப்பா. எப்படியும் அரைமணித்தியாலத் துக்கு மேல் படிப்பா. விரத காலமெண்டா இன்னும் நேரங்கூடும்.

இண்டைக்குக் காப்புப் பூசை பதினொரு மணிக்குத்தான். ஆனா ஒன்பது மணிக்கே அரியதரத்தோட வெளிக்கிட்டா. இண்டைக்கும் வாற வழியிலை ஆக்களோட நிண்டு அலசிப் போட்டுத்தான் வந்தவா வரேக்கை சுந்தரம் அக்காவுக்கு சீனி அரியதரம் எப்படிச் செய்யிற தெண்டு ஒரு பெரிய லெக்சரும் அடிச்சவா. வரேக்கை அப்படியே குழந்தை கடையிலதான் வெத்திலை, பாக்குப் பழங்கள் வாங்கினவா. கமலா மாமி கோயிலுக்கு வந்து சேரேக்கை பூசைக்கு எல்லாம் ஆய்த்தம். அவசரம் அவசர மாகக் கோயில் அய்யரிட்டை ஒரு பெரிய தாம் பாளத்தை வாங்கி இருபத்தொரு வெத்திலை, பாக்கு, அரியதரம் எண்டு எல்லாத்தையும் அழகா அடிக்கிப்போட்டு அந்தத் தட்டை கொண்டே முன்னுக்கு வைச்சவ. அதுக்கு முதலே பல தட்டுகள் அடுக்கிக் கிடந்தது.

காப்புப் பூசை தொடங்கியது. கோயில் அய்யர் மந்திரம் சொல்லத்தொடங்கினார். கமலா மாமி சுத்தவர காப்புப் பூசையில் இருக்கிற ஆட்களையும், அவையளின்ரை தட்டுக்களையும் ஒரு நோட்டம் விடுகிறா. அவவுக்குப் பக்கத்தி லிருக்கிற கனகம் அக்காவின் அரியதரம் கொஞ்சம் கருகி யிருந்தது.

“என்ன கனகம் அரியதரத்தைக் கருக விட்டிட்டியே!” கதையைத் தொடங்கினார்.

“ஓம் அக்கா, என்ன செய்யிறது. காலமை ஆயிரத்தெட்டு வேலை. பிள்ளைக்கு இண்டைக்கு சோதினை. அதுக்குச் சாப்பாடு செய்து அனுப்பவேணும். அதுகளின்ரை வேலைகளைக் கவனிக்கிறதிலை இதைக் கவனிக்கேல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாம் சாமிக்குத் தெரியும் தானே'' எண்டு முடித்தார்.

''நான் விரதமெண்டால் இஞ்ச கோயில் பூசை கண்டுதான் சமைக்கிறனான்'' எண்டு பெருமையடிச்சா கமலா மாமி.

கோயில் அய்யர் எல்லாரையும் கையில பூவை எடுக்கச் சொன்னார். அப்பதான் அவவுக்குப் பூ ஞாபகம் வந்தது.

''கனகம் உன்ரை பூவிலை கொஞ்சம் எடுக்கிறன். இண்டைக்குப் பாத்து எங்கடை வீட்டு மரத்திலை ஒரு பூவும் இல்லை'' என்றா மாமி.

ஒரு மாதிரி பூசைகளெல்லாம் முடிஞ்சு எல்லோரும் புதுக்காப்புக் கட்டிக்கொண்டினம். கமலா மாமியும் கட்டிக்கொண்டா. பிறகு வழமை போல கமலா மாமி கௌரிகாப்புப் பதிகம் படிச்சா.

வரேக்கை குழந்தை அக்காவுக்கும் ரெண்டு அரியதரம் குடுத்தா.

''ஒரு மாதிரி கௌரி நோன்பை முடிச்சுப் போட்டீங்கள், இனி எப்ப அடுத்த விரதம் வருது?'' எண்டா குழந்தை அக்கா நக்கலாக.

''நாளைக்கு கந்தசஷ்டி விரதம் தொடங்குதெல்ல. இந்தமுறை நான் ஆறுநாளும் உபவாசமா இருக்கப்போறன்'' எண்டு அப்பாவித் தனமாப் பதில்சொல்லிவிட்டுக் கிளம்பினா கடையிலிருந்து.

வீட்டுக்கு வந்தவுடனை நேராகப் பூசை அறைக்குப் போய் கந்தசஷ்டி கவசப் புத்தகத்தைத் தேடத் தொடங்கிட்டா, சாப்பாட்டையும் மறந்து.

❑

சொன்னதையே திருப்பிச் சொல்லாதீர்

–ஸ்ரீ. பிரசாந்தன்–

எவ்விதத்திலும் தாழ்விலாத
கவிதைச்
செவ்வரத்தம் பூ மலர்த்துவம்.

சிரிக்கும் பூவின் அழகுண்ணாமலும்,
தீமை எரிக்கும்
'சிவப்பு' நிறமெண்ணாமலும்,
அவ்விய நெஞ்சத்தால் அமுக்குவீர்,
எவ்விதத்திலும்
தாழ்விலாக் கவிதையை.

'ஈழத்துக் கவிதைப் பரம்பரை'
என்று
யாரேனும் தொடங்கினாற் போதுமே!
உடனே நீங்கள் ஒப்புவிப்பீர்கள்
மட மட என்று 'மகான்கள்' வரிசையை.

எமக்குக்
கேட்டுக் கேட்டுப் புளித்துப் போனதும்
உமக்குச்
சொல்லச் சொல்லச் சுவைப்பதும் ஆன
ஒரு சிறு வரிசையை நீட்டுவீர்.

மீண்டும் மீண்டும் நீட்டி முழக்குவீர்.

புரியமாட்டா சுலோகங்களாலே,
பூசை செய்யும் விமர்சனக் குருக்களே!

காலம் பிறகும் பிறகும் பெயர்வதை
உணரமாட்டா ஓர்மங் கொண்டீர்.

இதயந் தொலைத்து மூளை பெருத்தபின்
புதிய நடவுகள் தெரிவதில்லையோ?

எதிர்வரும் காலம் தோளிற் சுமக்கிற
நிகழ்வின் புத்திரரை அறியீரோ?

❑

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனவாதம்....
மதவாதம்....
இலங்கையைப்
பீடித்த
பாரிச வாதம்
இது!

பாவம்! நாடு
படுக்கையில் !

வாதம் தீர
வழியேயில்லை

மை போட்டுப்
பார்த்தாலும்
மர்மம் தீராது!

சோதிடர்களும்
நல்ல பலன்
சொல்ல மாட்டார்கள்

சத்தியசாயி பாபாவும்
சங்கடப்படுவார்.

எண் சாத்திரத்திலும்
இதற்கு இடமில்லை.

அகலிகைக்கு
உயிரளித்த
அயோத்தி ராமன்

இறந்து போன
லாசரை
எழுப்பிய
யேசு நாதர்

இவர்கள் போல
இன்னுமொருவர்
இங்கு வந்தாலும்
இலங்கை
எழுந்து நிற்காது!

என்ன காரணம்?

தெற்கு ஒரு நாளும்
திருந்தப் போவதில்லை.
தேசத்தின்
தலைவிதியே
இது தான்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

POOBALASINGHAM BOOK DEPOT

IMPORTERS, EXPORTERS, SELLERS & PUBLISHERS OF BOOKS, STATIONERS AND NEWS AGENTS.

Head Office :
340, 202 Sea Street,
Colombo 11, Sri Lanka.
Tel. : 2422321
Fax : 2337313
E-mail : pbdho@sltnet.lk

Branches :
309A-2/3, Galle Road,
Colombo 06, Sri Lanka.
Tel. : 4-515775, 2504266

4A, Hospital Road,
Bus Stand, Jaffna.

பூபாலசிங்கம் புத்தகசாலை

புத்தக விற்பனையாளர்கள், ஏற்றுமதி, இறக்குமதியாளர்கள், நூல் வெளியீட்டாளர்கள்

தலைமை :
இல. 340,202 செட்டியார் தெரு,
கொழும்பு 11, இலங்கை.
தொ. பே. 2422321
தொ. நகல் 2337313
மின்னஞ்சல் : pbdho@sltnet.lk

கிளை :
இல. 309 A–2/3, காலி வீதி,
கொழும்பு 06, இலங்கை
தொ. பே. 4–515775

இல. 4A, ஆஸ்பத்திரி வீதி,
பஸ் நிலையம், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாபூஷணம் கவிஞர் ஏ. இக்பால்

அ.ஸ.மு.ராசீக்

1961 ஆம் ஆண்டு மார்ச் மாதம் அட்டாளைச்சேனை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் பயிற்சி ஆசிரியராக நுழைந்த காலத்தில் ஏ. இக்பாலோடு தொடர்பு ஏற்பட்டது. 45 வருடங்களாக அது இன்னும் தொடர்கிறது. அவர் இரண்டாம் ஆண்டு மாணவராக இருந்தார். பிற்காலத்தில் இலக்கியத் துறையில் வேரூன்றிய ஏ. இக்பால், பஸீல் காரியப்பர், யூ. எப். ஏ. மஜீத், யூ. எம். குவைலித், மருதூர்க்கனி, ஆதம்பாவா போன்ற பலர் அங்கு அரும்பத் தொடங்கி இருந்தனர். ஏ. இக்பாலும், பஸீல் காரியப்பரும் இரட்டைக் கவிஞர்களாக அங்கு அறியப்பட்டிருந்தனர். ஒரே தலைப்பில் இருவரும் கவி புனைந்து அது பத்திரிகைகளில் வெளிவந்ததும், கவிதைத்துறைக்கான பரிசில்களைத் தட்டிக் கொண்டதும் இவர்களது சிறப்பம்சமாக அன்று கருதப்பட்டது.

கிழக்கின் அக்கரைப்பற்றில் பிறந்து மேற்கின் தர்கா நகரில் வாழ்ந்த றிபாயா ஆசிரியையை மணந்து அங்கு வாழத் தொடங்கியது முதல் கிழக்குக்கும் மேற்குக்கும் ஓர் இலக்கியப் பாலமாய் அமையும் வாய்ப்பு இக்பாலுக்குக் கிட்டியது முஸ்லிம் இலக்கிய உலகிற்குக் கிடைத்த பாக்கியமாகவே கொள்ளலாம்.

கவிஞர், சிறுகதை ஆசிரியர், விமர்சகர், பத்தி எழுத்தாளர், நூலாசிரியர், வெளியீட்டாளர், பாடநூலாசிரியர், சமூக ஊழியன் எனப் பல வெட்டுமுகங்களைக் கொண்டது இவரது வாழ்க்கை. இவை அனைத்திற்கும் ஊடு பாவாகத் திகழ்வது அவர் செய்த ஆசிரியர் தொழிலாகும். இத்தொழிலின் மூலம் தமது திறமைகளையும், சிந்தனைகளையும் வெளிப்படுத்த முடிந்ததோடு, ஆளுமை மிக்க மாணவர் குழு ஒன்றையும் இக்பாலினால் உருவாக்கும் வாய்ப்பும் கிட்டியது.

ஈழத்துத் தமிழ் – முஸ்லிம் இலக்கிய உலகில் இக்பாலின் திறமைகட்காக அவர் போற்றப்படுவதோடு அவரது துணிச்சல் மிகுபேனாவும், நாக்கும் நண்பர்கள் படைப்பாளிகள் மத்தியில் ஒரு வித அச்சம் கலந்த கௌரவத்தையும் அவருக்குப் பெற்றுக் கொடுத்துள்ளது. ஒரு முறை இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கம் ஓர் இலக்கியக் கலந்துரையாடலை நடத்தியபோது வில்லுப் பாட்டுத் தொடர்பாக அவருக்கும் அறிஞர் எஸ். கமால்தீன் அவர்கட்கும் இடையில் ஓர் காரசாரமான விவாதம் ஏற்பட்டது. அப்போது அவர் தனது பேனாவைத் தூக்கிக் காட்டி "ஸேர், இது தான் எனது ஆயுதம், இது இருக்கும் வரை நான் யாருக்கும் அஞ்சப் போவதில்லை. யாரும் பதில் சொல்வதானால் இந்தப் பேனாவுக்கே பதில் சொல்ல வேண்டும். எனக்கல்ல" என்று அவர் குறிப்பிட்டது இன்றும் நினைவுக்கு வருகிறது. கொள்கைரீதியாக எதிரியாகக் கொண்டவர்களையும் தனிப்பட்ட எதிரிகளாக அவர் ஒரு போதும் கருதுவதில்லை. அவரால் எழுதப்பட்ட "பண்புயர் மனிதர் பாக்கீர் மாக்கார்" என்ற நூல் இதற்கு நல்லதோர் சான்றாகும். அந்நூலில் அவர் குறிப்பிடும் கருத்து அவரது இலக்கிய வாழ்வுக்குச் சான்றாக அமைகின்றது. அங்கு அவர் "இந்நூலில் நானும் அதிகம் மிதக்கிறேன். சமூகத்தில் நானோர் அங்கம். இதை எழுதும் எழுத்தாளன் அதனால் இழையோடி மின்னுகிறேன்" என்று குறிப்பிடுகிறார். துணிச்சல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிக்கவராக அவர் காணப்பட்டாலும் அடுத்தவர் துயர்கண்டு உருகும் இளகிய மனம் படைத்தவர் என்பதனை அவரோடு நெருங்கிப் பழகுபவர்கள் அறிவர். அடுத்தவர் துயர் தீர்க்கச் சென்று தாம் துன்பத்தில் மாட்டிக் கொண்ட பல சந்தர்ப் பங்கள் அவரது வாழ்வில் உண்டு.

இளம் வயதிலேயே முற்போக்கு எழுத் தாளர் சங்கத்துடனும், அதன் அநுதாபிகளுடனும் ஏற்பட்ட தொடர்புகள் இவரது இலக்கிய நோக்கை ஒரு பரந்து பட்ட வெளிக்குக் கொண்டு சென்ற தோடு முற்போக்குப் படைப் பாளிகளுடன் ஓர் இணைப்பையும் ஏற்படுத் தியது. இவரது ஆரம்ப காலத்தில் வாழ்ந்த இளம் படைப்பாளிகள் பொதுவாக இடதுசாரிக் கண்ணோட்டத்துடனேயே காணப்பட்டனர். அதற்காக இவர்கள் மாக்சிய வாதிகள் என்று அர்த்தமல்ல. தாம் வாழ்ந்த காலங்களில் ஏழை மக்கள் வசதி படைத்தோரால் ஒடுக்கப்படுவது கண்டு இவர்கள் கொதித் தெழுந்தனர். இஸ்லாமிய சமூகத்தில் காணப்பட வேண்டிய சமவுடைமைப் பண்புகள் அங்கு இல்லாதது கண்டு தமது எதிர்ப்பைக் காட்டு வதற்கான ஓர் அமைப்பு அவர்கள் மத்தியில் காணப்படவில்லை. இதனால் அவர்கள் இயற்கை யாகவே இடதுசாரி முகாம்களுக்குள் தள்ளப் பட்டனர். அங்கு அவர்கட்கு உற்சாகமான வரவேற்பும், தமது கருத்துக்களை வெளிக் கொணரப் பொது மேடையும் கிடைத்தது. ஆனால் காலப்போக்கில் அவர்கள் சம உடமை வாதம் பேசும் இஸ்லாமிய இலக்கியவாதி களாக மாறத் தொடங்கினர். இவர்கட்கு நிறைய உதாரணங்கள் உண்டு. இக்பாலும் அவ்வாறான வர்களுள் ஒருவர் என்பது எனது கணிப்பீடாகும்.

இனி அவரது படைப்புகள் பக்கம் எமது பார்வையைச் செலுத்தலாம்.

அக்கரைப்பற்று ரோமன் கத்தோலிக்க மிஷன் பாடசாலையில் கற்கும் காலத்திலேயே இவரது முயற்சிகள் ஆரம்பமாகின. புகழ் பூத்த இலக்கியவாதிகளான எம். வை. எம். முஸ்லிம், அ. ஸ. அப்துல் சமது ஆகியோரது வழிகாட்டல்கள் இவருக்குக் கிடைத்தன. அங்கு "கலாவல்லி" என்னும் கையெழுத்துப் பத்திரிகையை இவர் நடத்தினார்.

பத்தொன்பது வயதிலேயே தினகரன் புதன் மலர் நடத்திய சிறுகதைப் போட்டியில் முதற்பரிசு பெற்றதன் மூலம் நாடறிந்தவரானார். ஆசிரியர் கலாசாலையில் பயிற்சிபெறும் காலத்தில் சுபைர் இளங்கீரனால் நடத்தப்பட்ட "மரகதம்" சஞ்சிகைக்கு இவர் எழுதிய 'சந்தர்ப்பம்' என்ற சிறுகதை அக்கரைப்பற்றுப் பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. பரபரப்பு என்பதனை இக்பாலின் இலக்கிய வாழ்வின் ஒரு அங்கமாகவே கொள்ளலாம். அறிஞர் அசீஸின் மறைவை ஒட்டி எச். எம். பி. மொஹிதீன் "அறிஞர் அசீஸ் சில நினைவுகள்" என்ற ஒரு நூலை வெளியிட்டார். இந் நூலுக்கான விமர்சனங்கள் பத்திரிகைகளில் வெளிவந்தன. அந்த நான்கையும் தொகுத்து நூல்விமர்சனம் என்ற நூலாக முஸ்லிம் எழுத்தாளர் மஜ்லிஸ் வெளியிட்டது. இந்நூலின் முக்கிய அம்சமாகத் திகழ்வது அதன் முன்னுரையே. நூலின் அரைவாசிப் பகுதியை நிரப்பிக் கொண்டிருக்கும் இம்முன்னுரையில் சமகால முஸ்லிம் எழுத்தாளர் களும், இலக்கியப் போக்குகளும் கடுமையான விமர்சனத்துக்கு உள்ளாக்கப்பட்டிருந்தன. இது சமூகத்தின் மத்தியில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. இம் முன்னுரையை மறைந்த எம். எப். எம். இக்பால், எம். எச். எம். ஷம்ஸ் ஆகியோருடன் ஏ.இக்பாலும் இணைந்து எழுதினர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இவர் எழுதிய சிறுகதைகள் பல பத்திரி கைகள், சஞ்சிகைகளில் வெளிவந்துள்ளதோடு சிறுகதைத் தொகுப்பாக "மாயத் தோற்றம்" என்று தொகுப்பும் வெளி வந்துள்ளது.

அக்கரைப்பற்று மாணவர் பேரவை 1971 ஆம் ஆண்டு இவருக்குக் "கவிஞர்" விருது வழங்கியது தொடக்கம் தனது பெயருக்கு முன்னால் கவிஞர் என்ற அடைமொழியை உபயோகிக்கத் தொடங்கினார். இவரது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதைகள் ஒரு காலத்தில் எளிமை நிரம்பியதாக இருந்தாலும், காலப்போக்கில் தீவிரமும் அதே நேரத்தில் ஆழமான, சில நேரங்களில் சிக்கல் நிரம்பிய ஒரு போக்கினை நோக்கி அவரது கவிதைப் பவனி வருவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. கவிதைக்காகப் பல்வேறு பரிசில்களும், விருதுகளும் பெற்று அவர் சாதனை படைத்துள்ளார். அவற்றுள் வட–கிழக்கு மாகாண இலக்கிய விருது, ஈழத்துப் பூதந் தேவனார் தமிழ்ப்புலவர் கழகம் வழங்கிய முதற்பரிசு, வேர்விலைப் பிரதேச செயலாளர் பகுதியில் நடைபெற்ற திறந்த செய்யுள் போட்டி முதற்பரிசு ஆகியவற்றைக் குறிப்பிடலாம். இவரது கவிதை நூல்களாக 'மௌலானா ரூமியின் சிந்தனைகள்', 'பிரசுரம் பெறாத கவிதைகள்', 'புதுமை' ஆகியவற்றைக் குறிப்பிடலாம். புதுமையில் வரும் கவிதைகள் ஆங்கில மொழிபெயர்ப்புடன் வெளி வந்திருப்பது ஒரு குறிப்பிடத்தக்க அம்சமாகும். அத்துடன் பாடசாலைத் தமிழ் நூல்களிலும், கவிதைச் செல்வம், காந்தி பாமாலை, முற்றத்து மல்லிகை கவிதைத் தொகுப்புக்களிலும் இவரது கவிதைகள் இடம் பெற்றுள்ளதுடன், தமிழ் நாட்டில் இருந்து வெளியாகிய அக்கரை இலக்கியத்திலும் வெளியாகி உள்ளன.

கவிதை மாத்திரமன்றி ஆராய்ச்சிக் கட்டுரைகளும் எழுதி அதில் வெற்றியும் கண்டுள்ளார். இவர் எழுதிய "மறுமலர்ச்சித் தந்தை" நூலுக்கு 1972 ஆம் ஆண்டில் சாகித்திய மண்டலப் பரிசு கிடைத்தது. அறிஞர் எம். சீ. சித்திலெப்பையைத் தமிழ் கூறும் நல்லுலகத்துக்கு அறிமுகப்படுத்துவதன் மூலம் மிக இளம் வயதிலேயே சாகித்திய மண்டல விருதினைப் பெற்றவர் என்ற சாதனையையும் இவர் தமதாக்கிக் கொண்டார். சமூகப்பிரக்ஞை உள்ள இக்பால் முஸ்லிம் சமூகத்துக்குப் பணியாற்றியவர்களின் வாழ்க்கைக் குறிப்புக் களைத் தொகுத்து 'முஸ்லிம்கலைச் சுடர் மணிகள்' என்ற நூலையும் ஆசிரியத் தந்தை ஐ. எல். எம். மஷ்ஹூர் அவர்களின் வாழ்க்கை வரலாற்றினை கல்வி ஊற்றுக் கண்களில் ஒன்று என்ற நூலையும், ஏற்கனவே குறிப்பிட்ட மறு மலர்ச்சித் தந்தை, பண்புயர் மனிதர் பாக்கீர் மாக்கார் என்ற நூல்களையும் வெளியிட்டுள்ளார். அத்துடன் நம்ப முடியாத உண்மைகள் இலக்கிய ஊற்று ஆகிய நூல்களும் வெளிவந்துள்ளன.

கவிஞர் என்ற முறைகளில் கவிதைகளை எழுதுவது மாத்திரமன்றி வானொலி, தொலைக் காட்சி, மற்றும் கவியரங்கங்கள் ஆகியவற்றில் வித்தியாசமான பார்வையுடன் கவிபடிப்பதில் இவர் வல்லவர். இலங்கை வானொலி முஸ்லிம் சேவையில் "கவிதைப் பொழிவு" என்ற நிகழ்ச்சியைத் தொடங்கி நடத்திய பெருமையும் இக்பாலுக்குண்டு.

லப்கி, அபூஜாவித், கீர்த்தி ஆகிய புனைபெயர்களிலும் எழுதிய இக்பாலின் கவிதைகள் உள்நாட்டில் மாத்திரம் அன்றி வெளிநாட்டுச் சஞ்சிகைகளிலும் பிரசுரமாகி உள்ளன. அவற்றுள் இஸ்லாமிய சிந்தனை, முஸ்லிம் முரசு, பிறை, நடை ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

தனது ஆக்கங்கட்காக கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் கலா பூஷணம் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்ட ஏ. இக்பால் அவர்கட்கு தேசிய இலக்கியப் பேரவை கலைஞர், இலக்கியமாமணி பட்டங்க ளையும், அல்–ஹிக்மா தொழில் நுட்ப நிலையம் இலக்கியவாருதி என்ற பட்டத்தினையும், அக்கரைப்பற்று மக்கள் மன்றம் இலக்கிய விற்பன்னர் பட்டத்தினையும், உலக இஸ்லாமிய இலக்கிய ஆராய்ச்சிக் கழகத்தினர் கௌரவப் பத்திரத்தினையும் வழங்கிப் பெருமைப் பட்டுள்ளனர்.

பத்தி இலக்கியத்திலும் இவர் நுழைந் துள்ளார். தினகரனில் "இவர்கள் இப்பொழுதும் வாழ்கிறார்கள்" என்ற பத்தி கூர்மை காரண மாகப் பின்பு நிறுத்தப்பட்டது. அதன் பிறகு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடந்தது நம்பினால் நம்புங்கள், என்ற ஒரு தொடரை எழுதினார். தினபதி இஸ்லாமியப் பகுதியில் அல் – முஜீப் என்ற புனை பெயரில் சன்மார்க்க வினாக்களுக்கு விடை எழுதியதன் மூலம் தமது மார்க்க அறிவை வெளிக்காட்டிய இக்பால் தற்போது "ஓலை"யில் இலக்கிய வாழ்வில் இடறிய சம்பவங்கள் என்ற தொடரினை எழுதி வருகிறார்.

இலக்கியவாதியாக இனங்காணப்பட்டுள்ள இக்பாலின் கல்விச் சேவைகள் போதிய அளவு மதிப்பீடு செய்யப்படாதது ஒரு குறையாகவே காணப்படுகிறது. தான் வரித்துக் கொண்ட கொள்கைகளினாலும், துணிச்சல் மிகு கருத்துக்களினாலும் பலரது எதிர்ப் பினைச் சம்பாதித்துக் கொண்டதன் பலனாய் அதிரடி மாற்றங்களுக்கு அவர் உள்ளானார். ஆயினும் சென்ற இடங்களிலெல்லாம் அவர் தமிழ்ப் பணியாற்றத் தவறவில்லை. சிறந்த மாணவர்களை உருவாக்கிய இக்பால் அளுத்கம ஆசிரியப் பயிற்சிக் கலாசாலையில் விரிவுரையாளராகவும் கடமையாற்றினார்.

தமது கல்விப்பணிகளில் உச்சக்கட்டமாக 1971 – 76ல் கல்வி அமைச்சின் பாடநூல் ஆலோசனை சபை உறுப்பினராகவும், 73 – 77 ல் இஸ்லாம் பாடநூல் உறுப்பினராகவும் கடமை யாற்றியதைக் குறிப்பிடலாம். இஸ்லாம் பாடம் 6 ஆம் புத்தகத்தின் பெரும்பகுதியும், 7 ஆம் புத்தகத்தின் முழுப்பகுதியும் இவரால் எழுதப் பட்டவை. தற்போதைய கல்வித் திட்டப்படி வாசிப்பு பகுதிகள் மிக நீண்டதாய் அமையாமல் சுருக்கமாக அமைய வேண்டும் என்ற கொள்கைப் படி வெளியிடப்பட்டுள்ள 10 ஆம், 11 ஆம் ஆண்டு நூல்களின் வாசிப்புப் பகுதிகளில் பெரும் பாலானவை ஏ. இக்பாலின் எழுத்துக்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

ஆயிரக்கணக்கான நூல்களைக் கொண்ட ஒரு நூலகத்தின் சொந்தக்காரராகிய ஏ. இக்பால் இலக்கியப் படைப்பாளிகட்கு உதவும் வகையில் அதனை ஒரு தகவற் களஞ்சியமாகவே பேணிவருகிறார்.

ஏ. இக்பால் தொடர்பான ஒரு பூரண மதிப்பீடு இது வரை செய்யப்படவில்லை. அப்படிச் செய்தால் அது தமிழ் முஸ்லிம் படைப் பாளிகளின் வரலாற்றுப் பதிவில் ஒரு மைல் கல்லாகவே அமையும் என்பதில் சந்தேகமில்லை. எனினும் இத்துறையில் சில முயற்சிகள் ஆங்காங்கே மேற்கொள்ளப்பட்டுள்ளன. பயிற்சி மாணவி ஏ. எச். றஜ புண்ணிசா "கவிஞர் இக்பால் கவிதைகள் ஒரு மதிப்பீடு" என்ற தலைப்பில் எழுதிய ஆய்வு கட்டுரை, நூல் வடிவம் பெற்றுள்ளது. சப்ரகமுவ பல்கலைக்கழக மாணவி ரிஸ்வானாவினால் இலங்கைத் தமிழ் இலக்கிய வரலாற்றில் கவிஞர் ஏ. இக்பாலின் படைப்பிலக்கியங்கள் என்ற ஆய்வுக் கட்டுரையும் எழுதப்பட்டுள்ளது. அத்துடன் ரமீஸ் அப்துல்லாவின் அம்பாறை மாவட்ட சிறுகதை வளர்ச்சியும் இக்பாலுக்கு முக்கியம் கொடுத் துள்ளது. நூலகவியலாளர் எம். ருமைஸின் BIBILIOGRAPHY OF THE WORKS OF A. IQBAL என்ற ஆக்க விபரப்பட்டியல் இக்பாலை ஆராயப் புகுவோருக்கு உதவக் கூடியதாகும்.

அண்மைக்காலங்களில் இலக்கிய விமர்சனத்துறையிலும் இக்பால் பிரகாசித் துக்கொண்டு வருகிறார். நூல் வெளியீட்டு நிகழ்ச்சிகளிலும், ஆராய்ச்சி, பட்டிமன்றங் களிலும், இவரது விமர்சனங்கள் உற்சாகத் துடன் எதிர்பார்க்கப்படுகின்றன. ஏறத்தாழ சுமார் 30 விமர்சன ஆய்வு உரைகளை இவர் படித்துள்ளார், இலக்கிய வரலாற்றுப் போக்கு களை இனங்காண விரும்புவோருக்கு இவை பெரிதும் உதவுபவையாகும். இவற்றின் மூலப் பிரதிகள் இவரிடம் உண்டு.

இக்பால் மேலும் பல படைப்புக்களை தர முன்வரவேண்டும். அதே நேரத்தில் ஈழத்துத் தமிழ் முஸ்லிம் படைப்பிலக்கியவாதிகளும், ஆராய்ச்சியாளர்களும் இக்பாலின் படைப்புக் களைப்பற்றிய ஒரு பூரண ஆய்வை நிகழ்த்தி அதனைப் பதிந்து வைப்பது காலத்தின் கட்டாயமாகும்.

❑

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரிய ஒளிக்கதிர்கள் குண்டூசியாய் உச்சியைக் குத்த... நிழல்கள் பாதத்தடியில் குவிகின்ற நேரம்... மத்தியானம் பன்னிரண்டு மணி... பாரதி விளையாட்டு மைதானத்தில் கிழக்குப் பக்கமாகவுள்ள வேப்பமரத்தின் கீழ் நண்பர்கள் கூடிவிட்டனர். தேவராசன், குமார சாமி, பாலசுந்தரம், சர்வேஸ்வரன்... இப்படிப் பத்துப்பேர் நிற்கின்றனர். அனைவரும் குகனின் ஆத்ம நண்பர்கள்! பிறந்தநாள் குளுத்திக்கு அழைக்கப்பட்டவர்கள்...

அனைவரும் குகனின் வருகைக்காகக் காத்திருக்கின்றனர். இன்று அவன்தான் நாய கனும், உபயகாரனும்!

"குகன் பத்துமணி போலத்தான் ரவுணுக்குப் போனவன்... அவன் சுளியன்... எப்பிடியும் வந்திடுவான்..." தேவராசன் தனக்குத் தெரிந்த செய்தியை வெளியிடுகின்றான்.

குகனுக்கு இன்று இருபத்திரண்டாவது வயது ஆரம்பம்... அவனின் இருபத்தி ரண்டாவது பிறந்த தினம்... அதற்காக தனது நண்பர்களுக்கு ஒரு 'குளுத்தி' செய்ய ஒழுங்கு செய்திருந்தான். இந்தப் பிறந்தநாள் 'குளுத்தியை' குகன் தனது வீட்டிலேயே ஒழுங்குபண்ணியிருப்பான். அதற்கு இரண்டு தடைகள்... தாண்டமுடியாத தடைகள்... முதலாவது அவனைப் பெற்றவனான தம்பி ஐயா... அவன் இவைகளை விரும்புவதில்லை... இரண்டாவது அவனின் வீடு... கால்நீட்டியிருக்க ஒரு நல்ல பாய்கூட இல்லை... மூன்றாவது காரணமும் ஒன்றுண்டு... தாய்க்கோ, சகோதரி களுக்கோ விருந்தினரை வரவேற்று 'நெளிக்கும்'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாகரிகம் தெரியாது... அதனால்தான் குகன் பிறந்தநாள் குளுத்தியை விளையாட்டு மைதானத்தில் ஒழுங்கு செய்தான்!

கிருஸ்ணகுகன்– இவனுடைய பிறப்புச் சாட்சிப் பத்திரத்திலுள்ள பெயர் இதுதான். நீளமான இப்பெயரைச் சுருக்கி கிருஸ்ணன் என்றுதான் வீட்டில் அழைத்தனர். இவன் வளர்ந்து, சமூகத்தோடு தன்னை ஒப்பிட்டுப் பார்க்கின்ற பக்குவம் பெற்றபோது கிருஸ்ணன் என்ற பெயர் அவனுக்கு அநாகரிகமாகப்பட்டது! தனது பெயரைக் 'குகன்' என்று தானே மாற்றிக் கொண்டான்!

ஏறத்தாழ முக்கால் மணிநேரத்தின் பின்பு குகன் வந்து சேர்ந்தான்.

"குகன்... ஏன் மச்சான் லேற்..." தேவராசன் கேட்கிறான். தேவராசன் குகனோடு மிகவும் நெருக்கமானவன். கொழும்பு– யாழ்ப்பாணம் ஓடுகின்ற மினிபஸ்ஸில் வேலை செய்கின்றான். பிரயாணிகளைச் சேர்த்துக் கொடுப்பதும், துணைக்கு ஆள் இல்லாவிட்டால், துணையாகச் செல்வதுந்தான் இவனது வேலை.

"எத்தினை அலுவல் மச்சான்... சரஸ்வதி விலாசிலை சோற்றுப்பார்சல்... மலாயன் கபேயிலை வடைப்பார்சல்... றொலேக்சிலை... றோல், பற்றிஸ் பார்சல்... பிறகு வாழைப் பழக்கடை... அலை அலையெண்டு அலைஞ்சு... ஒருமாதிரி எல்லாவேலையையும் முடிச்சுப் போட்டான்..." குகன் தனது மேதாவித்தனத்தை வெளிப் படுத்திக் கொள்கிறான்.

"என்னைக் கேட்டிருந்தால் துணைக்கு வந்திருப்பன்..." குமாரசாமி பக்கவாத்தியம் வாசிக்கின்றான். குமாரசாமி படு சோம்பேறி... நசியலன்... வெல்டிங்வேலை செய்பவன் கிழமையில் ஐந்து நாட்களும் லீவுதான்!

"குகன்... நீ எட்டாம் நம்பர்காரன்... எட்டாம் நம்பர்காரர்சுளுவானவங்கள்... எதையும் வெற்றி கரமாய் செய்து போடுவங்கள்..." சர்வேஸ்வரன் கூறுகிறான். இவன் மிகவும் நல்லவன் குகன் பிறந்தநாள் குளுத்தி பற்றிக்கதைத்தபோது இவன் மட்டுந்தான் "மச்சான் கொப்பர் கஸ்டப்பட்டு உழைக்கிற காசை... ஆத்திலை கரைக்காதை... பிறந்தநாள் கொண்டாட்டம் தேவையில்லை" என்று மறுத்தான். ஆனால் குகன் அவனது ஆலோசனையை ஏற்றுக் கொள்ளவில்லை.

"மச்சான்... நான் எட்டாம் நம்பர்க்காரன் மட்டுமில்லை 'அத்த' நட்சத்திரக்காரனும்... எங்கையும் என்ரை முகம் செல்லுபடியாகும்..." குகன் கூறிக்கொள்கிறான்.

"எட்டாம் நம்பர் உச்சமான நம்பர் மச்சான்... உசத்திப்போட்டுத்தான் விடும்..." பாலசுந்தரம் ஒத்தூதுகிறான்

"மச்சான்... நீங்கள் இருந்து பாருங்கோ... நான் வெளிநாட்டுக்கு போறது போறதுதான்... திரும்பி வரயுக்கை 'பஜிறோ'விலைதான் வந்திறங்குவன்... எங்கடை றோட்டிலை புழுதி கிளம்ப நான் 'பஜிரோ' ஓடாட்டி நான் குகனில்லை..."குகன் சபதம் செய்கிறான்.

குகன் கொண்டுவந்த பார்சல்களை ஒவ் வொன்றாக எடுத்து வெளியே வைக்கின்றான். பார்சல்களின் சூடு இன்னமும் ஆறவில்லை...! மலாயன் கபேயின் வடையின் தனித்துவமான வாசனை...

கடற்கரையை நோக்கிச் செல்கின்ற பிரதான வீதியுடன் மீன்கடையை மருவிச் செல்கின்ற சிறிய வீதி சந்திக்கும் சிறிய முச்சந்தி. அந்த முச்சந்தியில் ஒரு சலூன், சலூனை அடுத்து ஒரு லோன்றி... சலூனுக்கு பக்கத்தில் சிறியதொரு ஒழுங்கை. ஒரு சைக்கிள் மட்டும் செல்லக்கூடிய மிகச்சிறிய ஒழுங்கை... அந்த ஒழுங்கையின் தொங்கலில்தான் குகனின் வீடு... கொட்டில்... அமைந்திருக்கின்றது.

மிகவும் நெருக்கமாக அமைந்த, ஏறத்தாழ இருபது வீடுகளிருக்கும்... பொருளாதாரத்தில் 'பொக்கணையும்' காய்ந்துபோன... குடும்பங்கள்! இந்த நிலம் அரசாங்கத்துக்குச் சொந்தமான தென இப்போதும் இப்பகுதியில் பேசப்பட்டு வருகின்றது.

தம்பியையா– இவன்தான் குகனுக்குத் தகப்பனானவன். மல்லிகா– தொப்புள் கொடியால் உணவு கொடுத்த தாயானவள். தம்பியையா மல்லிகாவைத் திருமணம் செய்து ஐந்து வருடங்கள் 'பூச்சிபுழு' பிடிக்கவில்லை! நேர்த்தி வைத்து... விரதம் இருந்து... இவைகளுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலால் செல்லத்தம்பி வைத்தியரிடம் வைத்தியமும் செய்து... எது பலித்ததோ... அது ஆண்டவனுக்குத் தான் வெளிச்சம்... மல்லிகா ஒரு ஆண் குழந்தையைப் பெற்றெடுத்தாள். அருமை பெருமை யாகப் பிறந்த அந்த ஆண் பிள்ளைக்குப் பெயர் வைக்க தம்பியையா அலைந்த அலைச்சல்...

"நான் படிப்பு வாசனை இல்லாதவன்... என்ரை புள்ளையைப் படிக்கவைக்கவேணும்... அதுக்கு மாதிரியான ஒரு பேர் வைக்க வேணும்..." தம்பியையா இப்படித்தான் கூறிக்கொண்டான். எத்தனையோ பெயர்கள் தெரிவுசெய்யப்பட்டு இறுதியில் 'கிருஸ்ண குகன்' என்ற பெயர்தான் அவனது மனத்தில் ஒட்டிநின்றது.

அதையே வைத்துவிட்டான்!

கிருஸ்ணகுகன் பிறந்த பலனோ, என்னவோ.. அடுத்தடுத்த வருஷங்களில் 'அமளியாக' இரு பெண்பிள்ளைகள் பிறந்தனர்...

தம்பியையா முன்யோசனை உள்ளவன். தானும் ஒரு குசேலராகிவிடக்கூடும் என்ற பயத்தில், காதும் காதும் வைத்ததுபோல மல்லிகாவை ஆஸ்பத்திரிக்குக் கூட்டிச்சென்று கருத்தடை செய்து கொண்டான்.

பிள்ளைப் பாக்கியம் வேண்டி... நேர்த்தியில் ஆரம்பித்து 'நேசிங்கோமில்' முடிவுற்றது!

தம்பியையா மிகவும் நல்லவன் கட்டையான மெலிந்த தோற்றம்... இலேசான வாக்குக்கண்... உன்னிப்பாக அவதானித்தால் தெரியும். நன்றாகப் பாடுவான். கேள்வி ஞானம் மட்டுந்தான்... பாட்டின் கருத்தை விளங்கி, அனுபவித்துப் பாடும் தன்மையுள்ளவன்.

திறமைகளும் செழிப்பான இடங்களில் பிறக்கவேண்டும், அப்போதுதான் வளர்ச்சியும், பெருமையும் பெறும்...

மரம் அரிவது இதுதான் இவனது தொழில். ஒரு ஆளை மறைக்கக் கூடிய கிடங்கு, ஒரு ஆளைவிட உயரமானவர்... ஒருவர் கிடங்கில் நின்று இழுப்பார், மேலே நிற்பவர் தள்ளுவார்... கூதல் அடித்த கோழி சிறகுகளை விரித்தடிக்குமே அதுபோலத்தான் மரம் அரியும்போது ஒவ்வொரு முறையும் அவர்களது நெஞ்சக்கூடு கோழி இறகாக விரிந்து சுருங்கும்... தோள் மூட்டு வலிக்கும், மரத்தூள் உடலெல்லாம் ஒட்டிக் கொண்டு சுணைக்கும்.

இந்த அவலமான தொழிலுக்குள்தான் தம்பியையாவின் குடும்பம் அமிழ்ந்து... நகர்ந்து கொண்டிருந்தது...!

'பாலன் பஞ்சம் பத்து வருஷம்' என்று கூறுவார்கள் கிருஸ்ணகுகன் வளர்வான்... படிப்பான்... பொறுப்போடு சகோதரிகளைக் கரைசேர்ப்பான்... இப்படிப்பட்ட நம்பிக்கை களோடு தான் தம்பியையா தொழில் செய்தான்.

சராசரிப் பெற்றோர்களின் எதிர்பார்ப் புக்கள்... ஆவல்கள்... விழுதுகளின் நிழலில் கால் நீட்டிக் கஞ்சிகுடிக்கும் கற்பனைகள்...

இந்த வறுமையிலும் தம்பியையா தனது தகப்பனை வீட்டோடு வைத்துப் பராமரித்து, பக்கத்திலிருந்து பால் வார்த்து அவரை நிம்மதி யாக வழியனுப்பி வைத்தவன்... தான், தனது தகப்பனுக்குச் செய்த கடமைகளை தன்மகனும் தனக்குச் செய்வானென்று தம்பியையா அனுபவ ரீதியாக நம்பினான்.

கிருஸ்ண குகன்... க. பொ. த சாதாரண தரம் வரை முக்கித்தக்கி முன்னேறி... அரசாங்கப் பரீட்சைக்கும் விண்ணப்பித்து 'ரியூசன்' என்று பின்னேரங்களில் திரிந்து... பரீட்சை அன்று காலையில்... மல்லிகா விடியப்புறம் எழும்பி ஏதோ சமையல் செய்து... குகனை பரீட்சைக்கு அனுப்பத் தயாராக நின்றாள். தம்பியையாவும் மிகமகிழ்ச்சியோடு நின்றான்.

"என்னட்டைக் காரணம் கேக்காதை யுங்கோ... நான் முடிவெடுத்தால் எடுத்ததுதான்... நான் சோதனைக்குப் போகமாட்டன்... என்னை வெளிநாட்டுக்கு அனுப்புங்கோ..." இடி விழுந்தது போல்... குகன் இப்படிக் கூறினான்.

"குகன்... நீ ஒரு மனிசனாய் வரவேணு மெண்டால் படிக்க வேணும் ராசா... நீ முதல்லை சோத னைக்கு போ ராசா..." பெற்ற வனான தம்பி யையா கெஞ்சினான்!

"ராசா... குகன்... குழப்படி செய்யாமல் சோதினைக்குப் போ... நீ கெட்டிக்காரன்... கட்டாயம் பாஸ் பண்ணுவாய் போ அப்பன்..."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதல் நாள் தோய்த்து காயப் போட்டு, 'அயன் போடும்' வசதியில்லா ததால், மடித்து பெட்டிக் குக் கீழ் வைத்து 'அயன் போட்ட' உடுப்பை மல்லிகா நீட்டினாள்.

சகோதரிகள் அழுதனர்...

குகன் மறுத்துவிட்டான்!

"என்னை வெளிநாட்டுக்கு அனுப்புங்கோ நான் மனிசனாய் திரும்பிவாறன்..." குகன் வாய்ப்பாடு பாடமாக்குவதுபோல் இதையே திரும்பத்திரும்பக் கூறினான்.

தம்பியையா பரிதாபமாகக் குகனைத் திரும்பிப் பார்த்தான்.

"என்னை வெளிநாட்டுக்கு அனுப் புங்கோ... நான் மனிசனாய் திரும்பிவாறன்..." குகனின் வாக்கு மூலம்... தம்பியையாவின் உயிர்க்குருத்தை எரித்தது...!

'அன்னிய மண்ணில் 'மனிதத்தை' தேடப் போறியா...' தம்பியையாவின் மனம் மௌன மொழியில் அழுதது!

குடும்பம், சமுகம், சமயம், தாய்மொழி... பிறந்தமண்...

அப்பா, அம்மா, வாத்தியார்... உறவுகள்... அனைத்தையும் துறந்து... அன்னியமண்ணில்... ஒருமனிதம்!

தம்பியையாவின் வீட்டுப்படலையைத் தாண்டி மாணவர்கள் பரீட்சைக்கு செல்கின் றனர்... குகனோடு படித்தவர்களும்... மாணவர் களோடு வழியனுப்பும் பெற்றோர்களும்... எவ்வளவு, குதூகலமாகச் செல்கின்றனர்... தம்பியையா அந்தப் பாக்கியத்தை இழந்து நின்றான்!

"உவன் அத்த நட்சத்திரக்காரன்..." திமிர்க்குணம்... உப்பிடித்தான் செய்யும்..." குகன் பிறந்தபோது எழுதப்பட்ட ஜாதகக் குறிப்பைக் கூறி சூழ்நிலையைச் சமாளிக்க முயல்கிறாள் மல்லிகா.

"நீ எல்லாத்துக்கும் கடவுளையும், சாத்தி ரத்தையும் சாட்டிப் போடுவாய்... நான் படிக்காமல் எவ்வளவு வேதனைப்பட்டனான்... எனக்குப் படிக்க வசதியில்லை... பஞ்சம்... என்ரை புள்ளையும் என்னைப்போலை..." தம்பியையா கூறமுடியாமல் தேம்பித் தேம்பி அழுதான்!

"நான் முடிவெடுத்தால் எடுத்ததுதான்... என்னை வெளிநாட்டுக்கு அனுப்புங்கோ..." குகன் நங்கூரமாய் நின்றான்.

இந்தச் சம்பவம் நடந்து முடிந்து ஐந்து ஆறுவருடங்களாகி விட்டன... இப்போது குகன்...

...காதுச் சோணைகளை மறைத்து வளர்ந் திருக்கும் தலைமயிர், டெனிம் ஜீன்ஸ், கறுப்பில் வெள்ளைப்புள்ளி போட்ட நீளக்கை சேட் ஒண்டரை அங்குல அகலமான பெல்ட்... தடித்த ஒரு சப்பாத்து... வலது கையில் ஒரு செம்புக்காப்பு, கழுத்தில் ஒரு வெள்ளிச்சங்கிலி... காலையில் எட்டரை மணிக்கெல்லாம் வீட்டி லிருந்து புறப்படுவான்... இரவு ஒன்பதரை மணிக்கு பின்பு தான் வீட்டுக்குத் திரும்புவான். சில வேளை இரண்டு மூன்று தினங்களுக்கும் வரமாட்டான்

மல்லிகா... குகனைப் பெற்றவள்... அரிக்கன் லாம்பை தணித்து வைத்து... குசினிக் குந்தில் இவனது வரவுக்காக காத்திருப்பாள்... அன்றைய தினம் அவன் வராவிட்டால், மறுநாள் தம்பியை யாவுக்குத் தெரியாமல் குகனின் நண்பர்கள் வீடுகள் ஒவ்வொன்றாய் ஏறி இறங்குவாள்.

"குகன் கொழும்புக்குப் போறதாய் சொன் னவன்..."

"குகன் வவுனியாவுக்குப் போகவேணு மெண்டு கதைச் சவன்..."

இப்படித்தான் அவர்கள் கூறுவார்கள்.

குகனின் நண்பர்கள் ஒருவரைக்கூட மல்லிகாவுக்கு பிடிப்பதில்லை... அனைவருமே ஏதோ ஒரு காரணத் தால் இடையில் படிப்பை முடித்துக் கொண்டவர்கள்...

இவர்கள்தான் குகனின் நண்பர்கள்... ஒவ்வொருவரின் இயல்பு கள்தான் அவர்களுக்குரிய நட்புகளைத் தெரிவு செய்கின்றன.

அந்த நட்புகளே நம்பிக்கைக்குரிய ஆசான்களாகி விடுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குகனின் நம்பிக்கைக்குரிய அந்த ஆசான் களுக்கு இன்று பிறந்தநாள் குளுத்தி!

பாரதி விளையாட்டு மைதானத்து வேப்ப மரத்தடி கலகலப்பாக இருக்கின்றது. சாப்பாட்டுப் பார்சல், வடைப்பார்சல், றோல், பற்றிஸ் பார்சல்... வாழைப்பழம்... பீடா...

குகன் கீரோவாக நிற்கிறான்

'மச்சான்' குகன்... சின்னொரு குறை விட்டிட்டாய்..."

"என்னடா சொல்லு..."

"இதுகளோடை ஒரு குரங்கும்... எடுத் திருக்க வேணும்... அந்தமாதிரி... கொண் டெழும்பியிருக்கும்..."

"மச்சான் குரங்கு விளையாட்டெல்லாம்... வவுனியாவுக்கு அங்காலைதான்..."

"டேய் குகன்... சிகரட் வாங்கயில்லையே..."

"வாங்கிறன்... ஆனால் ஒண்டு... இதிலை யிருந்து பத்திமுடிச்சுப்போட்டுத்தான் வெளி யிலை போகவேணும்... ஆரும் கண்டிட்டால்... அது வேறை பிரச்சினையாய்ப் போகிடும்..."

குகனும் தேவராசனும் சிகரட் வாங்கப் புறப் படுகின்றனர். குகன் கெம்பீரமாய் முன்னே செல்ல தேவராசன் அவனைப் பின் தொடர்கிறான்.

குகன் என்ன நினைத்துக் கொண் டானோ... திடீரெனத்திரும்பி தேவராசனின் சேட் பொக்கற்றைப் பார்க்கிறான்... பார்த்தவன் ஏளனமாகச் சிரிக்கிறான்...

மச்சான் தேவா... உன்ரை சேட் பொக் கற்றுக்கை என்ன கிடக்கு..."

"சில்லறைக்காசு... காலமை பீடிக்குக்கூடக் காசில்லை அவள் தங்கச்சியின்ரை கொம்பாஸ் பெட்டியுக்கை பொறுக்கி எடுத்தனான்..."

"அந்தக்காசை வெளியிலை எடு..." குகன் இப்படிச் சொன்னதும் தேவராசன் தனது சேட்பைக்குள் கையைவிட்டு இருந்த சில்லறைக் காசு முழுவதையும் துளாவி எடுத்து தனது உள்ளங்கையில் வைக்கிறான். இரண்டு ரூபா, ஒருரூபா, ஐம்பதுசதம் குத்திகளாக... மொத்தம் பன்னிரண்டுரூபா...

"தேவா... சில்லறைக்காசுகளைப் சேட்பொக் கற்றிலை போட்டால்... பொக்கற் ஒரு பக்கத்துக்கு இழுபட்டு... குட்டிச் சாக்குமாதிரி... அசிங்கமாயி ருக்கும்... எங்களைப் பாக்கிறவை என்ன நினைப் பினம்... அப்பிடிச் சில்லறைக்காசு வந்திட்டால்... ஆரேன் பிச்சைக்காரருக்குக் குடுத்துத் துலைக்கவேணும்... இல்லாட்டி ஜீன்ஸ் பொக் கற்றுக்குள்ளை போடவேணும்... ஜீன்ஸ் பொக் கற்றுக்குள்ளை போட்டாலும்... கிலுகிலுக்கும்...

...நான் பொதுவிலை சில்லறைக் காசை தொர்றதில்லை... தொட்டால் பிரச்சனை..." குகன், தான் பணத்தோடு பழகிக் கொள்ளும் நாகரிகத்தை பெருமையாக வெளிப்படுத்திக் கொள்கிறான்.

தேவராசன் அந்தச் சில்லறைக்காசுகளை... தங்கச்சியாரின் கொம்பாஸ் பெட்டிக் குள்ளிருந்து களவெடுத்த அந்தச் சில்லறைக் காசுகளை... பக்குவமாக தனது ஜீன்ஸ் பொக்கற்றுக்குள் போட்டுக் கொள்கிறான்.

இருவரும் விளையாட்டு மைதானத்தைத் தாண்டி, பிரதான வீதியில் மிதந்து கடையை அண்மித்துக் கொண்டிருக்கின்றனர்

"மச்சான் தேவா... எப்பிடியெண்டாலும் வெளிநாட்டுக்குப் போனால்தான் மனிசனாய் வரலாம்... படிச்சு என்ன செய்யிறது... மிஞ்சி மிஞ்சிப் போனால்... வாத்தி... இல்லாட்டிக் கிளாக்கு வேலை... உந்தச்சம்பளம் என்னத் துக்குக் காணும்... நான் எப்படியும் வெளிநாட் டுக்குப் போறது போறதுதான்..." குகன் கூறிக் கொள்கிறான்

பிறந்தநாள் குளுத்தி.

குகன் தனது தேவைகளைத் தாயிடந் தான் தெரிவிப்பான். சில தினங்களுக்கு முன்பு தகப்பன் இல்லாத நேரம் பார்த்து தனது குளுத்தித் திட்டத்தை தாயிடம் வெளிப் படுத்தினான்.

"அம்மா எனக்கு ஆயிரம் ரூபா காசு வேணும்" சர்வசாதாரணமாக அவன் கூறினான். மல்லிகா திகைத்துப்போனாள்

"என்னத்துக்கு..."

"பிறந்த நாளுக்குப் 'பாட்டி' வைக்க..."

"மாரிகாலம் வரப்போகிது... வீடுமேய வழியில்லை... பொட்டையளின்ரை சோதனைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காசுகள் கட்டயில்லை... உனக்குப் பிறந்தநாள்... என்னட்டைக் காசில்லை..."

"அம்மா... நான் சொன்னால் சொன்னது தான்... நான் பாட்டி வைக்கிறதெண்டு சொல்லிப் போட்டன்... எனக்கு ஆயிரம் ரூபா வேணும்..."

"குகன்... நான் ஒண்டு சொல்றன் செய்யிறியே..."

"என்ன..."

"கொய்யாவோடை சோடியாய் மரமரியிற தவத்தானுக்குச் சுகமில்லை... ஐயா மரமரியச் சோடி இல்லாமல் இந்தக்கிழமை முழுக்க தேங்காய் உரிக்கப் போறார். பாவம் அந்த மனிசன்... நீ ஐயாவோடை மரம் அரியப் போவேன்..."

"விசர்க்கதை கதைக்கிறாய்..." இப்படிக் கூறிய குகன் கோவத்தில் கையிலிருந்த தேனீர் கிளாசைச் சுளட்டி எறிகின்றான். அவ்வளவு கோவம் அவனுக்கு

"என்னடா..."

"என்னணை சொன்னனி... நான் மரம் அரியப் போறதே... மற்றவங்கள் என்னை மதிப்பங்களே... அம்மா நான் சொல்றதைக் கேள்... எனக்கு ஆயிரம் ரூபா காசு வேணும்... அடுத்தது... என்னை வெளிநாட்டுக்கு அனுப்புற ஒழுங்கைப் பாருங்கோ..." குகன் கதையை முடித்துக் கொண்டான்.

பாதிமனத்தில் பிள்ளைப்பாசம்... மீதிமனத்தில் வறுமை வெக்கை... வேதனை... வெறுப்பு... தம்பியையாவுக்குத் தெரியாமல் எப்படியோ ஆயிரம் ரூபாவைக் கொடுத்தாள்!

பெத்தமனம் பித்து... என்பார்களே... அதுதான்!

அந்த ஆயிரம் ரூபா அரிபட்டு... தொங்கலுக்கு வந்துவிட்டது... சாப்பிட்ட வாய்க்கு சிகரட் வேணும்.

கடைக்கு வந்து சேர்கின்றனர்.

"அண்ணை ஒரு பக்கட் கோல்ட்லீவ் தாருங்கோ..." குகன் நூற்றி ஐம்பது ரூபாவைக் கொடுக்கின்றான். சிகரட் பைக்கட்டும் காசும் கைமாறுகின்றது. கடைக்காரன் நூற்றுப் பதினாலு ரூபாவை எடுத்துக்கொண்டு முப்பத்தாறு ரூபா மிச்சம் கொடுக்கின்றான். ஒரு இருபதுரூபாத்தாள், ஒரு பத்துரூபாத்தாள், ஆறு ரூபா சில்லறைக்காசு... குகன் அந்த முப்பதுரூபா தாள் காசை மட்டும் எடுத்துக்கொண்டு, ஆறு ரூபா சில்லறைக்காசை அந்த மேசையில் விட்டு விட்டுப் புறப்படுகின்றான்

"தம்பி ஆறு ரூபா..." கடைக்காரன் நினைவு படுத்துகிறான்

"சில்லறைக்காசு வேண்டாம்..." குகன் திரும்பிப் பார்க்காமலேயே கூறிவிட்டு நடக்கின்றான்.

சில்லறைக்காசு பொக்கற்றை இழுக்கும், அல்லது கிலுகிலுக்கும்... நாகரிகம் இல்லை!

சாப்பிட்டவாய்க்கு சிகரட்டும் புகைத்து... பிறந்தநாள் குளுத்தி அட்டகாசமாய் நடந்து முடிகின்றது.

"குகன், குகன்தான்..." இப்படித்தான் நண்பர்கள் புகழ்ந்தனர்

பிற்பகல் ஐந்து மணியிருக்கும்... குகன் வீட்டுக்கு வருகின்றான்.

வீட்டுப் படலையடியில்... ஏறத்தாழ இருபது வெற்றுப் போத்தல்கள் அடுக்கி வைக்கப்பட்டிருக்கின்றன... மல்லிகா குந்தியமர்ந்திருக்கின்றாள்... வெற்றுப் போத்தல்களை வாங்குபவன் குனிந்து நின்று போத்தல்களைப் பகுதி பிரிக்கின்றான்.

குகன் நிற்கின்றான்... வீட்டுக் கோடியில் கிடந்த வெற்றுப்போத்தல்கள்... குகன் புரிந்து கொள்கிறான்...!

ஜாம் போத்தல் நான்கு, அரைப்போத்தல் பதினொன்று, முழுப்போத்தல் பத்து... வெற்றுப் போத்தல் வாங்குபவன் கணக்குப் பார்க் கின்றான்.

"ஜாம் போத்தலுக்கு ஐம்பது சதம், அரைப்போத்தலுக்கு எழுபத்தைஞ்சு சதம், முழுப்போத்தலுக்கு ஒருரூபா... மொத்தம் இருபது ரூபா, இருபத்தைஞ்சு சதம்... சரிதானே..." போத்தல் வாங்குபவன் மதிப்பிட்டுத் தொகையைக் கூறிவிட்டு...

காசை மல்லிகாவிடம் கொடுக்கின்றான். அத்தனையும் சில்லறைக் காசுகள்.

(தொடர்ச்சி 22ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதன்மை இடத்தில் 21ஆம் நூற்றாண்டிலும் கார்ல் மார்க்ஸ்

-த. சிவசுப்பிரமணியம்

“ஆயிரம் ஆண்டுகளின் சிந்தனையாளர்” வரிசையில் இந்த நூற்றாண்டிலும் முதன்மை இடத்தைப் பெற்றுள்ளவர் கார்ல் மாக்ஸ். ‘டாஸ் கப்பிற்றல்’ (DAS KAPITAL) சமதர்மதத்துவம் ஆகிய ஆக்கங்களின் முன்னோடி ‘தேடல்’ என்ற அவருடைய கவிதையை முதலில் தன் அன்புக்குரிய ஜென்னிக்கு எழுதி அனுப்பினார். “விமர்சனம் என்பது அறிவின் உணர்ச்சியல்ல. அது உணர்ச்சியின் அறிவு. அது சிறுகத்தியல்ல; அது ஒரு பெரிய ஆயுதம்” என்று விமர்சனத்திற்கு இலக்கணம் வகுத்தவர் கார்ல் மார்க்ஸ்.
‘மார்க்ஸின் தத்துவஞானம்’ காலத்தை வென்று அழியாவரம் பெற்று நிற்கின்றது. அது ‘விஞ்ஞானிகளின் விஞ்ஞானம்’

21 ஆம் நூற்றாண்டிலும் மனித குலத்திற்கு தலைமை தாங்கப் போவது ‘மார்க்சியம்’தான் என்பதை முதலாளித்துவ நிறுவனமான பி. பி. சி.யின் (B.B.C) கருத்துக் கணிப்பு மெய்ப்பித்திருக்கின்றது. லண்டன் பி.பி.சி நிறுவனம் கடந்த ‘ஆயிரம் ஆண்டுகளின் சிந்தனையாளர்’ யார் என உலகம் முழுவதும் நடாத்திய கருத்துக்கணிப்பில் அதிக எண்ணிக்கையானவர்கள் ‘கார்ல் மார்க்ஸ்’ அவர்களின் பெயரை முதலாவதாகத் தெரிவு செய்துள்ளனர். ஆகவே ‘மார்க்சியம்’ மீண்டும் மக்களுக்காக முன்நிற்கின்றது என்பதை நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

லண்டன் ஹைகோட்டில் 1883, மார்ச் 17 ஆம் திகதி ‘ஏங்கெல்ஸ்’ ஆற்றிய உரையின் கடைசி வாக்கியத்தில் மார்க்ஸ் – “அவரது பெயர் காலங்கள் தோறும் நிலைத்து நிற்கும்” என்று குறிப்பிட்டது எவ்வளவு நிதர்சனமான உரை என்பதை இன்றும் தெரிந்து கொண்டுள்ளோம்.

மார்க்ஸ் எழுதிய Das Kapital என்னும் நூல் 1867 ஆம் ஆண்டு வெளிவந்தது. மூல தனத்தின் முதற் தொகுதி வெளிவந்ததும் “உங்கள் உதவியால் மட்டுமே இது சாத்தியமாயிற்று” என்று ஏங்கெல்ஸ்சுக்கு மார்க்ஸ் கடிதம் எழுதினார். தோழமையின் பிரதிபலன் அது. முதலாளித்துவச் சுரண்டல் அமைப்பை தூக்கியெறிந்து ஒரு சோஷலிச சமூகத்தை, பொதுவுடமை சமூகத்தை கட்டியமைப்பதில் தொழிலாளி வர்க்கம் வகிக்க வேண்டிய பாத்திரத்தை மார்க்ஸ் கண்டறிந்தார். இன்று மார்க்ஸின் தத்துவங்கள் பற்றியும் அதன் விளக்கங்கள் பற்றியும் முதலாளித்துவ நாடுகள் உற்று நோக்கப்படுகின்ற நிலைப்பாடு ஏற்பட்டுள்ளது.

இன்று ஆசியாவின் பொருளாதாரம் கற்பூரமாகக் கரையத்தொடங்கியது. ஆசிய நாடுகளின் நாணய மதிப்புக்கள் தலைகுப்புற கவிழ்ந்தன. உலக சந்தை முழுவதும் பீதி பரவத் தொடங்கியது. “உலக முதலாளித்துவம் வெற்றிக்கொடி நாட்டி பத்தாண்டுகள் கூட ஆகவில்லையே! அதற்குள்ளாகவா நாம் நெருக்கடியில் சிக்கிவிட்டோம்.” என்ற தனது அதிர்ச்சித் தகவலை ‘லண்டன் பினாஸ்சியல் டைம்ஸ்’ பத்திரிகை வெளியிட்டுள்ளது. அக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரையில் டாஸ் கற்பிற்றலை (மூலதனம்) இன்னுமொரு முறை புரட்டிப் பார்ப்போம் என்றும் எழுதப்பட்டுள்ளது கவனிக்கற்பாலது. முதலாளித் துவ அமைப்பினால் பெரிதும் ஆதாயம் அடைந்தவர்கள் கூட "நம்முடைய வண்டி தொடர்ந்து ஓடுமா?" என்ற கேள்வியை எழுப்பத் தொடங்கிவிட்டார்கள். அவர்களுக்குப் பயம் பிடித்துவிட்டது. 'மார்க்சியம்' என்பது வார்த்தை அலங்காரங்களல்ல. அது இயற்கை, சமுதாயம், மனித சிந்தனை வளர்ச்சி குறித்த விஞ்ஞான மாகியுள்ளது. இதையே ஏங்கெல்ஸ் என்பவர் "மார்க்சியம் என்பது விஞ்ஞானங் களின் விஞ்ஞானம்" என்று கூறினார். நம்மை சுற்றியுள்ள உலகை விஞ்ஞான ரீதியாகப் புரிந்துகொள்ள ஒரு சித்தாந்த அடிப்படையாக மார்க்சியம் திகழுகிறது என்ற சொல் வலு வடைந்து வருகின்றது.

வாழ்நாளில் பெரும்பாலும் மனித குலத்துக்காக சேவை செய்வதற்கு ஏற்ற வகையில் ஒரு சூழலை நாம் ஏற்பாட்டு செய்து கொண்டால், எத்தனை சுமைகளும் நம்மை எதுவும் செய்துவிட முடியாது; பணிய வைத்துவிட முடியாது" என்று மார்க்ஸ் கூறியுள்ளார். என்னே! அவரின் தீர்க்க தரிசனம்.

"தானும் தன்னையொத்த முதலாளிகளும் தங்களது மந்தை மனப்பான்மையை கட்டுப் படுத்திக் கொள்ளாவிட்டால், இந்த மந்தையின் காலடியில் எல்லோரும் மிதிபட்டுச் சாக வேண்டியது தான்" என்று எச்சரிக்கை செய் கின்றார் மிகப் பெரிய கோடீஸ்வரனும் உலகச் சந்தை வணிகனுமான ஜோர்ஜ் சோரோஸ். பொருளாதார வல்லுநர்கள் கூறும் சமநிலைக் கோட்பாட்டைக் காட்டிலும் சிறந்த முறையிலான ஆய்வை நூற்றியம்பது வருடங்களுக்கு முன்னரே மார்க்சும் ஏங்கெல்சும் வழங்கி யுள்ளனர் என்று துணிந்து கூறலாம். "தற் போதைய அபாயம் கம்யூனிசத் திடமிருந்து வரவில்லை – சந்தை கடுங்கோட்பாட்டு வாதம்தான் இன்று நமக்கெதிரான அபாயமாகும்" என்று ஜோர்ஜ் சோரோஸ் கருத்து தெரிவித்துள்ளார். மசகு எண்ணெயின் விலையேற்றம் ஐக்கிய அமெரிக்கா, ஐரோப்பா நாடுகள் , ஆசிய நாடுகள் என்பவற்றுக்குச் சவாலாக வந்துள்ளது. எண்ணெய் உற்பத்தியில் ஐந்தாம் இடத்தி லிருக்கும் வெனிசுலா தனது எண்ணெய் ஏற்றுமதி வருமானத்தை தனது நாட்டு மக்களுக்கும், லத்தீன் அமெரிக்க நாடு களுக்கும் பகிர்ந்தளித்துவருகின்றது. அத்துடன் கியூபாவுக்கும் உதவி வழங்கி வருகின்றது. இவர் பொருளாதாரத்தை முடக்காமல் பரவலாக்கி யுள்ளார். அண்மையில் கத்தரினா சூறாவளி யினால் பெருமளவில் பாதிக்கப்பட்ட கறுப்பின மக்களுக்கு (அமெரிக்கர்கள்) நிவாரணப் பணிகளை மேற்கொள்வதில் பெரும் தாமதங்களை ஏற்படுத்தி மிகுந்த கஷ்டங்களை (உணவு, நீர் , உடுப்பு வழங்காமல்) கொடுத் துள்ளது அமெரிக்க ஏகாதிபத்தியம். அது மட்டுமல்ல அங்கு நிவாரணப் பணிகளுக்கு அனுப்பப்பட்ட அமெரிக்க இராணுவத்திற்குக் கூட உணவு, குடிநீர் வழங்கப்படவில்லை என்பதை இராணுவத்தினர் வெளிப்படையாகவே ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளனர். கியூபா ஜனாதிபதி காஸ்ரோ 1100 டாக்டர்களையும் மருந்துப்பொருட்களையும் உடன் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு அனுப்பி தனது மனிதா பிமானத் தைக் காட்டியுள்ளார். வெனிசுலா ஜனாதிபதியும் உடன் உதவமுன்வந்தார். மற்றவர்களிடம் கையேந்தும் நிலை இன்று அமெரிக்காவுக்கும் ஏற்பட்டு விட்டது. முதலாளித்துவம் முடங்கிக் கொண்டே செல்கின்றது. மனிதர்களின் உணர்வு களிலிருந்தும், சிந்தனைகளிலிருந்தும் மார்க்ஸை அகற்றுவதற்கு சகல சாகசங் களையும் சதா நேரம் செய்துகொண்டு இருந்தவர் களுக்கு அதிர்ச்சியாகத்தான் இருந்திருக்கும். இஸ்லாமிய எண்ணெய் வள நாடுகளின் பொருளாதாரத்தை சீரழிக்கும் நோக்கத்துடன் போர் தொடுத்தவர்கள் பல்லுடைந்து நிற்கும் காட்சியை உலகம் பார்த்து நிற்கிறது. முதலாளித் துவ ஆக்கிரமிப்பு களுக்குச் சாவுமணி அடிக்கும் நிகழ்வுகள் நடந்தேறிக் கொண்டிருக்கின்றன. இயற்கையின் சீற்றத்தால் பல லட்சம் மக்கள் இறந்தும், வாழக் கஷ்டப்படும் நிலையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமெரிக்காவில் காணமுடிகிறது. அமெரிக்கா பெரும் பொருளாதாரப் பின்னடைவை கண்டு கொண்டிருக்கிறது.

மார்க்ஸின் தத்துவமும் ஆராய்ச்சியும் மட்டுமே அவர்களால் வெல்ல முடியாத சக்தியோடு விளங்குகிறது. அது அடக்கப் பட்டவர்களுக்கும், ஒடுக்கப்பட்டவர்களுக்கும் மட்டுமே கருவியாக ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

இந்த தத்துவஞானி இலக்கிய ரசனை மிக்கவராக இருந்தாலும், மக்களை மனத்தில் நிறுத்தியே 'உலகம் என்னிடமிருந்து தோன்ற வேண்டும்' என்பதில் பற்றுறுதியுடன் செயற் பட்டார். தன் அன்புக்குரிய ஜென்னிக்கு 'தேடல்' என்னும் கவிதை ஒன்றை எழுதியிருக்கின்றார்.

என்னைக் கட்டிய தளைகளை நொறுக்கி
எழுந்தேன்.

எங்கே செல்கிறாய்
எனக்கொரு உலகம் தேடி
இங்கே அகன்ற பசும்புல்வெளிகளும்
கீழே கடல்களும்
மேலே விண்மீன்களும் இல்லையா?
உலகம் என்னிடமிருந்து தோன்ற
வேண்டும்
என் இரத்தத்தில் அது வேரூன்ற
வேண்டும்
என் ஆன்மாவின் மூச்சில் அது வசிக்க
வேண்டும்
நான் நெடுந்தூரம் அலைந்து சென்றேன்.

வாழ்க்கை பற்றி மார்க்ஸ் எப்படி நோக்குகின்றார் என்று பார்ப்போம். "வாழ்க்கை என்பது உணர்வுகளால் நிர்ணயிக்கப் படுவதில்லை உணர்வுகள் மனித வாழ்க்கையால் நிர்ணயிக்கப்படுகின்றன."

"உலகம் முழுவதற்கும் வெப்பமளிக்கிற சூரியன் மறைந்ததும் விட்டில்பூச்சி தனி மனிதர்களின் விளக்கு வெளிச்சத்தை தேடுகிறது". பிரச்சினைகளை விட்டு உணர்வு களுக்குள் தத்துவஞானம் சுருங்கி விடுவதை இப்படித்தான் மார்க்ஸ் குறிப்பிடுகிறார்.

ஜோன் காஸிடி என்பவர் 'நியூயோக்கர்' பத்திரிகையின் வணிகத்துறை செய்தியாளர். ஒரு முதலீட்டு வங்கியின் முதலாளியுடன் உரையாடும் போது அவர் "நியூயோர்க்கின் பங்குச் சந்தைத் தெருவில் நான் எந்தளவுக்கு நேரத்தைச் செலவிடுகிறேனோ அந்த அளவுக்கு மார்க்ஸ் கூறியது சரி தான் என்பதை நான் புரிந்து கொள்கின்றேன். முதலாளித் துவத்தை ஆய்வு செய்வதற்கு மார்க்ஸ் மேற்கொண்ட முறைதான் சரியானது என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை" என்றாராம். மார்க்ஸின் நூல்களை இது வரை படிக்காத செய்தியாளர் காஸிடி, ஆவலை அடக்க மாட்டாமல் முதன் முறையாக மார்க்ஸைப் படித்தாராம். மார்க்ஸிசம் தெரியாத இங்குள் ளவர்களும் இதைப் பின்பற்றுவார்களா? தெரியாததை தெரிந்து கொள்ளலாமல்லவா? "உலகமயமாக்கம், ஏற்றத் தாழ்வுகள், அரசியல் ஊழல், ஏகபோகமயமாதல், தொழில்நுட்ப வளர்ச்சி, உயர் கலாசாரத்தின் வீழ்ச்சி, தொடர்ந்து உயிர்த் துடிப்பை இழந்து வரும் நவீன வாழ்க்கையின் தன்மை – இவை பற்றியெல்லாம் ஆணி அடித்தாற் போலப் பேசும் மார்க்சின் எழுத்துக்களைக் கண்டேன். இதே விடயங்களைத்தான் இன்றைய பொருளாதார வல்லுனர்கள் ஏதோ புதிய பிரச்சனைகளாக கருதி எதிர்கொண்டு வருகின்றார்கள். சில நேரங்களில் மார்க்ஸின் கால்தடம் பதித்த பாதையில்தான் செல்கிறோம் என்பதை அறி யாமலேயே அந்தப் பாதையிலும் நடக் கிறார்கள்" இவை மார்க்ஸைப் படித்தபின் நியூயோர்க்கர் இதழில் காஸிடி எழுதிய விடயங்களாகும்.

மார்க்ஸ் கூறும் உண்மைக் கருத்துக்களை உற்றுநோக்குவோம்:

- "ஒரு குறிப்பிட்ட காலத்தின் தொழிலைப் பற்றிய எந்த ஞானமும் இல்லாமல் அந்த வரலாற்றுக் காலகட்டத்தை புரிந்து கொள்ளமுடியாது."
- "விமர்சனம் என்பது அறிவின் உணர்ச்சி யல்ல. அது உணர்ச்சியின் அறிவு அது சிறு கத்தியல்ல; அது ஒரு பெரிய ஆயுதம்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- "நில உடமையாளர்கள் எல்லோரையும் போல, தாங்கள் ஒரு போதும் விதைக்காத இடத்தில் அறுவடை செய்ய விரும்பு கிறார்கள்"
- "செல்வந்தன் ஒரு ஏழைக்கு எதைச் செய்தாலும், அவை அனைத்தையும் நிச்சயம் திரும்பப் பெற்றுக் கொள்கிறான்."
- "முதலாளித்துவ சமூகத்தில் மூலத னத்திற்கு சுதந்திரம் உண்டு. சுயமான அடையாளமும் உண்டு. ஆனால் மனிதர் களுக்குத்தான் சுதந்திரமும் கிடையாது. சுய அடையாளங்களும் கிடையாது."
- "ஒவ்வொரு காலத்திலும் ஆளுகின்ற கருத்துக்கள், அந்தக் காலத்தின் ஆளும் வர்க்கத்தின் சிந்தனைகளாகவே இருக் கின்றன."
- "தொழிலாளி எவ்வளவு செல்வத்தை உற்பத்தி செய்கிறானோ அந்த அளவுக்கு வறுமையில் வாடுகிறான். தொழிலாளி எவ் வளவு பொருட்களை உருவாக்குகிறானோ அந்த அளவுக்கு மலிவான வனாகின்றான். உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களின் மதிப்பு கூடுகிற அதே விகிதத்தில் உற்பத்தி செய்கிற மனிதனின் மதிப்பு குறைகிறது."
- "முதலாளித்துவ வர்க்கம் குடும்பத்தி லிருந்து அதன் உணர்ச்சிமயமான முகத்திரையை கிழித்தெறிந்து, குடும்ப உறவை வெறும் காசு பண உறவாய் சிறுமையுறச் செய்து விட்டது."
- "முதலாளித்துவம் அட்டையைப்போல் வாழும் உழைப்பாளிகளை உறிஞ்சியே வாழ்கிறது. அதிகமாக உறிஞ்ச உறிஞ்ச அது அதிகமாக வாழ்கிறது."
- "நாம் ஒரு புதிய கொள்கையுடன், இதுவே உண்மை. இதன்முன்னால் மண்டியிடுங்கள் என்று வறட்டுத்தனமாக உலகை நோக்கிச் சொல்லவில்லை. உலகின் சொந்தக் கோட் பாடுகளில் இருந்தே புதிய கொள்கைகளை உருவாக்குகிறோம்."
- "மனித விடுதலையின் தலை தத்துவ ஞானம். அதன் இதயம் பாட்டாளிவர்க்கம்."

மார்க்ஸின் தத்துவஞானம் காலத்தை வென்று அழியாவரம் பெற்று நிற்கின்றது.

❑

(18ம் பக்கத்தின் தொடர்ச்சி...)

ஐந்துரூபாகுத்திகள் இரண்டு, இரண்டு ரூபாகுத்திகள் நான்கு, ஒருரூபாகுத்திகள் இரண்டு, இருபத்தைந்து சதக்குத்தி அவனிடம் இருக்கவில்லை இருபதுரூபா...!

கோவிலில் தீர்த்தம் வாங்குவதுபோல்... மல்லிகா வலதுகையை நீட்டி, இடதுகையை வலதுகையின் கீழ்பிடித்து... நீட்ட... வியாபாரி சில்லறைக்காசுகளை அவளது கையில் வைக் கின்றான்... மல்லிகாவுக்கு அந்தக்காசு தீர்த்தந் தான்!

சில்லறைக்காசுகள்... குகன் மௌனமாக நிற்கின்றான்

வியாபாரி போத்தல்களுடன் விடைபெறு கின்றான்.

"எடி சின்னவள்... இந்தக்காசை கொண்டு போய் கடையிலை பாண்வாங்கிக் கொண்டு வா..." இரவுச் சாப்பாட்டை ஒழுங்கு செய்துவிட்ட திருப்தியோடு மல்லிகா பெருமூச்சு விடுகின்றாள்!

குகன்...?...!

சில்லறைக்காசுகள் பொக்கற்றை இழுக் கும்... அல்லது கிலுகிலுக்கும்...! நாகரிகம் இல்லை!... ❑

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைஞானம்

—பார்வையும் பதிவும் —

தேடலோன்

ஓவியப் போட்டி

சமாதான நடைமுறையைக் கட்டியணைப்பதற்கான செயலகமும் கல்வி அமைச்சின் சமாதானக் கல்விப் பிரிவும் இணைந்து சர்வதேச சமாதான தினத்தை முன்னிட்டு "இலங்கையில் சமாதானத்தின் வண்ணக் கோடுகள்" என்னும் தலைப்பில் அகில இலங்கை ரீதியில் பாடசாலைக்கிடையிலான ஓவியப்போட்டி நடத்தப்பட்டது. கொழும்பு லயனல் வெண்ட் கலாபவனத்தில் நடாத்தப்பட்ட இப்போட்டிக்கு கலாநிதி லெஸ்டர் ஜேம்ஸ் பீரிஸ், திருமதி பீரிஸ் பிரதம அதிதிகளாகக் கலந்து சிறப்பித்தனர். யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் கல்லூரி மாணவி செல்வி யாழினி சண்முகநாதன் இரண்டாம் பரிசையும், யாழ்ப்பாணம் ஒஸ்மானியா கல்லூரி மாணவன் செல்வன் எம். எம். இர்பான் ஐந்தாம் பரிசையும், யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி மாணவன் செல்வன் சிவபாலன் கௌசல்யன் ஆறாவது பரிசையும் பெற்றுக் கொண்டனர். பரிசில்கள் பெற்ற அறுவரில் மூவர் யாழ்ப்பாணப் பாடசாலைகளின் மாணவர்கள் என்பது குறிப்பிடற்பாலது.

'இரகசிய சிநேகம்' திரைப்படம்

இங்கிலாந்திலிருந்து வெளிவந்த 2 1/2 மணித்தியாலய வர்ணத் தமிழ்த்திரைப் படமான 'இரகசிய சிநேகம்' என்னும் திரைப்படத்தின் காட்சியும் அதைத்தொடர்ந்து கலந்துரையாடலும் நடைபெற்றது. இலங்கைத் தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம் இந்நிகழ்வை கொழும்பு ஆனந்தகுமாரசாமி மாவத்தையில் அமைந்துள்ள மகாவலி நிலையக் கேட்போர் கூடத்தில் நடாத்தியது. திரைப்படத் துறைசார்ந்தோர் மற்றும் இரசிகர்கள் கலந்து கொண்டு தத்தமது கருத்துக்களைத் தெரிவித்தார்கள்.

சரசவிய விருது

இலங்கையில் முதல் முறையாக 1962ம் ஆண்டு வெளிவந்த 'தோட்டக்காரி' என்ற திரைப்படத்தை தயாரித்த திரு. பி. எஸ். கிருஷ்ணகுமார் சரசவிய விருது வழங்கும் வைபவத்தில் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். அவரின் மரணத்தின் பின்தான் இவ்விருது வழங்கப்பட்டமை குறிப்பிடற்பாலது. லேக்ஹவுஸ் நிறுவனம் நடத்தும் 'சரசவிய' திரைப்பட விழாவில் முதன்முறையாக தமிழ்த் திரைப்படத்திற்கு விருது வழங்கப்பட்டுள்ளதாக லேக்ஹவுஸ் நிறுவனத் தலைவர் ஜனதாஸ பீரிஸ் தெரிவித்தார். இலங்கையில் இதுவரை 28 தமிழ் திரைப்படங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

'நாட்டியமாலை' நிகழ்வு

ஹட்டன் நிர்த்த நர்த்தனாலயவின் 'நாட்டியமாலை' நிகழ்வு ஹட்டன் மாணிக்கப்பிள்ளையார் ஆலய பிரதான மண்டபத்தில் கலைமணி ஸ்ரீமதி ஷாமினி ராஜதுரை அவர்கள் தலைமையில் நடைபெற்றது. பிரதம அதிதியாக கௌரவ வே. இராதாகிருஷ்ணன் அவர்களும் சிறப்பு அதிதிகளாக வ. செல்வராசா அவர்களும், திருவாளர்கள் என். பாலசுந்தரம், எஸ். லோகேஸ்வரன் அவர்களும் கலந்து சிறப்பித்தார்கள். 'நடனமாலை' பார்க்க மண்டபம் நிறைந்த கலாரசிகர்கள் கூடியிருந்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடன ஆசிரியை செல்வி இராணி சுலோச்சனா காத்தமுத்து அவர்களின் நட்டுவாங்கத்தில் நிகழ்ச்சி ஒழுங்கமைக்கப்பட்டது. அவர்களின் மாணவிகள் பலர் நிகழ்வில் பங்கேற்று தமது திறமையை வெளிக்காட்டினார்கள்.

இந்த நிகழ்ச்சிக்கான பாடல்களை ஸ்ரீ எம். உதயகுமாரனும், பக்கவாத்தியங்களை வயலின் சிவஸ்ரீ வே. சுப்பிரமணியக்குருக்கள், மிருதங்கம் வித்துவான் விஷாரதா நடராஜா ஜெயஸ்ரீபவன், ஓகன் திரு. என்டன்ராஜ் ஆகியோரும் வழங்க நிகழ்வு சிறப்புடன் நடந்தேறியது.

புகைப்படக் கண்காட்சி

'இலங்கை – ஒரு பெண்ணின் பார்வையில்' என்னும் தொனிப்பொருளில் இடம் பெற்ற இப் புகைப்படக் கண்காட்சி கில்பிறட் கிரெசன்ட் கலையரங்கில் நடைபெற்றது. அமெரிக்கப் பத்திரிகையாளரும், புகைப் படப்பிடிப்பாளருமான லெவேலின் பயார்டின் என்பவர் இப் புகைப்படங்களைக் காட்சிப்படுத்தினார். கடந்த மூன்று ஆண்டுகளாக இலங்கையில் தங்கியிருந்தபோது பிடித்த புகைப்படங்களை ஒன்று சேர்த்து பார்க்கும் சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்தமை பாராட்டுக்குரியது.

'மதமாற்றம்' நாடகம்

இலங்கை முற்போக்கு எழுத்தாளரான அமரர் அ.ந. கந்தசாமி அவர்களால் 43 வருடங்களுக்கு முன்பு எழுதப்பட்ட 'மதமாற்றம்' நாடகம் அண்மையில் மருதானை டவர் மண்டபத்தில் அரங்கேறியது. சிலோன் யுனைட்டட் ஆர்ட் ஸ்ரேஜ் இலங்கைத் தமிழ் நாடகத்துறையில் 32 வருடங்களாக நிலைத்து நின்று 34 நாடகங்களை அரங்கேற்றியுள்ளது. அமைப்பின் தலைவரும் நெறியாளருமாகிய திரு. கே. செல்வராஜன் 2005 ஆம் ஆண்டின் தேசிய நாடகவிழாவில் சிறந்த இயக்குனருக்கான விருதைப் பெற்றவர். அவரே 'மதமாற்றம்' நாடகத்தையும் இயக்கியுள்ளார்.

ஓவியப்பட்டறை

கொழும்பு விபவி கலைக்கூடத்தில் அண்மையில் ஓவியப்பட்டறை ஒன்று திருமறைக் கலாமன்ற ஓவியக் கலைஞர்களுக்கு வழங்கப்பட்டது. இவ் ஓவியப் பயிற்சிப்பட்டறையானது விபவி நிறுவனத்தின் தேர்ச்சி பெற்ற ஆசிரியர்களினால் ஓவியம், சிற்பம், வரைதல், படம் நிறம் தீட்டுதல் ஆகிய விடயங்களை உள்ளடக்கி நடாத்தப்பட்டது. இதில் திருமறை கலாமன்ற ஓவியக்கலை வட்டத்தைச் சேர்ந்த ஒன்பது கலை ஆர்வலர்கள் கலந்து கொண்டார்கள். இப் பயிற்சிப்பட்டறை இன, மத பேதமின்றி சமாதானப் புரிந்துணர்வுடன் அனைவரும் பங்குபற்றும் ஒரு களமாக அமைந்ததெனலாம். இளம் கலைஞர்களை மேம்படுத்தும் பல்வேறுபட்ட ஓவியத் தத்துவங்களை மேற்கொள்ளும் ஓர் அனுபவமாகவும் இருந்தமை இதன் சிறப்பு அம்சமாகும்.

நாட்டுக்கூத்துப் போட்டி

வடக்கு – கிழக்கு மாகாணமட்டத்தில் நடைபெற்ற தமிழ்மொழித்தினப் போட்டி இவ்வருடம் வவுனியாவில் நடைபெற்றது. நாட்டுக்கூத்துப் போட்டியில் யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி, மட்டக்களப்பு மாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்கள் பங்குபற்றி தமது ஆற்றல்களை வெளிக்காட்டினார்கள். இப் போட்டியில் செங்கலடி மத்திய கல்லூரி முதலாம் இடத்தைத் தட்டிக் கொண்டது. 'இராவணன் வதம்' என்ற இந்த வடமோடி நாட்டுக் கூத்தினை நா. சிவலிங்கம் நெறிப்படுத்த, மு. சிவஞானமூர்த்தி அண்ணாவியார் வடிவமைத்திருந்தார். வடக்கு – கிழக்கு மாகாண மட்டத்தில் நடைபெற்ற நாட்டுக் கூத்துப் போட்டியில் செங்கலடி மத்திய கல்லூரி தொடர்ந்து 7வது தடவையாகவும் முதலிடத்தைப் பெற்று சாதனை படைத்துள்ளது.

திரைப்படத்தில் கின்னஸ் சாதனை

திரைப்பட இயக்குநர் ராஜ்கதிர் 'காருண்யம்' என்னும் படத்தை 20 மணிநேரத்தில் தயாரித்து கின்னஸ் சாதனை படைத்துள்ளார். பி. கே. அறிவழகன் எழுதிய கதைக்கு – திரைக்கதை, வசனம், பாடல்கள், இசையையும் இயக்குநர் ராஜ்கதிர் ஏற்றுள்ளார். இப்படத்தில் பல புதியமுகங்களையே நடிக்க வைத்துள்ளார். முழுக்க முழுக்க டிஜிட்டல் தொழில்நுட்பத்தில் இந்தப் படம் உருவாக்கப்பட்டுள்ளது. உலகிலேயே மிகக்குறைந்த நேரத்தில் படமாக்கப்படும் வியாபார ரீதியிலான படமாக இது அமையும். ❑

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்களச் சிறுகதை

சரஸ்வதி

எஸ். பிரமிலானிஸா தில்றுக்ஷி

ஜயதிஸ்ஸ எழும்பும் போது அதிகம் மாலையாகி விட்டிருந்தது. பல தடவை எழுந்திருந்த போதும் குளிரினால் சுருண்டு போய்ப் படுத்திருந்தான்.

"தம்பி அதிகம் மாலையாகிட்டிது... எழும்பு"

ரமணி அக்காவினுடைய குரல் கனவினைப் போன்று கேட்டதனால் அவன் தூக்கத்தைவிட்டு எழுந்தான். "கனகாலமா இந்தப் பிரதேசம் தம்பிக்கு பழக்கமில்லைத் தானே..."

"ஓம் அக்கா இருபத்தாறு வருடத்திற்குப் பிறகுதானே இங்கை வந்திருக்கிறன்"

ஜயதிஸ்ஸ குளியலறைக்குச் சென்று முகம் கழுவிக் கொண்டான். அப்பொழுது குளியலறையில் சுடுதண்ணி ஒரு பேசனில் வைக்கப்பட்டிருந்ததால், அவனுக்கு குளிர் பற்றிய வசதிக் குறைவு இருக்கவில்லை. ரமணி தொழிலிருந்து இளைப்பாறுவதற்கு முன்பு என்றால் கண்ணாடி மேசையின் மீது பலவித முகப்பவுடர்கள், கொலோன் வகைகள் ஏழுஎட்டு இருந்திருக்கும். இன்று அங்கு இருப்பது தரம் குறைந்த பவுடர் ரின் ஒன்றே. ஜயதிஸ்ஸ கண்ணாடி முன் நின்று தனது தோளின் மீது போடப்பட்டிருந்த துவாயை சரிப்படுத்திக் கொண்டான். கண்ணாடியில் இடத்துக்கு இடம் பாதரசப் பூச்சு போயிருந்தமையால் கறைகள் தோன்றி இருந்தன. அங்கு இருந்த சீப்பை எடுத்து தலையைச் சீவ நினைத்தான். தனது தலைமயிர் அதிகமாக நரைத்திருப்பதைக் கண்டான். திடீரென தனது பின்பக்கத்தில் சரஸ்வதி இருப்பது போன்ற ஒரு பிரமை. அவளது நெற்றியில் வைத்திருந்த சிவப்பு நிற குங்குமப் பொட்டு மற்றைய நாட்களைப் போன்றே ஜயதிஸ்ஸவுக்கு மிகுந்த மனவிருப்பை ஏற்படுத்தியது.

"மஹத்தயா சரியான அழகு" ஜயதிஸ்ஸவுக்கு இதற்குப் பல வருடங்கட்கு முன்பு நிகழ்ந்த அந்த நிகழ்வு மனதில் மீண்டும் தோன்றியது. அவன் சீப்பினால் தனது தலைமயிரைச் சரிசெய்து கொண்டு அறைப்பக்கமாக பாதம் பதித்தான். ஜயதிஸ் ஸவின் சகோதரன் சாலையில் நீண்ட கதிரையில் உட்கார்ந்திருந்தான். அவனது இடது கையும் காலும் பாரிசவாத நோயினால் இயங்காமல் இருந்தது. தன்னைக் கண்டவுடன் ஆதரவற்றவனைப் போன்று சகோதரன் சிரித்ததைக் கண்டு தாங்கிக் கொள்ள முடியாத சோகம் ஜயதிஸ்ஸவுக்கு ஏற்பட்டது.

அறைக்குச் சென்று மேற்சட்டையை அணிந்து கொண்டு முற்றத்தில் இறங்கினான். முற்றத்தில் நின்ற மிகப்பெரிய மாமரம் அங்கு இல்லை. மாமரத்திற்குப் பதிலாக முற்றம் பூராவும் திருத்தப்பட்ட வீடு பெரிதாகி இருந்தது. முற்றத்தில் நின்று அவன் முன்பக்கம் பார்த்த போது தும்பற மலைத் தொடரும், கண்டி மலைத் தொடரும் நன்றாகத் தெரிந்தன. அவனது இடது புறத்தில் இராட்சத கல்.

"மஹத்தயா அங்கே இருப்பது ராட்சத கல்லின் முகட்டில் உரலும் உலக்கையும்" ஒரு நாள் சரஸ்வதி இராட்சதகல் பற்றி விபரித்த விதம் ஞாபகத்திற்கு வந்தது. உண்மையாகவே இராட்சத முகட்டில் மிகப்பெரிய வட்டவடிவமான சிறுமதிலும் அதற்குப் பக்கத்தில் கொஞ்சம் சிறிய கற்தூண் ஒன்றும் இருந்தன. பிரதேசவாசிகள்

மொழியாக்கம்: ஆறுமுகம் தங்கவேலாயுதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனை அறிமுகப் படுத்துகின்ற விதமாக சரஸ்வதியும் அவனுக்குச் சொல்லிக் கொடுத்தாள்.

"ஜயா மஹத்தயா... ஒரு வேளைக்கு இராட்சத கல்லுக்குப் போவம்"

சரஸ்வதி உதடுகளில் சிரிப்பைச் சிந்திய வண்ணம் கூறினாள்.

"ஏன் சரஸ்வதி போயிருக்கிறாயா இராட்சத முகட்டிற்கு"

"இல்லை... மனிசர் போறவை. உந்த தோட்டத்திற்கு மேல் போற தெரு. இதற்கு அங்காலை போனால் இராட்சதகல் இருக்கு"

ஜயதிஸ்ஸவின் மனதில் ஏதோ ஒரு உணர்ச்சி ஏற்பட்டது. ஏதுவித நோக்கமும் இன்றி அவன் மெதுவாக தெருவில் இறங்கினான். ஆனால் மனதில் சரஸ்வதியைச் சந்திக்க வேண்டுமென்ற ஏதோ ஒரு உணர்வு. பாதையின் இரு புறமும் நன்கு வளர்ச்சியடைந்த தேயிலைப் பற்றைகள். அதற்கிடையில் இடத்துக்கு இடம் உயரத்துக்கு மேலாக கிளைபரப்பிய சவுக்கம் மரங்கள், வேலை முடிவடைந்து முதுகில் தேயிலைக் கூடைகளைத் தொங்க விட்டுக் கொண்டு பெண்கள் இருவர் மூவர் முன்னால் சென்று கொண்டிருந் தார்கள். அவர்களது உடல் பலவீன மானது. வெற்றிலை சாப்பிடுவதன் காரணமாக சிரிக்கும்போது தெரிகின்ற கறுப்பு நிற பல்வரிசையைக் காணும் போதே விருப்பம் இல்லாமற்போகும். இருந் திட்டொரு தடவை வீசிச் செல்கின்ற பனித்துளிகளோடு கூடிய காற்று, உடலில் தூறல் மழை கிளர்ச்சி யேற்படுத்தும். ஜயதிஸ்ஸ சிறிது தூரம் தெரு நீளத்திற்கு பயணம் செய்து அங்கு உள்ள இரும்புப் பாலத்திற்குப் பக்கத்தில் நின்று கொண்டான். பாலத்திற்கு மேலே கற்சமவெளி நீளத்திற்கு பெருக் கெடுத்துப் பாயும் நீர் இடத்துக்கு இடம் நுரைக்குமிழ்களை எழுப்பியபடி பாய்ந்தது. ஜயதிஸ்ஸ பாலத்தில் சாய்ந்தபடியே அந்தப் பக்கம் பார்த்திருந்துவிட்டு மீண்டும் பாலத்தின் பக்கம் பார்த்தான். பாலத்தின் பக்கங்கள் இரண்டும் இரும்பி னால் அமைக்கப்பட்டிருந்தது. அது நீண்ட காலமாக புதுப்பிக் கப்படாமல் இருந்தது. தான் இருமுழங் கைகளையும் பாலத்தின் பக்கத்தில் வைத்திருந் தமையால் முழங்கை களிலும் இரும்புக்கறள் ஒட்டியிருக்கலாம் என நினைத்தான்.

"போவோமா யமு மஹத்தயா உடஹநீர்ப் பாதை பார்ப்பதற்கு... அந்த இடத்தில் கற்சுரங்கத்தண்ணீர் சரியான அழகு."

சரஸ்வதி அப்படி ஆலோசனை செய்த போது ஜயதிஸ்ஸவுக்கு அந்த ஆலோசனையை மறுக்க முடியாமல் இருந்தது.

"போவோம்" கற்சமவெளிக்கு இருவரும் மேலே ஏறினார்கள்.

"மஹத்தயா மூச்சு வாங்குகிறார்"

"இல்லை... அது பழக்கம் இல்லாத மையால்"

"இங்கை பாருங்கோ நான் சொன்னனான் தானே கல்லின் தண்ணீர் அழகு என்று..."

சரஸ்வதி அப்படிச் சொல்லிக்கொண்டு கற்சமவெளியில் உயர்ந்த இடத்தில் உட்கார்ந்து கொண்டார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“பாருங்கோ மஹத்தயாவினதும் எனதும் உருவங்கள் நீர்க்குழியில்” சரஸ்வதி சிரிப்பொன்றை சிந்தினாள். ஜயதிஸ்ஸவுக்கு தனது உள்ளத்தை கட்டுப் படுத்த இயலாமற்போனது. அவன் சரஸ்வதியின் கழுத்தை தனது இடது கரத்தினால் வளைத்து வலது கரத்தினால் அவளது முகத்தை அருகே கொணர்ந்து பல தடவைகள் முத்தமிட்டான். அவள் அதற்கு எவ்வித எதிர்ப்பையும் வெளிப்படுத்தவில்லை. பழைய நினைவுகள் ஒவ்வொன்றாக நினைவுக்கு வந்தபோது கற்சமவெளியின் உச்சிக்கு போக வேண்டு மென்று ஜயதிஸ்ஸவுக்குத் தோன்றியது.

அவன் தேயிலைப் பற்றைகளைப் பிடித்த வாறு கற்சமவெளியின் உச்சிக்கு ஏறி அங்கு கற்குழியில் தெளிவான நீரைப் பார்த்தான், அதனுள் அவனது உருவம் மாத்திரம் தெரிந்தது. சரஸ்வதியினுடைய உருவத்தினைக் காணாத மையால் மனதினில் துக்கம் உண்டானது. அவன் சுற்றுமுற்றும் பார்த்தான். சிறுமூங்கில் மானாப் புற்பற்றைகளினால் மூடப்பட்டு இருந்தது. அது முன்பு போல அழகிய இடம் அல்ல என்று அவனுக்குத் தோன்றியது. கற் சமவெளியி னின்றும் கெதி கெதியாக இறங்கிக் கொண்ட ஜயதிஸ்ஸ மீண்டும் பாலத்திற்கு அருகில் வந்தான், சரஸ்வதியின் வீட்டிற்குச் செல்லும் எண்ணத்தோடு. வீதியின் இரு மருங்கிலும் வளர்ந்திருந்த காட்டுச் சூரியகாந்திச் செடிகளில் பூக்கள் உயரே திரும்பி இருந்தன. முன்னால் தெரிகின்ற கோவிலுக்குப் பக்கத்தில் நிறம் நிறமான கவுண்களை அணிந்து கொண்ட மிகவும் சிறிய சிறுமியும், காளிசான் அணிந்து கொண்ட பிள்ளை ஒன்றும் கோவிலின் முற்றப்பக்கமாக போய்க் கொண்டிருந்தார்கள்.

கீழே தேயிலைத் தோட்டத்தின் மிட்டியா வத்தே லயத்தின் காம்பரா வரிசைக்குப் பக்கத்தில் வேலை முடிந்து வீட்டுக்கு வந்து கொண்டிருப் பவர்களது சப்தங்களும் கேட்டன. தெரு ஓரத்தில் தேயிலைப்பற்றைகளுக்கு நிழலுக்காக வைக்கப் பட்டுள்ள முள்முருக்கம் மரங்களின் இலைகள் கொட்டி மஞ்சட் படுக்கை போன்று தோன்றியது. கிலுகிலுப்பைக்காய்ச் செடி மஞ்சள் நிறப் பூக்களி னால் நிறைந்திருந்தது. தெரு ஓரத்தில் புல் மேய்ந்து கொண்டிருந்த கறுப்பும் வெள்ளை யுமான பசுக்கன்று ‘உம்பா’ என்று கத்திக் கொண்டு தாய்ப்பசுவிடம் ஓடிச்சென்றது. தான் சரஸ்வதியோடு தொடர்பு வைத்திருந்தது பற்றி ஒரு நாள் சகோதரன் ஏசி அடித்தமையால், மறுநாளே சரஸ்வதிக்கும் தெரிவிக்காமல் சென்றது தான் செய்த அநாகரீகச் செயல் என்பது அவனுக்கு மிகத் தெளிவாகியது.

ஜயதிஸ்ஸ இறுதியாக கல்விகற்றது ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைக் கழகத்தில். இறுதித்தடவை பரீட்சைக்கு சில நாட்களுக்கு முன் அவனது சகோதரன் அவனை வீட்டிற்கு வருமாறும், அவனுக்கு அரசியல் தொடர்புகள் உள்ளமையால் பரீட்சையின் முடிவுகள் வெளியாகிய உடனேயே தொழில் ஒன்றை ஏற்பாடு செய்து தரமுடியும் என்றும் தெரிவித்திருந்தான். அதன்படி பரீட்சை முடிந்தவுடனேயே ஜயதிஸ்ஸ தனது ஊருக்கு வரப்போவதில்லை என தாயாருக்கு கடிதம் ஒன்றை அனுப்பிவிட்டு சகோதரனின் வீட்டிற்கு வந்தான். அக்காலம் தொடக்கம் அவன் பல மாதங்கள் அங்கு தனியே காலம் கழித்தான். காலையில் கண்டி கச்சேரிக்கு கடமைக்குச் செல்லும் சகோதரன் மீண்டும் வீட்டுக்கு வரும்போது இரவு 7மணி அளவில் ஆகிவிடும். வீட்டில் தனிமையைத் தவிர்ப்பதற்கு வயது முதிர்ந்த பெண்மணி இருந்தாள். அவள் ரமணியினுடைய தூரத்து மாமி உறவான ஒருத்தி. வீட்டில் அனைத்து நடவடிக்கைகளும் சரஸ்வதியின் கரங்களினாலேயே மேற்கொள்ளப் பட்டன. காலையிலே வீட்டுக்கு வரும் சரஸ்வதி வீட்டு முற்றம் மற்றும் வீட்டையும் சுத்தம் செய்து பகல் உணவைப்போன்று இரவு உணவையும் தயார் செய்வாள் ஆயினும் அவள் எந்த ஒரு நாளுமே அங்கு உணவு அருந்தவில்லை. இரவாவதற்குமுன் “இஸ்கோலே நோனா நான் போறன்” என்று கூறிவிட்டு அவள் வெளியே செல்வாள்.

“சரஸ்வதி சாப்பிட்டுவிட்டுப்போ”

ரமணி அவளுக்கு எந்தளவு நம்பிக்கையோடு இரவு உணவு அருந்துவதற்கு அழைப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுத்தாலும் அவள் அதனை ஏற்றுக் கொள்ள வில்லை. சரஸ்வதி நல்லவளைப் போன்று அழகும் உள்ள தமிழ் யுவதி. அவள் இந்திய வம்சாவழியாக இருந்தாலும் அவளது பெற்றோர் தோட்டத்தில் வேலைக்குச் செல்வதில்லை. அவளது தகப்பன் நாவலப்பிட்டி வர்த்தக சந்தையில் மரக்கறி கடை ஒன்றின் உரிமை யாளர். அப்படியிருந்தாலும் சரஸ்வதி யினுடைய பெற்றோர்க்கு அந்தளவிற்கு வசதிக்குறைவு இல்லை. பறகொல்ல தோட்டத்தில் தமிழ்ப் பள்ளியில் எட்டாம் வகுப்பு சித்தியடைந்த சரஸ்வதி ஆரம்பகாலத்தில் ரமணியினுடைய வீட்டிற்கு வந்தது சிங்களம் எழுதப் படிப்பதற்கே. அதுவும் பிற்பகல் வேளைகளில். ஆனால் கால ஓட்டத்தில் ரமணியின் வீட்டில் உள்ள ஒருத்தியை போன்று நெருக்கமாகிக் கொண்டாள். அவள் முழு நாளுமே வீட்டில் வேலை செய்தாலும் அதன் பொருட்டு எந்தவித கொடுப்பனவையும் பெறுவதில்லை. ஆனால் ரமணி அவளுக்கு அனைத்து மாதங்களிலும் உள்ளாடைகளையும், சட்டையும் வரவழைத்துக் கொடுத்தாள்.

"தம்பி... இந்த சரஸ்வதி... மிகவும் நல்ல சிறுமி. பார் இந்த வீட்டில் செய்கின்ற வேலை களை... எப்பவாவது பணம் கொடுத்தாலும் எடுப்பதும் இல்லை... கேட்பதும் இல்லை... நான் போன மாதம் 2500ரூபாவும் கொடுத்து சங்கிலி ஒன்றையும் வாங்கிவந்து கொடுத்தேன்... அதுதான் அவளது கழுத்தில் இருப்பது..."

ஒரு நாள் ரமணி அக்கா ஜயதிஸ்ஸவோடு கதைக்கும்போது அப்படிக் கூறினாள். ஜயதிஸ்ஸ வயது சென்ற மாடுகள் இரை மீட்பதைப் போன்று கடந்த காலத்தின் அனைத்து நிகழ்வுகளையும் ஒவ்வொன்றாக பகுப்பாய்வு செய்வதற்கு ஆரம்பித்தான். அறியாமலே அவன் மெரிவில்ல சந்திக்கு வந்துள்ளமை பற்றி நினைவுக்கு வந்தது. பேருந்து தரிப்பிடத்திற்கு பக்கத்தில் ஏழெட்டுப் பேர் தங்கிநின்றனர். அவர்கள் எந்த ஒருவரினதும் முகமும் அவனுக்கு ஞாபகம் இல்லை. மெரிவல்ல சந்தியில் வலப்பக்கமாகத் திரும்பி மேலும் சிறிது தூரம் செல்ல வேண்டும். இடப்புறத்தில் இருந்த மலைக்குன்றின் முகட்டில் சமப்படுத்தப்பட்டு புதிதாக கட்டிடங்கள் சில அமைக்கப்பட்டு இருந்தன. தேயிலைச் செடிகளினால் மூடப் பட்டு இருந்த மலை முடிச்சுக்கள் ஒளியுள்ளதாக சுடர் விட்டமையினால் தெருவின் ஓரத்தில் இருந்த விளம்பரப்பலகையின் மூலம் அது ஒரு கலவன் பாடசாலை என்பதை ஜயதிஸ்ஸ புரிந்து கொண்டான். இன்னும் அதிகநேரம் கழிவதற்கு முன்பே இருட்டாகிவிடும் என ஜயதிஸ்ஸ நினைத்தான். சரஸ்வதியினுடைய வீடு அமைந் திருந்தது தெருவில் இருந்து ஏழு எட்டு அடி உயரத்தில். அந்த இடத்திற்கு படிகளில் ஏறிச்செல்ல வேண்டும். ஜயதிஸ்ஸ நிலத்தைப் பார்த்தபடி மேலே ஏறுவதற்கு நினைத்தபோது சரஸ்வதி முற்றத்தில் இருப்பதைக் கண்டு அவன் அவளை நோக்கிச் சிரித்தான்.

"ஆச்சரியம்! சரஸ்வதி இன்னமும் அதே மாதிரி"

ஜயதிஸ்ஸ தனக்குள்ளேயே சொல்லிக் கொண்டான். முற்றத்தில் ஏறியதும் ஜயதிஸ் ஸவை பார்த்து சிரித்த சரஸ்வதி வீட்டின் உள்ளே போனாள். வீட்டினுள் இருந்த சரஸ்வதியின் தாயார் முற்றத்திற்கு இறங்கி ஜயதிஸ்ஸவை நோக்கி அறிமுகமில்லாத ஒருவனைப் பார்ப்பதைப் போன்று பார்த்தாள். அவள் மிகவும் வயசாகிப்போய் இருந்தாள்.

"ஆ... நீங்கள் சரஸ்வதியினுடைய அம்மா தானே? நான் ஜயா மஹத்தயா."

"ஆண்டவனே ஜயா மஹத்தயா... இப்ப என்னை மாதிரி வயசாகிப்போயிட்டீங்கள். வாங்கோ மஹத்தயா வீட்டுக்குள்ளே" அவள் ஜயதிஸ்ஸவை வீட்டுக்குள் வருமாறு அழைப்பு விடுத்தாள். சரஸ்வதியினுடைய முற்றத்தில் இருந்த நாரங்காய் மரத்தை அந்த இடத்தில் காணக்கிடைக்கவில்லை. ஜயதிஸ்ஸ சரஸ்வதி யினுடைய வீட்டுக்கு வந்த ஒரு நாள் அவள் ஒரு சிறுவனைப்போன்று நாரங்காய் மரத்தில் ஏறி பழுத்த பழங்கள் ஏழெட்டைப் பறித்து ஜயதிஸ்ஸ வுக்கு கொடுத்தவிதம் நினைவுக்கு வந்தது. ஜயதிஸ்ஸ வீட்டினுள்ளே கதிரையில் அமர்ந்து கொண்டான்.

"மஹத்தயா மிச்சங் காலத்திற்குப் பிறகு தானே?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“ஓம் அம்மா இருபத்தைந்து வருடங்கள் ஆகிவிட்டன”

ஜயதிஸ்ஸ மீண்டும் வீட்டினுள்ளே பார்த்தான்.

“ஸாந்தினி... மஹத்தயாவுக்கு தேனீர் போடு... சொல்லிக் கொண்டே அவள் வெற்றிலைத் தட்டத்தைக் கையில் எடுத்தாள்.

“அம்மா... எங்கே சரஸ்வதி நின்றாள்... ஏன் வரவில்லை”

அவள் கையில் எடுத்த வெற்றிலையை மீண்டும் தட்டத்தில் வைத்துவிட்டுச் சிரித்தாள்.

“மஹத்தயா சரஸ்வதி இறந்து பதினெட்டு வருடம் ஆகிறது... அங்கை இருக்கிறது அவளுடைய மகள் ஸாந்தினி... சரஸ்வதிக்கு பிள்ளை கிடைத்து மூன்றாம் நாள் பிரசவத்தின் போது சன்னிகண்டு ஆஸ்பத்திரியிலேயே செத்துப்போனாள். நான் தான் மூன்றுநாளும் குழந்தையைப் பார்த்தது”

தனது முன்பக்கச் சேலைத் தலைப்பினால் இரண்டு கண்களையும் துடைத்துக் கொண்டாள்.

தனக்கு முன்னாள் உள்ள சிறிய முக்காலி மீது இருந்த விரிப்பு பற்றி ஜயதிஸ்ஸ கவனிக்கவில்லை. அதில் ஆங்கில எழுத்தில் சரஸ்வதி என்று செவ்விளநீர் நிறத்தில் சீலையில் பொன்மயமான நார் நூலினால் தைக்கப்பட்டிருந்தது. அவன் அந்தப்பக்கம் பார்த்துக்கொண்டு இருந்தான். ஸாந்தினி தேனீர் தட்டத்தை எடுத்துக் கொண்டு வந்து முக்காலி மீது வைத்தாள். முக்காலி விரிப்பில் சரஸ்வதி என்ற எழுத்து உயிர்பெற்றது போன்று அவனுக்குத் தோன்றியது.

தேனீர் கோப்பையை கையில் எடுத்து இரண்டு மிடறு குடித்து விட்டு வீட்டை விட்டு வெளியே இறங்கினான்.

“அம்மா நான் போறன்” ஜயதிஸ்ஸவின் தொண்டையில் ஏதோ அடைத்ததைப் போன்று தோன்றியது. அவன் முற்றத்தில் ஓரத்தில் படிவரிசைக்குப் பக்கத்திற்குச் சென்று மீண்டும் திரும்பிப் பார்த்தான். சாந்தினி அவளது பாட்டியோடு தனது பக்கம் பார்த்துக் கொண்டிருப்பதைக் கண்டான். ❑

Devi Jewellers

“HOUSE OF FINE GOLD JEWELS”

දේවි ජුවලර්ස්   தேவி ஜுவலர்ஸ்

38, D. S. Senanayake Veediya,
Kandy
Tel: 081-2224110

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நேர்காணல்

எஸ். பொ.

சந்திப்பு : தி. ஞானசேகரன்

(இந்த நேர்காணலில் கூறப்படும் கருத்துக்களுக்கு மாற்றுக் கருத்துக்கள் இருப்பின் அவற்றை எழுதி அனுப்பினால் ஞானம் பிரசுரிக்கும். **- ஆசிரியர்)**

— பகுதி பன்னிரெண்டு —

● இனியொரு விதிசெய்வோம் என்ற நூலைக் கனடாவில் வெளியிட்டதற்கான விசேஷ காரணங்கள் ஏதும் உள்ளனவா?

விசேஷ காரணம் என்று ஒன்றையும் சொல்லமுடியாது. 1999இல் சிங்கப்பூரில் நடந்த எழுத்தாளர் மகாநாட்டிற்கு அம்பை, பிரபஞ்சன் ஆகிய இந்திய எழுத்தாளர் களுடன் நானும் அழைக்கப்பட்டிருந்தேன். அப்பொழுது இலக்கியம் சம்பந்தமாக நான் கொண்டிருந்த கொள்கைகள் பலவற்றைப் பிரசித்தம் செய்வதற்கு ஏற்ற அரங்கு அது என உணர்ந்து மனந்திறந்து பலவற்றைப் பேசினேன். நான் பேசியவற்றை அம்பையும் பிரபஞ்சனும் சில சந்தர்ப்பங்களிலே மூர்க்கமாக எதிர்த்தார்கள். பின்னர் நான் தங்கியிருந்த அறைக்கு வந்த சிங்கப்பூர் மலேசிய எழுத்தாளர்கள் பலரும் என் கருத்துகளுக்கு இசைந்தும் மறுத்தும் பலவகையாகப் பேசினார்கள். அந்தக் கட்டத்திலே நான் உணர்ந்தேன், என்னுடைய இலக்கியச் சிந்தனைகள் ஒரு நூலாகத் தொகுக்கப்பட்டு அவை புலம்பெயர் தமிழ் எழுத்தாளர் மாட்டுச் சென்றடைதல் வேண்டும். உடனடியாக அவை பயன் தராவிட்டாலும் அந்தச் சிந்தனைகளின் எதிரொலிகள் ஈழத்து இலக்கிய முயற்சிக்கு வளம் சேர்க்குமென நம்பினேன். எனவே சிங்கப்பூர் மகாநாடு முடிந்து தமிழ் நாடு சென்று சென்னையில் தங்கியிருந்தபொழுது 'இனியொரு விதிசெய்வோம்' நூலைத் தொகுக்கும் பணியில் ஈடுபட்டிருந்தேன். 60களில் எஸ். பொ., 70களில் எஸ். பொ., 80களில் எஸ். பொ., 90களில் எஸ். பொ. என நான்கு தசாப்தங்களிலே நான் எவ்வாறு இலக்கியச் சிந்தனைகளை மக்கள் முன் வைத்தேன் என்பதைப் பிரகடனப்படுத்துதல் வேண்டும் என்று நினைத்திருந்தேன். ஏற்கனவே நான் கூறியது போல் இந்தியச் சஞ்சிகைகள் தடைசெய்யப்பட வேண்டும் என்ற கோஷம் எழுந்திருந்தபொழுது என்னுடைய திட்டங்களை அறிக்கையாகச் சமர்ப்பித்தேன். அந்த அறிக்கைக்கு ஒரு முன்னீடு எழுதினேன். அறிக்கையிலும் பார்க்க முன்னீடு அதிக பக்கங்களில் அமைந்தது. அதைபற்றிச் சில விமர்சகர்கள் குருவித் தலையில் பனங்காய் வைத்ததுபோல ஒரு முன்னீட்டுடன் வந்த நூல் என்று கூடச் சொன்னார்கள். ஆனால் இலங்கையில் இலக்கியம் குறித்து மிகக் காரசாரமாக எழுந்த சர்ச்சையிலே நடுவு நிலைமை பேணி எவ்வாறு இலக்கியப் பாதையை வகுத்தெடுக்க வேண்டும் என்பதற்கு இலக்கணமாக அந்த எஸ். பொ. அறிக்கை அமைந்தது. அதுதான் இந்த நூலின் முதலாவது பாகம். இரண்டாவது பாகமாக நான் இலங்கையில் இருந்து பரதேசியாக வாழ்க்கையைத் தொடங்கிய காலத்தில், நைஜீரியாவில் ஆங்கிலத்துறை ஆசிரியராக இருந்த காலத்தில், பரீஸ் நகரிலே நடந்த ஓர் இலக்கியச் சந்திப்பின்போது ஆற்றிய உரைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவை காலாமோகனினால் தொகுக்கப்பட்டு தமிழகத்தில் வந்தது. அதற்குப்பின் 1994ஆம் ஆண்டு தொடக்கம் ஏறத்தாழ ஆண்டுதோறும் தமிழ் நாடு சென்று வருகிறேன். தமிழ் நாட்டுக்குச் சென்று வரும்போதேல்லாம் பல பத்திரிகைகளில் நேர்காணல்கள் கண்டார்கள். அந்த நேர்காணல்களைத் தொடர்ந்து அவற்றை வெளியிட்ட பத்திரிகைகளிலே பல சர்ச்சைகள் நடந்தன. ஆரம்பத்தில் தினமணிகதிரில் வந்ததற்கு எதிராகக் கணேசலிங்கன், தி. க. சி. போன்றவர்கள் குரல் கொடுத்தார்கள். அதே போன்று சுபமங்களாவில் வெளிவந்த பேட்டிக்கு பிறகு வந்த கருத்தாடல்களில், இவர் பிராமணர்களின் புதிய மோஸோயா என்று வசைபாடிய கட்டுரைகள் வந்தன. தமிழ் நாட்டின் விஜயங்களின்போது பத்திரிகைகள் கண்ட நேர்காணல்களிலே நான் பலதடவைகளிலும் நான் பூண்டுள்ள இலக்கியக் கொள்கைகளைத் மிகத் தெளிவுபடச் சொல்லியதாக எனக்குத் தோன்றியது. எனவே அந்த நேர்காணல்களையும் இனியொரு விதிசெய்வோம் நூலில் சேர்த்துக் கொண்டேன். பின்னர் கணையாழியில் பெரும்பாலும் உரத்தசிந்தனைகள் என்ற பகுதியிலே ஆரம்பத்தில் கஸ்தூரி ரங்கனாலும், இ. பார்த்தசாரதியினாலும் வரவேற்கப்பட்டு பின்னர் கடைசிக் காலங்களில் யுகபாரதியினுடைய நச்சரிப்புகளினால் வெளிவந்த கட்டுரைகளையும் தொகுத்து வெளியிட்டேன். இதற்கு மாறாக ஒரு கட்டுரை அதில் இடம் பெற்றுள்ளது. தமிழ் நாட்டிலே நடந்த தமிழ் ஆராய்ச்சி மகாநாட்டிலே 'ந' என்ற எழுத்து சம்பந்தமாக நான் சமர்ப்பித்திருந்த ஆய்வுக் கட்டுரை. கிட்டத்தட்ட ஐந்து தசாப்தங்களாக நான் என்னென்ன கொள்கைகளை முன்வைத்தேன் என்பது ஒரு தொகுதியாக 'இனியொரு விதி செய்வோம்' நூலில் அமைந்துள்ளது. 2000ஆம் ஆண்டில் நூல் வெளிவருகிறது என்பதற்காக 1972ஆம் ஆண்டில் வெளியிட்ட நூலின் ஓர் அட்சரத்தைத் தானும் நான் மாற்றி எழுதவில்லை. அது அப்படியே பிரசுரமானது.

மனித பக்குவங்களுக்கு ஏற்ப சிந்தனைகளும் இலக்கியக் கோட்பாடுகளும் மாறும். மாறுதல் ஆரோக்கியமானது என்று நான் இன்றளவும் நம்புகின்றேன். ஈழத்து இலக்கியத் துறையில், ஊழியத்தில் ஈடுபட்ட யாரும் இனியொரு விதிசெய்வோமில் என்னை சுய பரிசோதனைக்கு உட்படுத்திக் கொண்டதுபோல தன்சிந்தனைகளை நிர்வாணமாக மக்கள் மன்றத்திலே சமர்ப்பித்தவர் வேறு யாரும் இலர் என்ற ஒரு திருப்தி என்வசம் உண்டு. அந்த இனியொரு விதிசெய்வோம் நூல் மிகச் சீக்கிரமே விலைப்பட்ட நூல்களில் ஒன்று. ஆறுமாதங்களிலேயே முழு நூல்களும் விற்கப்பட்டுப் போயின. இலங்கைக்கு அந்த நூல்கள் எத்தனை வந்தனவோ நான் அறியேன்.

மற்றது உலக இலக்கியப் பயணத்தை மேற்கொண்டு கனடாவில் வாழக்கூடிய அன்பர்களையும் அதைத் தொடர்ந்து இங்கிலாந்து, பிரான்சு, ஜேர்மனி, சுவிற்சலாந்து, நோர்வே, டென்மார்க் போன்ற நாடுகளிலே வாழக்கூடிய இலக்கிய அன்பர்களையும் நான் சந்தித்து உரையாடுதல் வேண்டும் என்றும் அவர்களுடைய நட்பினாலும் உறவினாலும் என்னைப் புதுக்கிக்கொள்ள வேண்டும் என்ற சிந்தனையுடனும் 2000ஆம் ஆண்டின் புத்தாயிரத்தின் சிரசு உதயத்திலே நான் பயணத்தை மேற்கொண்டேன். நான் அவுஸ்திரேலியாவிலிருந்து நேராக அமெரிக்கா சென்று அங்கிருந்து கனடா சென்றபடியால் இந்த நூல்களை கனடாவில் வெளியிட்டு அங்கு இருக்கக்கூடிய என்னுடைய இலக்கிய அன்பர்களுடைய எதிர்வினைகளை உள்வாங்கிக்கொண்டு ஐரோப்பியப் பயணத்தின் பொழுது அவற்றை விநியோகிக்கலாம் என்ற திட்டமிடுதலுடன் செயற்பட்டபடியால் அதனை வெளியிடுவதற்குக் கனடா ஏற்ற இடமாகத் தெரிவு செய்யப்பட்டது. அது மட்டுமல்லாமல் கனடாவில் இன்று என்னுடைய உறவுகள் என்று சொல்லக்கூடிய பலரும் இருக்கிறார்கள். அதற்குமேல் என்னுடைய இலக்கியப் பயணத்திலே ஒன்றிணைந்து பணியாற்றிய குறமகள், கந்தவனம் போன்றவர்கள் அங்கே இருக்கிறார்கள். என்னைத் தொடர்ந்து இலக்கிய உலகத்திலே பணியாற்றும் நவம், சிறீஸ்கந்தராஜா, ஜோர்ச் குருஷே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்ற நண்பர்கள் பலர் அங்கு இருக்கிறார்கள். மற்றது 'காலம்' செல்வம், வானொலியில் பணியாற்றிய விக்னேஸ்வரன், கணக்காளராகப் பணியாற்றி ஆபிரிக்கக்கண்டத்தின் அநுபவங்களை நல்ல சிறுகதைகளாக ஆக்கித்தந்த முத்துலிங்கம், மிகச் சிறந்த அரசியல்வாதியாக வாழும் ஜெயராஜ் போன்ற பலரும் கனடாவில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய அங்கீகாரத்தைப் பெறுவது போலவும், கனடாவில் அந்த நூலை வெளியிடுதல் பொருத்தமானதாக இருக்கும் என நம்பினேன்.

● **'நனைவிடை தோய்தல்' உங்களுடைய படைப்புகளிலே உச்சமானது என்று ஒரு தடவை பேராசிரியர் பொன். பூலோகசிங்கம் என்னிடம் கூறினார். இந்த நூலை நீங்கள் எழுதுவதற்கான பின்னணியை அறிய ஆசைப்படுகிறேன்.**

உண்மையிலேயே நான் தொடர்ந்தும் இலங்கையில் வாழும் ஒருவனாக இருந்திருந்தால், நனைவிடை தோய்தல் என்ற நூலை எழுத வேண்டிய அவசியமே எனக்கு ஏற்பட்டிருக்காது. உண்மையில் 1981ஆம் ஆண்டு தொடக்கம் நான் பரதேசி வாழ்க்கையை மேற்கொண்டேன். நைஜீரியாவிலிருந்து நான் ஓய்வு வாழ்க்கையைத் திட்டமிட்டிருந்தபொழுது ஆபிரிக்கக் கண்டத்தின் மிகச் சிறந்த தற்கால நாவல்கள் அனைத்தையும் தமிழில் தந்துவிட வேண்டியது என்பணி என்று உழைத்துக்கொண்டிருந்தேன். ஆனால் நாட்டின் நிலைமைகளினாலும் வேறு சொந்தச் சோகங்களினாலும் நிர்ப்பந்தங்களினாலும் ஊர் திரும்பமுடியாது நான் ஒரு பரதேசியாக அவுஸ்திரேலியாவில் தஞ்சம் புகுந்தேன். அவுஸ்திரேலியாவில் நிரந்தர வதிவிடத்தை தேடிக்கொள்ள ஆயத்தம் செய்தபொழுது நான் தமிழை முற்றாக இழந்து விட்டது போன்ற அவதி ஏற்பட்டது. இந்தத் தமிழை மீண்டும் என் சுவாசத்திற்கும், என் சுவைப்பிற்கும், என் இரசனைக்கும் எவ்வாறு கொண்டு வரலாம் என்ற யோசனையும் எழுந்தது. செயற்கையான தென்னிந்தியப் பத்திரிகைகளிலே வந்துகொண்டிருந்த கதைகளிலே இல்லாத ஒரு தமிழில் யாழ்ப்பாண வாழ்க்கைமுறையை நான் இழந்த அவதியும் எனக்கு ஏற்பட்டது. அவுஸ்திரேலியாவில் உள்ள தமிழர்கள் மத்தியிலே ஒரு போலியான, மேல் போக்கான ஒரு நாகரிகம் ஒன்று உருவாகிக்கொண்டிருந்தது எனக்குச் சோகத்தைத் தந்தது. தமிழ் அடையாளங்களை விடுத்து இந்து அடையாளங்களின்மூலம் மத ஆசாரங்கள் மூலம் மத அடையாளத்தைப் பெறலாம் என்று சிலர் நினைத்து வாழ்வதாகக்கூட எனக்குத் தோன்றியது. முற்று முழுக்கவே நான் யாழ்ப்பாணத்தை இழந்து ஓர் அகதி என்ற நிலை எனக்கு எற்பட்டது. இந்த நிலையில் மெல்போர்னில் இருந்து 'மரபு' என்ற பத்திரிகை வெளியிட்ட அரவிந்தன் நான் தொடர்ந்து தனக்கு எழுதவேண்டும் என்று கேட்டுக்கொண்டார். அதைச் சற்று யோசித்த பொழுது, சிறுகதைகள் அல்ல, கட்டுரைகள் அல்ல, புதிதாக ஆங்கிலத்தில் மேன்மையாக ஏற்றுக்கொள்ளப்பட்ட Creative essays என்ற வகையிலே தமிழில் எந்த ஓர் இலக்கியமும் படைக்கப்படாமல் இருத்தல்கண்டு அந்தக் குறையையும் போக்கும் முகமாக இந்த நனைவிடை தோய்தல் என்ற நுலை எழுதினேன். நனைவிடை தோய்தல் என்பது என்னுடைய இளமைக்கால நனவுகளிலே குளித்து, சுகித்து, இன்பம் அநுபவிக்கும் ஒரு முயற்சி என்றுதான் சொல்ல வேண்டும். அந்த நனைவிடை தோய்தலை எழுதிய காலத்தில், ஒன்றில் நான் மிகத் தெளிவாக இருந்தேன். என்னை நான் ஒரு செய்நேர்த்திநாடும் ஒரு கலைஞனாகவே நினைத்துக்கொண்டேன். ஏனென்றால் புதிதாக அங்கே கற்பனை செய்வதற்கோ சொல்வதற்கோ எதுவும் இருக்கவில்லை. இருந்தது முழுதும் என் இளமைக்காலத்து நினைவுகளை நான் மீட்டெடுப்பது மட்டும்தான். எனவே அதை எழுதும்போது இந்த Creative essays என்ற வகைக்கு உகந்ததாக அதனை அமைக்கும் Craftmanship செய்நேர்த்திக்கு நான் முக்கியத்துவம் கொடுத்தேன். நான் யாழ்ப்பாணத்தை வெறும் ஆவணமாக மீட்டெடுக்காமல், யாழ்ப்பாணத்தின் நடமாடிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதர்களுடன் இணைந்து அந்த உயிர்ப்புள்ள, நான் இளவயதில் கண்டு பிரமித்த, அநுபவித்த, சுகித்த, என் சகலமும் ஆகவும் என் வாழ்வியலாகவும் இருந்த அந்த யாழ்ப்பாணத்து இயல்பான சொற்களிலே அவற்றைச் சொல்ல வேண்டுமென்று துடித்தேன். ஓரளவு அதிலே வெற்றியும் பெற்றேன். உண்மையில் இன்னும் நான்கு ஐந்து அத்தியாயங்கள் அதில் எழுதப்பட்டிருக்கவேண்டும். உதாரணமாக, கோட்டடி வழக்குகள் பேசுவது, சீட்டுப் பிடிக்கும் வழக்கங்கள், யாழ்ப்பாண திருமண சம்பிரதாயங்கள் போன்ற சிலவற்றை நான் எழுதவில்லை. இப்பொழுது மீண்டும் அந்த நனைவிடை தோய்தலை திரும்பிய பதிப்பு கொண்டுவந்திருந்தபொழுது கூட அந்த எண்ணம் இருந்தது. ஆனால் நீங்கள் நம்பமாட்டீர்கள். முன்னர் எனக்கு ஏற்பட்ட பாதிப்புகளின்போது எழுந்த அந்த எழுத்து ஓட்டம் இன்று வரமறுக்கிறது. ஒவ்வொரு படைப்பும் அது அது படைக்கப்பட்டபொழுது அதற்காக உருவான மொழியில் அவை எழுகின்றன. அந்த மொழியை என்னால் மீண்டும் மீட்டெடுக்க முடியாமல் இருப்பதினால் அந்த நனைவிடை தோய்தலுக்கு மேலதிகமான அத்தியாயங்களை என்னால் எழுத முடியவில்லை.

- *ஒரு காலத்தில் சிறந்த சிறுகதைகள் பலவற்றைப் படைத்த நீங்கள் கடந்த பத்து வருடங்களாக எந்தச் சிறுகதையும் எழுதியதாகத் தெரியவில்லையே...*

அப்படிச் சொல்லவியலாது. ஏனென்றால் 1954ஆம் ஆண்டு நான் எழுதிய 'ஆண்மையின் பதினைந்தாவது கதை என் மித்தி மகனைப் பற்றிய கதை. இன்றும் விமர்சகர்கள் மத்தியிலே சிறுகதைத்துறை ஒரு புதிய பதிவைச் செய்துள்ளது என்று சொல்லுகின்றது. சென்னையில் நடந்த தமிழ் இலக்கியம் 2004இலே 'பூ' என்ற சிறுகதைத் தொகுதி வந்தது. இந்தத் தொகுதியிலே வந்த கதைகள் ஏலவே பிரசுரமான கதைகளாக இருந்த போதிலும் பலகதைகள் முக்கியமாகக் கலைமகளிலே வந்த கதைகள் செல்லரித்துப்போன பக்கங்களிலிருந்து மீட்டெடுத்து எழுதியதினால், சில பகுதிகளை நான் திரும்ப எழுதவேண்டியிருந்தது. இவையெல்லாம் சார்பாக இருக்கலாம். 50களில், 60களில் சிரத்தை ஊன்றி நான் எழுதியபோன்று பின்னர் சிறுகதைத் துறையில் அதிகம் ஈடுபடவில்லை என்பது உண்மை. காலத்துக்கு காலம் ஓர் எழுத்தாளனுக்குப் பல்வேறு ஊடகங்கள் உதவிக்கு வருகின்றன. ஊடகங்கள் என்று சொல்லும் போது அது Media வைக் குறிக்காது. Form– உருவங்கள் என்பதைக் குறிக்கும். சிறுகதை என்பது எனது படைப்பை வெளிப்படுத்துவதற்கான ஓர் உருவம். அந்தச் சிறுகதை மட்டுமே என்னை வெளிப்படுத்தக் கூடிய உருவம் அல்ல. சிறுகதையில் நான் வெற்றி சாதிப்பதற்கு முதலேயே நான் கலைமகளில் உருவகக் கதைகள் மூலம் வெற்றி சாதித்தேன். சு. வேலுப்பிள்ளைக்குப் பிறகு இந்தத் துறையில் முனைந்து வெற்றி சாதித்தவன் நான் என்று கூடச் சொல்லலாம். 'கீதை நிழலில்' எழுதப்பட்ட கதைகளை உருவக்கதைகள் என்று சொல்லக்கூடாது. அவை சிறுகதைகளும் அல்ல. அவற்றை வசதிக்காகக் குட்டிக்கதைகள் என்று சொல்லலாம். குட்டிக்கதைகள் என்பது சிறுகதைகள் ஆகா. அவை வேறு ஒரு வகை இலக்கிய உருவம். இதைத்தவிர சில வேளைகளிலே நான் நாடகங்கள் மூலம் என்னை வெளிப்படுத்த முயன்றுள்ளேன். அதனால் தான் நாடகங்கள் எழுதினேன். பின் கவிதைகள் மூலம் என்னை வெளிப்படுத்தியிருக்கிறேன். சிறுகதையிலும் பார்க்க நாவல் சித்திரங்கள் தீட்டுவதற்கான படுதா பெரிதாக இருப்பதினால் சடங்கு, தீ போன்ற நாவல்களை எழுதினேன். நையாண்டி இலக்கியத்திற்கு இலக்கணம் வகிக்கவேண்டும் என்று '?' என்ற நூலை எழுதினேன். என்னுடைய எழுத்துப் பயணத்தைப் பார்த்தால் வெவ்வெறு காலகட்டங்களிலே வெவ்வெறு உருவங்களில் என்னை வெளிப்படுத்தும் முயற்சிகளை மேற்கொண்டிருந்தேன். 90களில் இந்தச் சிறுகதை உருவத்திலும் பார்க்க 'நனைவிடை தோய்தல்' போன்ற Creative essays– படைப்புக் கட்டுரைகள் என்று சொல்லலாம். அவற்றைப் போன்ற உருவத்திலே எழுதினேன். புலம்பெயர்ந்த நாடுகளிலே உள்ள தமிழர்களுடைய இருத்தலை தமிழ்நாட்டிலே அழுத்தமாகச் சொல்லவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதற்காக கட்டுரைகள் பலவும் எழுதவேண்டிய நிர்ப்பந்தம் எனக்கு ஏற்பட்டது. இவை தவிர ஈழத்து இலக்கிய வரலாற்றிலே நல்ல சுயவரலாறு சொல்லும் நூல் இதுவரையில் எழுதப்படவில்லை. அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சுயவரலாறு எழுதுவதாகப் போக்குக்காட்டியிருக்கிறார்களே தவிர சுயவரலாறு எழுதுவது ஒரு தனித்த இலக்கியப் பரிமாணம் கொண்ட எழுத்துப்பணி என்ற உணர்வுடனும் சிந்தையுடனும் யாரும் எழுதவில்லை. இந்த 'வரலாற்றில் வாழ்தல்' என்ற நூல் 2000பக்கங்களில் அமைந்த ஒரு படைப்பு இலக்கியமுமாகும் என்பதை நீங்கள் மனதிலே வைத்துக் கொள்ள வேண்டும். அத்தகைய ஒரு பாரிய படைப்பைத் தமிழில் தருவதற்காக நான்கு ஆண்டுகளுக்கு மேலாக உழைத்த ஒருவனிடம் நீங்கள் ஏன் சிறுகதைகள் எழுதுவது இல்லை என்று கேட்பது அவ்வளவு பொருத்தமானது அல்ல. இன்னும் ஒன்றை இந்தச் சந்தர்ப்பத்திலே உங்களுக்குக் கூற விரும்புகிறேன். நான் எழுத்து உலகத்திலே பிரவேசித்த காலத்தில் தமிழில் சிறுகதை இலக்கியமே மிகச் சிறந்த இலக்கிய வடிவமாகப் பேணப்பட்டு வந்தது. அப்பொழுதுதான் மணிக்கொடி வீச்சுகளும், புதுமைப்பித்தன்களும், மௌனிகளும், கு. ப. ராஜகோபாலன்களும் இணைந்து தமிழில் சிறுகதை வடிவத்திற்கு ஒரு புதிய வடிவமும் உயிர்ப்பும் கொடுத்துக்கொண்டிருந்தார்கள். அந்தக் காலத்திலே சிறுகதைக்கு இலக்கணம் எழுதியவர்கள் ஓர் ஆரூடம் சொன்னார்கள். அவசரமான யுகத்திலே நாவல்களைப் படிப்பதற்கு மனிதனுக்கு நேரம் இல்லாமல் போய்விடும். எனவே சிறுகதைதான் இனிவரும் காலத்தில் இலக்கிய வடிவம் என்று கூடச் சொன்னார்கள். ஆனால் இந்தக் கௌளி சாஸ்த்திரிகளினுடைய ஆரூடம் பொய்த்து தமிழில் சிறுகதைகளிலும் பார்க்க நாவல் இலக்கியம் நிலைபேறு அடைந்த வரலாற்றையும் நாங்கள் பார்க்கக்கூடியதாக இருக்கிறது. இன்றைய காலகட்டத்திலே பத்திரிகைகள் சிறுகதைகளை ஓர் இலக்கிய உருவமாகக் கொள்ளாமல் அதைச் அசுவாரசியமான பத்திரிகை நிரவல்கள்– Fillers ஆகவே பயன்படுத்துகிறார்கள். அத்தகைய ஓர் இழிநிலைக்கு இந்தச் சிறுகதைகளைப் பின்னுக்குத் தள்ளுவதை தலையாகதாகக் குமுதமும் அதன் அடிச்சுவட்டைப் பின்பற்றி ஆனந்த விகடனும் செய்துகொண்டு வருகின்றன. ஒரு போஸ்காட் சிறுகதை, அரைப்பக்கச் சிறுகதை, ஒருபக்கச் சிறுகதை என்று சிறுகதை இலக்கணங்களையே விதையடித்துச் சாகடித்து விட்டார்கள். இந்நிலையில் சிறுகதை இலக்கியம் மீண்டும் பழைய உச்சங்களை அடையுமா என்பது ஒரு கேள்வி. சிறுகதை ஓர் உச்சமான இலக்கிய உருவமாக இருந்த காலத்தில் சிறுகதைகள் படைக்க வேண்டும் என்ற எழுச்சி இயல்பாகவே என்னிடம் இருந்தது. சிறுகதைகள் என்ற இலக்கிய வடிவம் தன்னுடைய உச்சத்தினையும் மகிமையையும் கௌரவத்தையும் இழந்த பிறகும் மீண்டும் ஒரு காலத்தில் சிறுகதை எழுதியவன் என்ற ஒரேயொரு உரிமை பாராட்டுதலுக்காக அந்த ஃபிறீவீலில் சைக்கிள் ஓடுவதுபோலச் சிறுகதைகள் எழுதவேண்டும் என்று நீங்கள் விரும்புகிறீர்களா?

● *உங்களுடைய கவிதை ஆக்கங்களைப் பற்றிக் கூறுங்கள். அதிலே வெற்றி பெற்றுள்ளீர்களா?*

உண்மையில் நான் கவிதையுடன்தான் இலக்கிய உலகில் பிரவேசித்தேன் என்பது பதிவாகியுள்ளது. வீரகேசரியில் வந்த எனது முதலாவது கவிதை இன்றும் ஞாபகத்தில் இருக்கிறது.

தளிர் பச்சை இலைகளின் நடுவினிலே
தலையை ஆட்டும் மல்லிகையே
அளிப்பாய் உனது அழகின்பம்
அணங்கின் முத்துப் பற்களைப் போல்.

இதுதான் என் எழுத்தாக அச்சில் ஏறிய முதலாவது செய்யுள். அதன்பின்னர் நிறைய செய்யுள்கள் எழுதியுள்ளேன். ஆனாலும் இவை அனைத்தும் இலக்கணரீதியான அறிவுபெற்று எழுதிய செய்யுள் முயற்சிகள் அல்ல. உண்மையில் பாரதியாருடைய கவிதைகளையும் பின்னர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதிதாசனுடைய கவிதைகளையும் வாசித்ததின் அருட்டுணர்வினாலும் எழுச்சியினாலும் எழுதப்பட்டன. அதில் கையாளப்பட்ட எதுகை மோனைகள் அனைத்துமே அந்த இரண்டு கவிஞர்களுடைய ஆட்சியிலிருந்து இலகு ஆகப்பெறப்பட்ட ஞானம் மட்டுமே. பின்னர் சிறுகதையே எனக்கு வாகான வாகனமாக அமைத்துக் கொண்டேன். இருப்பினும் நாடகங்களை எழுதத் தொடங்கிய பொழுது அந்த நாடகங்களில் சில பகுதிகளாவது பாடல்களாகவும் கவிதைகளாகவும் இருத்தல் வேண்டும் என்பதை உணர்ந்தேன். அப்பொழுது மீண்டும் கவிதையை நாடவேண்டிய நிர்ப்பந்தம் எனக்கு இருந்தது. அப்படிக் கவிதையை நாடிய காலத்தில் நான் இலக்கணம் கற்பிக்கக் கூடிய ஆசான்களுடன் பழகத் தொடங்கிவிட்டேன். அந்தக் கட்டத்திலேதான் அண்ணல், மகாகவி, அம்பி, கந்தவனம், இ. நாகராஜன், நீலாவணன், மண்டூர் கவிராயர் சோமசுந்தரம், கல்லாற்று வி. கே. ராஜதுரை போன்ற பல கவிஞர்களுடன் இணைந்து அவர்களுடைய அநுபவங்களினால் என்னை வளப்படுத்திக் கொள்ளக்கூடியதாக இருந்தது. இந்தக் கவிஞர்களுள்ளும் கவிதைத் துறையிலே அதிகமாக எனக்கு ஆட்சிப்படுத்தக் கூடியதாக இருந்தவர் நால்வர் என்பதைப் பெருமையுடன் நினைவுபடுத்திக்கொள்ள விரும்புகிறேன். அவர்கள் இ. நாகராஜன், நீலாவணன், அண்ணல், மகாகவி. நான் தமிழ் பாடநூற் சபையில் இருந்த காலத்தில் அந்த ஆறாம் வகுப்பு நூலின் அனைத்துப் பாடங்களையும் வசன அலகுகளையும் நான் எழுதிய காலத்தில் கவிதைகளைத் தொகுக்கும் பணியிலே வேலாயுதபிள்ளை ஈடுபட்டிருந்தார். ஏனைய உறுப்பினர்கள் இல்லாத வேளைகளைத் தேர்ந்தெடுத்து தெரிவு செய்யப்பட்ட கவிதைகளின் இலக்கணங்களையும் அவை எதற்காகத் தெரிவு செய்யப்பட்டன என்கிற விளக்கங்களையும் வேலாயுதபிள்ளை சொல்லித்தந்தார். அந்தக் காலத்திலேதான் 1972ஆம் ஆண்டில் என்னுடைய தந்தையார் இறந்தார். அப்பொழுது அவர் நினைவாக ஒரு நூல் வெளியிடவேண்டும் என்று என் மனதில் தோன்றியது. அது கல்வெட்டாக இல்லாமல், எனக்கும் என் தந்தையாருக்கும் எற்பட்ட உரையாடலாக, மானசிகமான உறவுகளைச் சொல்லக் கூடியதாக அதனை அமைக்கவேண்டுமென்று ஒரு சிறிய நூலாக அதனை எழுதினேன். அதுதான் 'அப்பையா காவியம்'. அந்த அப்பையா காவியத்தின் பின்பகுதியிலே மரபுச் செலவு என்றொரு பகுதி இருக்கிறது. அது மரபு வழியாகத் தமிழில் நிலைத்துள்ள கவிதை இலக்கணங்களை உள்வாங்கியதன் ஒரு பெறுபேறாக அமைந்தது. ஆனாலும் அந்த முயற்சிக்குப் பிறகு, நான் கவிதையில் ஓரளவு தோல்வி என்று நான் சொல்லிக்கொண்டேன். ஏனென்றால் உண்மையைப் பேசவேண்டும், கவிதையில் நூலை இயற்றியபொழுது நான் அதிகமாக நேரத்தைச் செலவிட வேண்டியிருந்தது. இயல்பான ஒரு தன்மை பாரதியிடமிருந்த அந்த வீச்சு, அந்த எழுச்சி, கவிதா ஊற்று எனக்கு இல்லை என்கிற ஓர் அறிக்கையாகவும், நான் கவிதையில் ஓரளவு தோல்வி என்று பதிவு செய்துள்ளேன். அதில் வெட்கப்படுவதற்கு ஏதுமில்லை. பின்னர் 'முறுவல்' நாடகம் எழுதியபோது, கவிதை அமைப்பிலும் சில உரையாடல்கள் அமைக்கப்படுதல் வேண்டும் என்ற நிர்ப்பந்தமும் தேவையும் எற்பட்டது. எனவே முறுவல் நாடகத்திலும் பரந்துபட கவிதை கையாளப்பட்டிருப்பதைக் காணலாம். 'நனைவிடை தோய்தல்' என்ற நூலிலே ஒவ்வொரு அத்தியாயத்திற்கும் ஒவ்வொரு பாடல்களை இணைத்திருந்தேன். அதன் காரணமாக மீண்டும் கவிதை புனையும் ஒரு நாட்டம் எற்பட்டது. பிற்பாடு என்னுடைய இலக்கியப் பயணத்தைப்பற்றிய ஒரு மீள்மதிப்பீட்டை நான் செய்திருந்தபொழுது ஒரு காவியம் படைக்கவில்லை என்பது எனக்கு ஒரு குறையாகத் தோன்றியது. இதனால் 'அப்பாவும் மகனும்' என்ற நூலை எழுதினேன். இதில் வேடிக்கை என்னவென்றால் அப்பையா இறந்தது 1972ஆம் ஆண்டு. அந்த ஆண்டில் பிரசுரமானது அப்பையா காவியம். அந்த அப்பையா காவியத்தை யாழ்ப்பாணத்து எழுத்தாளர் சங்கமும் யாழ். இலக்கிய வட்டமும் இணைந்து யாழ்ப்பாண நகரசபை மண்டபத்தில் வெளியிட்டு என்னைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கௌரவித்தது. அப்பையா காவியத்தை முதலாவது பாகமாகவும், இரண்டாவது பாகமாக என்னுடைய மகன் மித்ர இறந்ததை வைத்து அவனுக்கும் எனக்கும் இருந்த உறவு பற்றி எழுதினேன். ஒரு கட்டத்தில் நான் மகனாகவும் இன்னொரு பாகத்தில் நான் தந்தையாகவும் இருக்கக்கூடிய உணர்ச்சி வேறுபாடுகளைக் காட்டும்முகமாக நான் அந்தக் காவியத்தை எழுதினேன். அதற்கு முன்னுரை தந்த ஞானக்கூத்தன் அது தமிழின் இருபதாம் நூற்றாண்டின் இறுதியில் வந்த தமிழ்க் காவியம் என்று அதைப் பதிவுசெய்யலாம் என்பது போலக் குறிப்பிட்டார். தோல்வி வெற்றிகளை நான் நிர்ணயிக்கவியலாது. வருங்காலம் நிர்ணயிக்க வேண்டும். ஆனால் என்னளவில் நான் பெரிதாகக் கவிதையில் சாதிக்கவில்லை என்ற நிலைப்பாட்டைத் துறக்கவில்லை. ஆனால் அதன் மீது எனக்கு எப்பொழுதுமே ஒரு ஈடுபாடும், நாட்டமும், அதை வந்தனை செய்யவேண்டும் என்பதும் என் எழுத்து ஊழியத்தின் மிகத்துடிப்புள்ள பகுதியாக இருந்தது. நான் எப்பொழுது சொல்வதாக இருந்தாலும் என்தமிழ் எழுத்து ஊழியத்தின் உச்ச ஆதர்சம் மகாகவி பாரதியாரே. அந்த மகாகவி பாரதியாருடைய ஆதர்சத்திற்கு அஞ்சலி செலுத்துவதாகவும் என்னுடைய கவிதை நாட்டம் அமைந்தது என்று சொல்லுகிறேன்.

❑

~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~

மோதல்கள்

எப்படித் தான்
தவிர்க்க நினைத்தாலும்
மோதல்கள் அடிக்கடி
தலை தூக்குகிறது.

மோதிக்கொண்டே இருக்க
நாமொன்றும்
சந்திரிக்கா பிரபாகரனல்ல.

எதிரிகள் மோதலாம்
ஒரு படுக்கையைப் பகிரும்
நாம் ஏன் மோத வேண்டும்

உப்புச்சப்பில்லாத
விடயங்களுக்கெல்லாம்
ஏன் மோதுகிறோமென்று
எமக்கே புரியவில்லை.

அநாவசிய பிரச்சினைகளால்
அடிக்கடி எம்மிடையே
மோதல்கள் அரங்கேறி
அறுக்கிறது மனதை.

அவருக்கும் எனக்குமிடையே
வளரும் கசப்புணர்வுகளை
நீக்கும் தூதுவராய்
நோர்வேயும் வரவில்லை.

நடந்ததை மறந்து
நாமே சமரசமாவதற்கு
பேசிட அழைக்கிறேன்.

பேச்சு வார்த்தை
மேசைக்கு வராமலே
ஈழப்பிரச்சினைபோல்
இழுபட்டுக்கொண்டே
கழிகிறது காலம்!

எவ்வளவோ எடுத்தியம்பியும்
மன்னிப்புக் கேளென்று
மறுத்துரைக்கிறார்

ஹிம்... முடியவில்லை.
செய்யாத தவறுக்கு
மன்னிப்புக் கேட்டு
மண்டியிட்டுப் போக
என்னால் முடியவில்லை.

அவரல்லவா என்னிடம்
கேட்க வேண்டுமென
மனது நினைக்கிறது.

ஆனாலும் சொல்ல முடியவில்லை
பெண்ணுரிமையும் சமத்துவமும்
இன்னுமிங்கு
கிடைக்காத காரணத்தால்!

சந்திரகாந்தா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~

பயணியின் பார்வையில்... !

அயல்வீட்டுக்காரர்களின் பெயர், பூர்வீகம், குலம், கோத்திரம் தெரிந்த வாழ்க்கை பெரும்பாலும் அந்நிய நாடுகளில் இல்லை.

தாயகத்தில் பரஸ்பரம் உறவும், நட்பும், கோபமும், பகையும் அயலாருடன் இருப்பது சாதாரணமானது. ஆனால் – அவுஸ்திரேலியா போன்ற வெளிநாடுகளில் பக்கத்து வீட்டுக்காரர் முகத்தை எப்போதாவது எதிர்பாராதவிதமாக பார்க்க நேர்ந்தாலும், "ஹலோ ஹவ் ஆர் யூ....." "குட்மோர்னிங்" "குட் ஈவினிங்" "ஹாய்...." என்ற ரீதியில் சில சொற்களுடன் அறிமுகம் மட்டுப்படுத்தி விடும்.

அடுத்த வீட்டில் பாரதூரமாக எதுவும் நடந்தாலும் தெரியவராது. பொலிஸும் – தீயணைப்பு வாகனமும் வந்த பின்பு அறிந்து கொள்ள முடியும். அறிந்தாலும் வேடிக்கை பார்க்க மனம் துணியாது.

அந்நியப்பட்ட வாழ்க்கைதான் அந்நிய நாடுகளில். தாயகம் விட்டு புலம்பெயர்ந்த எவரது வாழ்வும் இந்த 'அந்நியப்பட்ட' நீரோட்டத்தில் கலந்துதானிருக்கிறது.

இரண்டு பக்கங்கள் –

முருகபூபதி
(அவுஸ்திரேலியா)

'அழைப்பு மணி' அழுத்தப்படும் ஓசை கேட்டாலும் கதவு தட்டப்படும் சத்தம் கேட்டாலும் 'பாதுகாப்பு' கதவு திறக்கப்படாமல் "யார்" என்பதை அறிந்து பேசுவோம். அறிமுகமற்றவர்களாயின் – வந்திருப்பவரை வாசலில் வைத்தே உரையாடி அனுப்பி விடுவோம்.

"கள்ளர் பயம்" வறிய நாடுகளிலும் வளர்முக நாடுகளிலும்தான் என்று நினைத்து விடாதீர்கள்.

வளர்ச்சியடைந்த நாடுகளில் கச்சிதமாக காரியம் பார்க்கும் "கிரிமினல்கள்" அதிகம். வீடுகளில், "கொள்ளை" யர்களுக்குப் பயந்து பணம் செலவழித்து "அலார்ம் சிஸ்டம்" பொருத்துபவர்கள் அநேகம்.

வீட்டையும் வீட்டின் உடைமைகளையும் காப்புறுதி செய்து மாதாமாதம் அதற்கான கட்டணத்திற்காக மனதால் அழுதுகொண்டிருப்பவர்களும் அநேகம்.

வீட்டில் கொள்ளையர்களிடம் உடைமைகளை பறிகொடுத்தவர் பொலிஸிற்கு முறையிடச் சென்றால், முதல் கேள்வி – "காப்புறுதி செய்திருக்கிறீர்களா?"

கொள்ளையிட வருபவர்களும் நீண்ட காலத்திட்டத்தின் பிரகாரம்தான் செயல்படுகிறார்கள். அதனை ஒரு "TEAM WORK" ஆக செய்கிறார்கள். வாகனம் முதல் தொலைபேசி தொடர்பு கருவிகளும் பயன்படுத்துகிறார்கள்.

நான் அறிந்த ஒரு கொள்ளைச் சம்பவம் மிகவும் சுவாரஸியமானது.

ஒரு வீடு. இரவு பத்து மணிக்கு மேல் அழைப்பு மணி ஒலி கேட்கிறது. வீட்டுக்காரர் வாசலுக்கு வந்து பாதுகாப்பு கதவுக்கூடாக – பார்க்கிறார். வெளி "லைற்"றையும் போடுகிறார்.

ஒரு பெண். நடுத்தரவயது. இரவு உடை "நைற்"றியுடன் நிற்கிறாள். முகத்தில் பதட்டம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என் கணவருக்கு நெஞ்சு வலி ..... ஹார்ட் அட்டாக் மாதிரி இருக்கிறது. அம்பூலன்ஸுக்கு கோல் கொடுக்க வேண்டும். எங்கள் வீட்டு ரெலிபோன் ...... அவுட் ஓஃப் ஓடர்..... பிளீஸ்...... உதவி செய்யுங்கள்".

வீட்டுக்காரருக்கு மனிதாபிமானம், கருணை உள்ளம் கதவு திறக்கிறது.

"நன்றி" சொல்லிக் கொண்டு உள்ளே வந்த அந்தப் பெண் – டெலிபோன் இருக்கும் திசைக்குச் சென்று "அம்பூலன்ஸுக்கு" போன் செய்தாள் என்றா நினைக்கிறீர்கள்?

அந்த டெலிபோன் வயரையே இழுத்து அறுத்து விடுகிறாள்.

வீட்டுக்காரர் திகைப்பு அடங்கு முன்பு – இரண்டு மூன்று தடியர்கள் வீட்டினுள் நுழைந்து வீட்டிலிருந்தவர்களை அடித்துப் போட்டுவிட்டு விலையுயர்ந்த பொருட்களுடன் கம்பி நீட்டுகிறார்கள்.

உதவி கேட்டு வந்த பெண்ணே – கொள்ளையிடப்பட்ட பொருட்களை ஏற்றிச் செல்லும் வாகனத்தை செலுத்தினாள்.

எப்பேர்ப்பட்ட துணிகரக் கொள்ளை. இது போன்று பல சம்பவங்கள். ஒவ்வொன்றும் தனித்தனி "க்ரைம் ஸ்டோரிகள்" தான்.

இந்த இலட்சணத்தில் – இரவு நேரத்தில் மட்டுமல்ல பகல் நேரத்திலும் கதவு திறக்க யாருக்குத்தான் துணிவு வரும்.

வீட்டுப்பாதுகாப்பு – வீட்டுத்திறப்பு இவை விடயத்திலும் மன அழுத்தல்கள் பலருக்குண்டு. கணவன் மனைவி மாத்திரமல்ல – வளர்ந்த பிள்ளைகளும் தத்தம் கைவசம் வீட்டுத்திறப்பு வைத்திருக்க வேண்டிய அவசியமும் அவசரமும் நிரம்பிய இயந்திர வாழ்க்கை வாழ்ந்து கொண்டு – எப்போது ஓய்வு கிடைக்கும் குடும்பமாக ஒன்றாக அமர்ந்து உணவு உண்பதற்கு என்று ஏங்கிக் கொண்டிருக்கும் புலம்பெயர்ந்தவர்களை "சொர்க்கத்தில்" வாழ்பவர்கள் என்று கற்பனை செய்து கொண்டிருப்பவர்களை எனது தாய கத்தில் பார்த்திருக்கிறேன்.

இங்கே பெரும்பாலான பயணங்களுக்கு எனது 'கார்' உதவினாலும் சில சமயங்களில் எனக்குள்ள உடல் உபாதைகள் போன்று – எனது காருக்கும் "ஆஸ்த்மா", "ஆர்த்ரைட்டீஸ்", "ஹார்ட் அட்டாக்", "கொலஸ்ரோல்", "டயபடீஸ்", "விறைப்பு", "சோர்வு" முதலான நோய்கள் வந்துவிடும்.

ஒரு குளிர்கால காலை வேளையில் எனது கார் "மக்கர்" செய்தது.

காரை விட்டுவிட்டு பஸ்ஸில் பயணமா வதற்காக பஸ் தரிப்பிடத்திற்கு வந்து பஸ்ஸுக் காக காத்து நின்றேன்.

அந்த நேரத்திலா மழை வரவேண்டும்? கைவசம் குடையும் இல்லை. நம்பமுடியாதது பருவகாலமும் தான்.

பஸ்தரிப்பிட பக்கமாக இருந்த அந்த வீட்டின் தாழ்வாரத்தில் ஒதுங்கினேன். மழை விட்டபாடாயில்லை; பஸ்ஸும் வருவதாயில்லை.

சில நிமிடங்களில் அந்த வீட்டுக்காரனும் அவன் மனைவியும் கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்து தமது காரின் அருகே வந்தபொழுது தாழ்வாரத்தில் ஒதுங்கி நிற்கும் என்னை விநோதமாக பார்த்து "இங்கே என்ன செய்கிறாய்?" என்று ஏக குரலில் கேட்டனர்.

"மழை..... பஸ் இன்னும் வரவில்லை....." என்றேன்.

வீட்டுக்காரன், "பஸ் தரிப்பிடம் அங்கே ..... அங்கே போய் நில்....." என்று சொல்லிவிட்டு மனைவியை அணைத்துக் கொண்டு காரில் ஏறி புறப்பட்டான். அவனுக்கும் 'கள்ளர்' பயம் என நினைத்துக் கொண்டேன்.

பின்பு, நான் அசடு வழிந்து கொண்டு பஸ்தரிப்பிடத்திற்கு வந்தேன். மழை நீர் என் முகத்தில் வழிந்து எனது முகத்தில் தோன்றிய "அசடை" வழித்திருக்குமா?

மழைநேரத்திலும் மனிதாபிமானம் இல்லா மல் என்னை மழையில் நனைய விட்ட அந்த வீட்டுக்காரன் மீது எனக்கு இப்பொழுதும் கோபம்தான்.

என்றாவது ஒரு நாள் அவனும் அவன் மனைவியும் இப்படி என்னைப் போல் மழையில் நனைவார்கள் என்று மனதிற்குள் சபித்தேன். நான் மனிதன்; மகாத்மா அல்ல.

இச்சம்பவம் நடந்தது பல வருடங் களாகியும் என்னால் மறக்க முடியவில்லை. அந்த வீட்டை கடக்கும் வேளைகளில் அச்சம்பவத்தை நினைப்பேன். அந்த வீட்டுக்காரன் மறந்திருக் கலாம் காலம் காயங்களை குணமாக்கும்.

அந்த கோபமும் ஆறுதலும் ஒரு புறம் இருக்க மற்றுமொரு பயணத்தில் கிட்டிய அனுபவம் – இப்படியும் மனிதாபிமானிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்மத்தியில் வாழ்கிறார்கள் என்பதை உணர்த்தியது.

ஒரு கூட்டத்திற்காக மண்டபம் ஒழுங்கு செய்து அழைப்பிதழ்களும் அனுப்பிவிட்டோம். மண்டபத்தை ஒழுங்கு செய்தவர் வசம் மண்டபத்திற்கான சாவி.

கூட்டத்திற்கு தேவையானவற்றை எடுத்துச் செல்லவேண்டிய பொறுப்பு என்னைச் சார்ந்து விட்டது.

நான் எனது மகனுடன் நேரகாலத் துடன் மண்டபத்திற்கு வந்து விட்டேன். அன்றும் மழை நாள்.

மழை பெய்து கொண்டிருக்கிறது. இந்த மழையினால் கூட்டத்திற்கு வருபவர்களும் தாமதிக்கிறார்கள்.

நண்பர் மண்டபத்தின் சாவியுடன் வந்து சேர்வதற்கு தாமதிக்கிறார். அவரும் எங்கோ மழையில் சிக்கிக் கொண்டிருக்க வேண்டும். என்வசம் என்றைக்குமே கைத்தொலைபேசி இல்லை. அதனை அவசியமாக கருதாத 'கற்கால மனிதன்' நான்.

உடனிருந்த மகன் ஆலோசனை சொன்னான். "அப்பா ...... அதோ பக்கத்தில் இருக்கும் வீட்டுக்குப்போய் அந்த மாமாவுக்கு போன் செய்வோம். அவரை சாவியுடன் கெதியாக வரச் சொல்லுவோம்" என்றான்.

இருவரும் மழையில் நனைந்து கொண்டு அருகிலிருந்த வீட்டின் கதவைத் தட்டினோம். அந்த வீட்டுக்காரன் கதவு திறந்து விசாரித்தான்.

நிலைமையைச் சொன்னேன். முகம் மலர்ந்து உள்ளே அழைத்து நண்பருக்கு தொலைபேசி அழைப்பு கொடுப்பதற்கு உதவி செய்தான்.

அவனது மனைவியோ – "மழையில் நனைந்து விட்டீர்கள் ... உங்கள் நண்பர் சாவியுடன் எத்தனை மணிக்கு வருவாரோ தெரியாது... குளிருகிறது.... உங்கள் இருவருக்கும் கோப்பி தயாரிக்கிறேன். அருந்திவிட்டுச் செல்லுங்கள்" – என்றாள்.

நானும் மகனும் ஏக காலத்தில் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்தோம். அப்பொழுதும் எமது முகத்தில் 'அசடு' வழிந்திருக்கலாம்.

முகமலர்ச்சியுள்ள அந்த தம்பதியையும் அந்த கோப்பியின் சுவையையும் மறக்க முடியவில்லை.

மழை பெய்து கொண்டுதானிருக்கிறது. 'மனிதர்கள்' வாழ்ந்து கொண்டு தானிருக் கிறார்கள்.

❑

'ஞானம்' சந்தா விபரம்

உள்நாடு

தனிப்பிரதி	:	**ரூபா 30/=**
ஆண்டுச் சந்தா	:	**ரூபா 360/=**
2 ஆண்டுச் சந்தா	:	**ரூபா 700/=**
3 ஆண்டுச் சந்தா	:	**ரூபா 1000/=**
ஆயுள் சந்தா	:	**ரூபா 15000/=**

சந்தா காசோலை மூலமாகவோ வங்கிக் கணக்கு மூலமாகவோ, மணியோடர் மூலமாகவோ அனுப்பலாம்.

மணியோடர் அனுப்புபவர்கள் அதனை **வெள்ளவத்தை** தபால் நிலையத்தில் மாற்றக்கூடியதாக அனுப்ப வேண்டும். வங்கிக் கணக்கு மூலம் அனுப்புபவர்கள் **T. Gnanasekaran, HNB - Pussellawa,** நடைமுறைக் கணக்கு இலக்கம் – 26014 என்ற கணக்கிலிட்டு வங்கி ரசீதை அனுப் புதல் வேண்டும்.

அனுப்ப வேண்டிய பெயர், முகவரி :

T. Gnanasekaran
Gnanam Branch Office
3-B, 46 th Lane, Colombo - 06.

வெளிநாடு

ஆண்டுச் சந்தா	:	**25 US$**
ஆயுள் சந்தா	:	**300 US$**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாயம் வெளுத்துப்போன
சிலையொன்றின் கதை

யதீந்திரா

ஜெயகாந்தன்! ஒரு காலத்தில் இலக்கிய வட்டாரத்தில் பலருக்கும் ஆதர்ஷமாக இருந்த பெயர் அது. 1960 – 70 களில் இளம் தலைமுறையினர் பலருக்கும் உத்வேகமளித்த பெயர். எனது வாசிப்பு முழுவதும் ஜெயகாந்த னுடனேயே சுருங்கிக்கிடந்த காலம் ஒன்றும் இருந்தது. 1995இல் எனது பாடசாலைக்கல்வி முடிவடைந்தது. அதன் பின்னர்தான் எனது எழுத்துப் பிரவேசம் நிகழ்ந்தது. உண்மையைச் சொல்லப் போனால் அந்தநேரத்தில் பெரியார், இங்கர்சால், கம்யூனிசம் என்றெல்லாம் எனது தேடல் விரிவு கொண்டதற்கு, ஜெயகாந்தனின் எழுத்துக்களே உறுதுணையாக இருந்திருக் கின்றன. பெரும்பாலும் ஜெயகாந்தனின் எல்லா

எழுத்துக்களுமே எனது விழிகள் துழாவியவை தான். "அக்கினிப் பிரவேசம்", "கோகிலா என்ன செய்து விட்டாள்" போன்ற படைப்புக்களை ஒன்றுக்கு பலதடைவைகள் படித்திருக்கிறேன். அப்பொழுதெல்லாம் என்னிடம் ஓர் அரசியல் சார்ந்த ஊடுருவிய பார்வை இருக்கவில்லை. இலக்கியத்தை இலக்கியமாகவே பார்த்துக் கொண்டிருந்த காலம் அது. அதனால் ஜெயகாந் தனின் எழுத்துக்களுக்கு அப்பால் ஜெயகாந் தனின் பின்னணிகள் பற்றியெல்லாம் அறிந்து கொள்ளவேண்டிய அவசியம் இருக்கவில்லை. பொதுவாக தமிழக எழுத்தாளர்கள் என்றாலே நம்மிடம் ஒரு பிரமிப்பு இருப்பதும் வழக்கம் தானே! தமிழ்த் தேசிய அரசியல் தொடர்பாக எனது கற்றல் விரிவு கொண்ட போதுதான் அதனுடன் தொடர்புடைய பலவற்றையும் தெரிந்து கொள்ளவேண்டிய தேவை ஏற்பட்டது. அப்பொழுதுதான் ஜெயகாந்தன் 1987இந்திய–சிறிலங்கா ஒப்பந்த காலத்தில் உதிர்த்த சில பொன்மொழிகளையும் அறிந்துகொண்டேன். காந்திதேசத்தின் படைகள் நமது மக்களைக் கொன்றொழித்ததையும் நமது பெண்கள் பலரை நிர்வாணப்படுத்தியதையும் ஜெயகாந்தன் நியாயப்படுத்தியிருக்கின்றார். நான் அதனை அறிந்து கொண்டபோதே என்னளவில் ஜெயகாந்தனின் கதை முடிந்துவிட்டது. எனது ஹீரோ காலமாகி விட்டார். என்னளவில் ஒருவரின் முற்போக்கு முகம் என்பது நமது பிரச்சனையில் அவர் என்ன நிலைப்பாட்டைக் கொண்டிருக்கிறார் என்பதைக் கொண்டே தீர்மானிக்கப்படவேண்டியதாகும். முற்போக்குவாதம் என்பது புத்தகங்களில் மட்டும் சுருங்கிக்கிடக்கும் ஒன்றல்ல. ஆனால் தமிழக இலக்கிய உலகத்தைப் பொறுத்த வரையிலோ ஜெயகாந்தன் என்ற முற்போக்கு இலக்கிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாதியின் கதை 1975களுடனேயே முடிந்து விட்டது.

ஜெயகாந்தன் எழுதுவதை நிறுத்தி நீண்ட காலமாகிவிட்டது. ஆயினும் சமீபத்தில் ஜெயகாந்தன் ஞானபீடப்பரிசு வழங்கிக் கௌர விக்கப்பட்டார். இதனைத் தொடர்ந்து மீண்டும் ஜெயகாந்தன் நாமம் தமிழ்ச் சூழலில் சற்று உலவியது. ஜெயகாந்தன் எந்த விருது களுக்கும் தகுதியுடையவர்தான். அவரது தகுதியை எவருமே குறைத்து மதிப்பிட்டு விடவும் முடியாது. ஆனால் அந்தத் தகுதி 30 வருடங்களுக்கு முந்திய ஒன்றாகும். விருதை விட்டுவிடுங்கள். புத்தகங்கள் மூலம் எனக்கு அறிமுகமான ஜெயகாந்தன் இந்த அற்ப விருது களையெல்லாம் பொருட்படுத்தும் சராசரி எழுத்தாளரல்ல. ஆனாலும் அவர் இன்று ஞானபீடத்தின் ஆசியைப் பெற்றவராகியிருக் கிறார். அதற்காக காஞ்சிபீடத்தின் ஆசியை அவர் பெறவேண்டியிருந்ததுதான் அசிங்கமாக இருக்கிறது. ஆதிக்கத்தரப்பினருடன் சமரசம் செய்தால் அது எத்தகைய நன்மைகளை யெல்லாம் அள்ளிக்கொடுக்கும் என்பதற்கு ஜெயகாந்தன் எப்போதுமே நமக்கு உதாரணமாக இருப்பார். அதற்குரிய தகுதிதான் அவருக்கு கிடைத்த ஞானபீடப்பரிசு. தமிழக இலக்கிய சூழலைப் பொறுத்த வரையில் ஞானபீடப்பரிசு இதுவரை அகிலனுக்கு மட்டும்தான் வழங்கப் பட்டிருக்கின்றது. 1975ம் ஆண்டு அகிலனின் ''சித்திரப்பாவை'' என்ற நூலுக்கு இவ்விருது வழங்கப்பட்டது. அந்தக் காலத்தில் விருதுக்குரிய எத்தனையோ படைப்புக்கள் இருந்தும் அவற்றுடன் ஒப்பிட்டால் எந்தத் தகுதியும் அற்ற சித்திரப்பாவைக்குத்தான் அன்று ஞானபீடம் வழங்கப்பட்டிருக்கிறது. இதிலிருந்து ஞான பீடத்தின் சீத்துவத்தை நாம் புரிந்துகொள்ளலாம். அன்று இந்த விருதை பெறுவதற்கு சகல தகுதிகளையுமுடைய ஒருவராக ஜெயகாந்தனே இருந்தார். அன்று ஜெயகாந்தனைப் பார்க்காத ஞானபீடம் இன்று ஜெயகாந்தனைக் கண்டு கொண்டதன் சூட்சுமம்தான் என்ன? இங்கு தான் ஜெயகாந்தனின் சமரச விளையாட்டுக்கள் புதையுண்டு கிடக்கின்றன. ஜெயகாந்தன் ஒரு காலத்தில் இடதுசாரிகளின் செல்லப்பிள்ளை யாக இருந்தவர். அந்தக் காலத்தில் சோவியத் தனது இரண்டாவது தாயகம் என்றவர். எனினும் அந்தக்காலத்திலேயே திராவிட அரசியலை கடுமையாக விமர்சித்தவர். குறிப்பாக பெரியாரியத்தை கடுமையாக எதிர்த்தவர். அப்பொழுதே இந்துத்துவ சக்திகள் இவர் மீது ஒரு கண் வைத்துவிட்டது போலும். அந்தக் காலத்தில் பார்ப்பனிய– பணியா சக்திகள் தமிழகத்தில் ஒரு பெரியார் எதிர்ப்பாளரைத் தேடிக் கொண்டி ருந்தன. ஜெயகாந்தன் அந்தக் குறையைப் போக்கினார். இந்த இடத்தி லிருந்துதான் ஜெயகாந்தனின் இந்துத்துவ சமரசமும் தொடங்குகிறது. உண்மையில் ஜெயகாந்தனின் திராவிட அரசியல் எதிர்ப்பே இறுதியில் அவரை பார்ப்பனியத்தின் அடிவருடியாக மாற்றியது எனலாம். 1975இல் ஜெயகாந்தனின் ''ஜயஜய சங்கரா'' என்னும் நாவல் வெளிவருகிறது. அப்போதிருந்தே காஞ்சிப்பெரியவர் என்று அழைக்கப்படும் மடாதிபதி ஜயேந்திர சரஸ்வதியின் கடைக்கண் பார்வை ஜெயகாந்தன் மீது பட்டுவிட்டது. அதன் பின்னர் எழுத்திற்கு கும்பிடுபோட்டுவிட்ட ஜெயகாந்தன் இன்றுவரை பார்ப்பனிய, இந்துத்துவ சக்திகளின் ஊதுகுழலாகவே தொழிற்பட்டுவருகிறார். பின்வரும் அவரது அடிவருடிக் குரல்களை கவனம் கொள்ளுங்கள்.

''தமிழர்கள் அனைவரும் இந்தி படிக்க வேண்டும், வீட்டிலும் தமிழர்கள் இந்தி பேச வேண்டும்''

''இந்தியக் கலாசாரத்தின் சின்னம் சமஸ்கிருதம், சமஸ்கிருதத்தைப் போற்றாதவன் தமிழனல்லன்''

''பெரியாரியம் காலாவதியாகிவிட்டது''

''சோசலிசத்தைவிட முதலாளித்துவம் மக்களுக்கு அதிக நன்மை செய்திருக்கிறது''

''எனக்கு மொழிப்பற்றுக் கிடையாது''

(தமிழர் கண்ணோட்டம் மே 2005– தணி கைச்செல்வன்)

இவைகள்தான் ஜெயகாந்தனிடமிருந்து ஞானபீடம் எதிர்பார்த்திருக்கிறது போலும். தவிர சமீபத்தில் சங்கரராமன் என்பவரை கொலை செய்ததற்காக சிறையில் அடைக்கப்பட்டுள்ள காஞ்சி சங்காராச்சாரியிடம் சிறையில் சென்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசி பெற்றிருக்கிறார் ஜெயகாந்தன். இவர் சிறையில் வாழையிலையில் மலம் கழித்துக் கொண்டிருக்கிறார் என்பது வேறு விடயம். நீண்டகாலமாக எழுதா விரதமிருந்து ஜெய காந்தன் சிறையில் கிடக்கும் கொலையாளியை புகழ்ந்து "ஹரஹர சங்கர" என்னும் நாவல் ஒன்றை எழுதியதன் மூலம் தனது எழுதா நோன்பிற்கு விடை கொடுத்திருக்கிறார். என்னவொரு இந்துத்துவ அடிவருடித்தனம். நான் நினைக்கிறேன் தமிழகச் சூழலில் ஜெயகாந்தன் அளவிற்கு எந்தவொரு இந்துத் துவ பக்தரும் இருக்கமுடியாதென்று. 23.04.2003 அன்று சமஸ்கிருத சேவா சமிதி ஜெயகாந்தனுக்கு நடாத்திய பாராட்டுக் கூட்டத்தில் அவர் பேசியதைக் கேளுங்கள். புல்லரித்துப் போவீர்கள்.

"வர்ண வேறுபாடுகள் இருக்க வேண்டும். ஏற்றத்தாழ்வுகள் இருந்தால்தான் வாழ்க்கை சுவாரசியமாக இருக்கும். தமிழைவிட சமஸ் கிருதம் உயர்வானது. பிற மொழிக் கலப்பில் லாமல் தமிழில் எழுத வேண்டும் பேச வேண்டும் என்கின்ற தமிழ் அறிஞர்கள் தம்மை தாமே நக்கிக் கொள்ளும் நாய்கள் சமஸ்கிருதம் இங்கே ஆதரித்து வளர்க்கப்பட்டிருந்தால் ஆங்கிலம் இப்படி நுழைந்திருக்காது"

வாழ்க்கையில் பல சந்தர்ப்பங்களில் பலரும் சமரசம் செய்வதுண்டுதான். ஆனால் அந்த சமரசம் எல்லாவற்றையும் இழந்து நிர்வாணமாக நிற்கும் சமரசமாக இருப்பதை நியாயப்படுத்தி விட முடியாது. சிலர் சொல்லுகின்றார்கள், படைப்பு வேறு படைப்பாளி வேறு படைப்பைத் தான் நாம் பார்க்கவேண்டும் தவிர படைப் பாளியையல்ல என்று. இவ்வாறான வாதங்களி லெல்லாம் எனக்கு முழுமையான உடன்பாடு கிடையாது. என்னளவில் படைப்பிற்கு படைப் பாளியிற்கும் இடையிலான இடைவெளி மிக்க குறைவாக இருக்க வேண்டும். அவ்வாறில்லா விட்டால் கதைக்கும், காட்சிக்கும் ஏற்ப மாறிக் கொண்டிருக்கும் கோடம்பாக்க சினிமா நடிகனுக்கும் படைப்பாளிக்கும் என்ன வேறு பாட்டைக் காணமுடியும். எங்களுக்கு எதற்கு படைப்பாளி, சினிமா நடிகனே போதுமே! இது கலை கலைக்காகவே என வாதிப்போருக்கு பிரச்சனைக்குரிய ஒன்றல்ல. வெங்கட்சாமி நாதன் போன்ற பார்ப்பனிய கலை வாதிகள் ஜெயகாந்தனை இன்றும் அற்புத மென்பது இந்த அர்த்தத்தில்தான். படைப்பாளி என்பவனுக்கு ஒரு சமூகப் பொறுப்புணர்வு தேவை என்ற கருத்துடைய என்னைப் போன்றவர்களுக்கு இது பிரச்சனைக்குரிய ஒன்றாகும். இன்று ஜெயகாந்தனுக்கும் தமிழ் மசாலா சினிமா நடிகனுக்கும் எந்த வேறுபாடும் கிடையாது. ஜெயகாந்தன் இந்துத்துவத்தின் ஆசிக்காக எல்லாவற்றையும் இழந்தது நிர்வாணியாகி விட்டார். ஜெயகாந்தனைப் பார்க்கும்போது லெனின் கம்யூனிசிம் ஒரு இளம்பருவக் கோளாறாக இருந்துவிடுகிறது எனக் கூறியதே நினைவுக்கு வருகிறது. அன்று ஜெயகாந்தன் பேசிய புரட்சி வாதங்கள் எல்லாம் ஆதிக்கத்திற்கு முன் மண்டியிட்டு விட்டன. ஜெயகாந்தனின் புரட்சி வாதம் எல்லாம் ஒரு இளம்பருவத்துக் கோளாறு தான் போலும். ஜெயகாந்தனால் புரட்சிகர உணர்வு பெற்றவர்கள் இன்று அதே ஜெயகாந்தனை விமர்சித்து நிராகரிக்கும் கால மொன்று தோன்றுமென்று நம்பியிருக்க மாட்டார்கள். நமது நம்பிக்கைகள் சிதைந்து போவதற்கு நாமே சாட்சியாக இருப்பது வேதனைக்குரிய ஒன்றுதான். அதற்காக விமர்சிக்காமல் இருந்துவிடவும் முடியாது. ❑

ஹைக்கூ

எல்லோருக்கும் திருப்தி
மின்னி மயக்கும் பெண்முகம்
நகைகளின் குவியல்!

வெளிநாடு போய்
வீடுவந்து பார்க்கிறான்
முதிர்ந்த கண்ணாடி!

–மடவளை அன்சார். எம். ஷியாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசகர் பேசுகிறார்

அன்புடன் ஆசிரியட்கு.

ஈழத்து வரலாற்றில் ஒரு சிற்றிதழ் 64வது வரை தாண்டி ஞான(ம்) வோதயம் பெற்றிருப்பது சிற்றிதழ் வளர்ச்சியின் கதையை வெளிப்படுத்தி நிற்கிறது. ஞானம் காத்திரமான படைப்புக்களை ஜனனம் கொண்டு இலக்கியப் பாதையில் ஓர் நேர் வழியாகவே விளங்குமென்பதில் ஐயமில்லை.

செங்கை ஆழியானின் சிறுகதை எவ்வாறு எழுதப்படக்கூடாது? என்பது சிறுகதை சொப்பனர்களுக்கு ஓர் கற்கை நெறியாக இழையோடியிருக்கிறது. ஒரு சில விருதும், பணப்பரிசும் பெற்றவர்கள் நல்ல சிறுகதையாளனென தம்பட்டம் போடுபவர்களுக்கு நல்ல படிப்பினை. பத்மாசோமகாந்தனின் ஆன்மீகப்பணி, சாதீயத்துக்கு எதிரான போராட்டம், மேல் சாதியினரின் முரட்டுத் தனத்து முற்றுப் புள்ளியான நெத்தியடி.

ஓவியர் புஸ்பாவின் அட்டைப்பட, கவிதைக்கான ஓவியம் அவரின் ஆளுமையை வெளிப்படுத்துகிறது. ஆனால் சிறுகதைக்கான ஓவியங்களில் அவசரப்பட்டு சிறுபிள்ளைத்தன ஓவியத்தால் கொணரப்பட்டுள்ளார். ஞானம் சகாப்த்தங்களை நோக்கி முன்னேற வேண்டும்.

-கோபால் நாதன், பொத்துவில்

****

மதிப்புக்குரிய திரு. தி. ஞானசேகரன் அவர்களுக்கு, கலாபூஷணம் புலோலியூர் க. சதாசிவம் ஞாபகார்த்தச் சிறுகதைப் போட்டியில், எனது 'வியூகம்' என்ற சிறுகதை பாராட்டுச் சான்றிதழ் பெற்றமைக்காக மகிழ்ச்சியடைவதோடு, குறுகிய காலப்பகுதியிலேயே சிறுகதைத் தொகுதியையும் (பரிசுக் கதைகளடங்கிய) வெளியிட்டு வைத்தமைக்காகவும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். எழுத்துத் துறையில் கால்பதிக்க முனையும் என்போன்றோருக்கு ஊக்கம் கொடுத்து வழிசமைக்கும் தங்களின் சேவைக்கு உளம் நிறைகிறேன். தங்களால் மேற்கொள்ளப்படவிருக்கும் இலக்கிய முன்னெடுப்புகளுக்கு என்னால் இயன்ற பங்களிப்புகளைச் செய்வேன் என்பதையும் இத்தால் அறியத் தருகிறேன்.

-செல்வி ஆ. புனிதகலா, வட்டவளை

****

இனிய வணக்கம். நீண்ட இடைவெளிக்குபின் மடல்வழி பேசுவதில் மகிழ்ச்சி.

ஞானம் சிறுகதைகளை ஆய்வு செய்த ஷீலா இப்போது ஒட்டுமொத்த ஞானம் இதழ்களை முனைவர் பட்ட ஆய்வுக்காக எடுத்துக்கொள்ள இருக்கிறார் என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறேன். பேராசிரியர் மகேஸ்வரன் மூலம் "ஞானம் சிறுகதை ஆய்வோடு" தங்கள் பார்வைக்கு வந்திருக்குமென நம்புகிறேன். அதை விரைவில் தாங்களே நூல் வடிவில் கொண்டுவரலாம். இது குறித்து விடை எழுதவும்.

என்னுடைய மற்றொரு மாணவர் பொன்மந்திரி என்பவர் மலையகச் சிறுகதைகளை ஆய்வுக்கு எடுத்துக்கொண்டுள்ளார். அவரிடம் "மலையகச் சிறுகதைகள்" தொகுதி – 2 உள்ளது. ஆனால் 33 சிறுகதை எழுத்தாளர்கள் படைத்த "மலையகச் சிறுகதைகள்" தொகுதி – 1 அவருக்குக் கிடைக்கவில்லை. தங்கள் மூலம் இந்நூல் கிடைக்கக் கூடும் என்ற நம்பிக்கையில் இதை எழுதுகிறேன். இந்த முதல்தொகுதி இருந்தால் அதனைப் படியெடுத்து அனுப்பி உதவுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

தங்களின் புதிய நூல்கள் ஏதாவது வெளிவந்திருந்தால் தகவல் தருக! தொடர்ந்து 'ஞானம்' வருகிறது; மிகச் சிறப்பாக அதன் பணியும் பயணமும் அமைந்துள்ளன! வாழ்த்துக்கள்!

முனைவர் சா. உதயசூரியன், தஞ்சைப் பல்கலைக்கழகம்

****

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமதிப்புக்குரிய ஆசிரியர் அவர்களே!

ஞானம் – 65 இன் எனது கவிதையினைப் பிரசுரித்தமைக்கு எனது மனமார்ந்த நன்றி. என் போன்ற இளம் தலைமுறையினருக்கு 'ஞானம்' ஓர் நம்பிக்கை ஒளியாகத்திகழ்கிறது. நாம் சோர்ந்துவிடாதிருக்க ஞானம் களம் அமைத்துக் கொடுப்பது மகிழ்ச்சி.

-தி. ஜனகன்

****

அன்புடையீர்,

அமைதியும் ஆற்றலும் முகப்போவியத்துடன் ஞானம் சஞ்சிகைப் பிரதிகள், பேராதனைப் பல்கலைக்கழகப் பொறியியற் பீட மாணவனாகிய மகன் வாசு எனது பெயரில் கிடைக்கும் வண்ணம் ஒழுங்கு செய்துள்ளார்.

கலை இலக்கியப் பொக்கிஷமாம் இச் சஞ்சிகை, நாற்பத்தைந்து ஆண்டுகளிற்கு முன்பு உள்ள ஞாபகத்தினை கொணர்கிறது. ஆகஸ்ட் 2005 சஞ்சிகையில் முல்லைமணியின் கொக்கிளாய் மாமியின் சிறுகதையில் 25 மைல்களையும் இரட்டை மாட்டு வண்டியிலோ, நடந்தோ சின்னாச்சிப் பெத்தாச்சி, குஞ்சி அப்பு, பிள்ளைகளிற்குப் புடிப்புட்டுடன் பார்க்க வருவது, 1960களில் எனது வெள்ளை ஆச்சி பனை ஓலை பெட்டியுள் மோதகம் வடையுடன் வெள்ளைக் குடை பிடித்துத் தின்ன வேலியிலிருந்து பொடிநடையில் வருவாவே, என் கண்முன்னே தோன்றி மறைகிறது. மேலும், சிறுகதை ஆசிரியரின் பதவியுயர்வுடன் மாற்றம்கிடைத்து கொக்கிளாயாகிய வெலிஓயாவிற்கு செல்லுகிற சம்பவம்; எனது ஊராம் கட்டுவன் சந்தியினை நினைக்கிறேன். என்ன பெயரோ? என்ன கோலமோ? எப்ப ஊர் செல்வோமோ?

மார்க்ஸிய வாதியான எஸ். பொவிற்கு அவர்தம் வாழ்க்கையில் ஏற்பட்ட தனிப்பட்ட சோகங்கள், துயரங்கள், ஏமாற்றங்கள் போன்றவற்றிலிருந்து விடுபடுவதற்கு ஆன்மிகமே கை கொடுக்கு மாகையால், உபதேசம் செய்யும் கீதையின்பால் மனித நேயத்தைத் தேடினார்!? செழிப்பாக வெளி வந்த கீதை நிழல் சான்று பகர்கின்றது.

அடுத்து, கவிச்சக்கரவர்த்தி கம்பன் கையாளும் மூடிமறைக்கப்படும், சொல்வதற்கே வாய் கூசும், அல்குல் ஐ விட மோசமான சொல் வேறொண்டுண்டோ, திறமையுடன் வாக்கியங்களிற் பயன் படுத்துவதில் குறையேதும் இருக்காது. சொற் பிரயோகங்களிற் சிற்சில கிசுகிசுப்புகள் காணப்பெற்றால் எப்பருவத்தினரும், ஆண்களோ சரி பெண்களோ சரி உன்னிப்பாய் வாசிப்பதில் அக்கறைப்படுவர். முதிர்ச்சி அடைந்தவர்கள் விதிவிலக்கல்லர். சுயதிருப்தி பெறாதவர்கள் அநேகர் இருக்கமாட்டார்கள். பருவத்தின் பிரதிகூல மௌனலாம். திருமணம் புனிதமானது. அடித்தளம் ஆண் பெண் உறவு. புதிய தலைமுறைகளை உருவாக்கி நாட்டிற்கும் வீட்டிற்கும் உதவுவது. ஆண் பெண் உறவில் விரிசலை ஏற்படுத்தும் முக்கிய காரணி யோனி. யோனி பொருந்தாவிடம் திருப்திகரமான வாழ்க்கை வாழவே இயலாது. விரசமான செயலைச் செய்விப்பதற்கே பெரியவர்கள் பொருத்தம் பார்க்கிறார்கள். திருமண வைபவங்களை நடாத்துகிறார்கள். நன்மையும் உண்டு. தீமையும் உண்டு. அர்த்தநாரீஸ்வரர், (சிவ)லிங்கம், உருவங்களின் நுணுக்கத் தத்துவம் என்ன? கிரேக்கர் வழிபாடு செய்த ஆதிமுதற்கடவுளரின் உருவம் ஆணின் உறுப்பாக அமைந்ததே. இவைகள் விரசமானதா? தெய்வங்களே அப்படியாயின்; எஸ். பொவின் நூல்களில் அவர் தனது பாணியில், திறாணியுடன் எந்த வயதிலோ எழுதிய அத்தனை சொற்பாவனைகளும் மக்களால் மானசீகமாகப் போற்றப்படுவனவே ஆகும் என்பது என் கருத்து. அத்துடன் எஸ். பொ. வின் ஒவ்வொரு வாக்கியங்களும் தத்துவம் நிறைந்தன.

துரைச்சுவாமி ஜெகநாதன்

****

ஈழத்திலக்கிய நிலப்பரப்புக்கு கணிசமான பங்களிப்பு நல்கும் இலக்கிய சஞ்சிகையான ஞானத்தின் பங்கு தனியானது. தனித்துவமான அடையாளங்களுடன் ஞானமும் இடையறாது வெளிவருவது மகிழ்ச்சிக்கும் பாராட்டுக்கு உரிய தொன்று. கடந்த இதழில் சாஹித்திய இரத்தினம் விருது வென்ற ஈழத்தின் மூத்த எழுத்தாளரும், வெளியீட்டாளரும், மல்லிகை ஆசிரியருமான திரு. டொமினிக் ஜீவா பற்றிய அட்டைப்படக்குறிப்பு காலத்திற்கு மிக பொருத்தமானது. வாழும் போது வாழ்த்தும் மரபு ஈழத்தில் அதிகரிக்கப்பட்டு வருவதற்கு இவ்வணுகுமுறையும் ஒன்றாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்த இதழில் வெளியான கவிதைகள் அருமை, 64, 63ம் இதழ்களோடு ஒப்பிடுகையில் கவிதைகளில் ஆசிரியர் கவனம் செலுத்தியிருப்பது தெரிகிறது. அதே வேளை மூத்த படைப்பாளிகளின் அதிக ஆக்கங்களே இடைவிடாது பிரசவமாவது, எதிர்கால இளம் படைப்பாளிகளை உதாசீனப்படுத்துவதாக இல்லையா? இது உசிதமும் அல்ல. நூல் வெளியீடுகள், விற்பனை தொடர்பாக ஆதங்கப்படும் ஞானம் இளம் படைப்பாளிகளுக்கு களம் அமைக்க தவறுகிறது.

எஸ். வஸீம் அக்ரம்

****

'ஞானம்' அக்டோபர் இதழில்– விருது பெற்ற டொமினிக் ஜீவா– பற்றிய கட்டுரையில் பல சுவையான தகவல்களை தெரிவித்திருந்தீர்கள். கண்டியில் டாக்டர் ச. முருகானந்தத்தின் "மீன் குஞ்சுகள்" அறிமுக விழாவின்– பின்னர் நானும் டொமினிக் ஜீவாவும்– உங்கள் இல்லம் வந்து சுவையான விருந்தும் இலக்கிய உரையாடலுக்கு பின்னர் உங்கள் இல்லத்தில் தங்கியிருந்தது என் நெஞ்சில் பசுமையாக இருக்கிறது.

தேடலோனின் "பார்வையும் பதிவும்" இடம் பெறும் குறிப்புகள் சம்பந்தமாக பத்திரிகைகளில் வெளிவரும் செய்திகளை கொண்டு இதனை எழுதுவதாக தெரிகிறது. "கிச்சான்" என்ற ஏ. விமல் ராஜின் குறுந்திரைப்படம் கொழும்பு தமிழ்ச் சங்க மண்டபத்தில் திரையிடப்பட்டு அதனை தொடர்ந்து கலந்துரையாடலும் இடம் பெற்றது. கலந்துரையாடலில் கலந்து கொண்டவர்கள் கருத்து தெரிவித்தனர் என்று குறிப்பு காணப்படுகிறது.

ஆனால்... அந்த தினத்தில் படம் திரையிடப்படவில்லை... என்ற தகவலை கிழக்கு பல்கலைக்கழகத்தில் என்னை சந்தித்த விரிவுரையாளர் விமல் ராஜ் தெரிவித்தார். தேடலோனுக்கு மலையகத்தில் நடைபெறும் நிகழ்வுகள் தெரியாமல் போய்விடுகிறது.

அந்தனி ஜீவா, கண்டி

****

எனது வளர்ச்சிக்கு தாங்களும் ஞானமும் தட்டிக் கொடுப்பதையிட்டு நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். எனது கவிதைகளை விரைவாக அச்சில் கொண்டு வந்து பிரசுரிக்கிறீர்கள் மிக்க நன்றி. தங்கள் ஒத்துழைப்புக்கு என்றும் எனது நன்றிகள் உரித்தாகுக.

மடவளை அன்சார் எம். ஷியாம்

****

அவதானிப்பும் அறியாமையும்:

என்னால் தினகரன் வாரமஞ்சரியில் 'கார்த்திகேசு சிவத்தம்பி – இலக்கியமும் வாழ்க்கையும் நூல் வெளியீட்டு விழா பற்றிய ஒரு அவதானிப்பு என்ற கட்டுரைக்கு தனது அறியாமையை தினகரனில் எழுத முடியாத கலாநிதி ஞானத்தில் எழுதியிருப்பது 'ஞானம்' ஆசிரியர் தன்னைப் பாதுகாத்துக் கொள்வார் என்ற நம்பிக்கையில் என்று எண்ணுகின்றேன். ஞானம் ஆசிரியரே! ரவி தமிழ்வாணனின் புத்தக வெளியீடு பற்றி தினகரனில் வந்த கட்டுரைக்கு பதில் கூறும் வகையில் ஞானத்தில் பிரசுரிக்க ஒரு கட்டுரை தந்தேன் அதை ஞானத்தில் பிரசுரிக்க முடியாது தினகரனுக்கே அனுப்புங்கள் என்று கூறிய நீங்கள் இன்று துரை மனோகரனுக்குக் குடை பிடிப்பதின் மர்மம் என்ன? உங்கள் பத்திரிகைத் தர்மம் வேண்டப்பட்டவருக்கு மட்டும் சொந்தமா? அல்லது நடுநிலையானதா? அப்படியாயின்கலாநிதி துரை மனோகரனின் அறியாமையைப்பற்றி நான் எழுதும் கருத்தையும் நீங்கள் ஞானத்தில் பிரசுரித்தாக வேண்டும். 1962 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் சாஹித்திய மண்டல விழா நடை பெறவில்லை. அறியாமையின் சின்னமே! முதலில் அதைத் தெரிந்து கொள்ளும். கேட்பார் சொற்கேட்டு தெரியாததை தயவுசெய்து எழுதாமல் இருப்பதே நல்லது. 1962 ஆம் ஆண்டு திரு. சு. நடேசபிள்ளை தலைமையில் எழுத்தாளர் மகாநாடு மட்டுமே நடைபெற்றது என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும். அது சாஹித்திய மண்டல விழாவல்ல. அது மட்டுமல்ல "நூலை நீங்கள் முழுமையாக வாசிக்கவில்லை" என்பது மறுக்க முடியாத உண்மை. நான் நூலை இருமுறை வாசித்தவன் என்ற முறையில் உங்களால் மேடையில் கூறிய பட்டியலுக்கும் ஞானத்தின் நேர்காணல் நூலுக்கும் எத்தகைய தொடர்பும் இருக்கவில்லை என்பதுதான் உண்மை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிஞர் ஏ. இக்பால் அவர்கள் ஒரு முது பெரும் முற்போக்குக் கவிஞன். பேராசிரியர் சிவத்தம்பியுடன் 1960 ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரை நண்பனாக இருப்பவர். பேராசிரியர் நேர்காணலில் கூறிய விடயங்களுக்கு ஒத்துப் போகாத தனது கருத்துக்களைத் தெரிவிக்க பூரணமான அறிவுகொண்டவர். தெரியாத விடயத்திற்குள் மூக்கை நுழைத்து இலக்கியம் தெரியாத சேற்றுக்குள் விழுந்துவிட வேண்டாம்.

கோணேசன் (திருமலை)

****

செங்கை ஆழியானிற்கு 'செங்கை ஆழியான்' பதிலளிக்கிறார்.......

'ஞானம்' 64 ஆவது இதழில் (செப்ரெம்பர் 2005), செங்கை ஆழியான் க. குணராசா எழுதியுள்ள 'புனைகதை இலக்கியம்: அறிவோம், கற்போம், படைப்போம்' என்ற கட்டுரை தொடர்பாகச் சில கருத்துக்கள்

1993 கார்த்திகையில் எனது 'வெக்கங் கெட்டவர்கள்' சிறுகதை எழுதப்பட்டதாகக் கூறி, அக்காலச் சூழலிற்குப் பொருத்தமில்லையே என அவர் முன்வைத்த அடிப்படைக் குறைபாடுகள் யாவும், அச் சிறுகதை 1973 கார்த்திகையில் எழுதப்பட்டதென்ற உண்மையில் அடிபட்டுப் போய் விடுகின்றன!

இலங்கையின் முதலாளித்துவ அமைப்புமுறை, சுரண்டல் என்பன பற்றியும்; "இலங்கையைப் பொறுத்தளவில் அனைவருக்கும் கிடைக்கின்ற சந்தர்ப்பங்கள் இன்று சமமானவையே" என்றும் அவர் தெரிவிக்கும் அபத்தக் கருத்துக்களை ஒரு புறம் வைத்துவிடுகிறேன்; நினைவுகளையும் வாய்மொழிக் கூற்றுக்களையும் பிரித்துக்காண முடியாது ஒன்றாய்க் குழப்புவதையும், வெவ்வேறு பாத்திரங்களின் கூற்றுக்களில் மாறாட்டம் புரிவதையும், பணம் – பொருள் என்பவற்றுக்குச் சரணடையாது, 'மனிதனுக்கும் மனிதனுக்குமான' மேன்மையான உறவை அவாவி நிற்கும் கதாநாயகனின் ஆளுமைப்பண்பை விளங்கிக் கொள்ள முடியாத அவரது பலவீனத்தையுங்கூட தள்ளி வைத்து விடுகிறேன்.

எனினும்,

அக்கட்டுரையில் செங்கை ஆழியான் குறைபாடுகளாக முன்வைத்த முக்கிய கருத்துக்கள் சிலவற்றைப் பின்வருமாறு தொகுக்கலாம்.

1. சிறுகதை எப்படி எழுதப்படக்கூடாது என்பதற்கு உதாரணமாய் அமைவது எனது 'வெக்கங் கெட்டவர்கள்' என்ற சிறுகதை (இதனைக்) "....... கவனிப்பிற்கு எடுக்காது விடுவது ஈழத்துச் சிறுகதைத்துறைக்குச் செய்கின்ற பாதகமாக" அவருக்குப்படுகிறது அந்த அளவிற்கு நான் மோசமான ஓர் எழுத்தாளன்!
2. "இச்சிறுகதை வலிந்து ஆக்கப்பட்ட ஒரு சிறுகதை .... ஆசிரியர் கதையைத் தயாரித்துள்ளார்."
3. "இச்சிறுகதை நல்லதொரு சிறுகதைக்குரிய வார்ப்பாகவில்லை.
   .... சிறுகதைத்துறையில் எவ்வளவோ வளர்ச்சி ஏற்பட்டுவிட்டது அவற்றினைப் புரிந்துகொண்டு எழுத வேண்டும். வெறும் சுலோகப் பிரயோகங்களுக்காகச் சிறுகதையென்ற பெயரில் எதையாவது எழுதி வாசகர்களை ஏமாற்ற முயலக்கூடாது."
   இனி,
   Dr. க. குணராசா, B.A. Hons (Cey), M.A., Ph.D, SLAS (செங்கை ஆழியான்) எழுதிய 'ஈழத்துச் சிறுகதை வரலாறு (டிசெம்பர் 2001) என்ற நூலின் 205 ஆம் பக்கத்தில் (1974 மார்கழியில் வெளி வந்த 'தொலைவும் இருப்பும் ஏனைய கதைகளும்' என்ற எனது சிறுகதைத் தொகுதியிலுள்ள), எனது சிறுகதைகள் பற்றியுள்ள கருத்துக்கள் சில வருமாறு:
   1. "அ. யேசுராசாவின் சிறுகதைகள் சொற்பமாயினும், ஈழத்துச் சிறுகதைத்துறையில் தனித்துவமானவை. வெட்கங் கெட்டவர்கள், பிரிவு, வரவேற்பு, படம் பார்த்த பிறகு,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகத்தான துயரங்கள், ஓ! கடவுள் உறங்குகிறார் போல, கந்தசாமி வெட்கப்படுகிறான், ஓர் இதயம் வறுமை கொண்டிருக்கிறது, தொலைவு இருப்பு, கோடை இடிகள் என்பன அ. யேசுராசாவின் படைப்புகள்''

2. ''....... இவை தயாரிக்கப்பட்ட கதைகளன்று, தன்னுணர்வு பூர்வமான அனுபவ வெளிப்பாடாக யேசுராசாவின் சிறுகதைகளுள்ளன.''

3. ''...... 'சிறுகதை என்பது குறித்த ஒரு உணர்வுநிலையை மையப்படுத்திப் புனையப்படும் சொற்கோலம்' என்பதற்கு அவரின் சிறுகதைகள் தக்க உதாரணம்.

.... அ. யேசுராசா ஈழத்தமிழ்ச் சிறுகதை இலக்கியத்திற்குப் புதியதொரு சிறுகதை முறைமையை வடிவத்திலும் உள்ளடக்கத்திலும் தந்துள்ளார் என்பதை மறுப்பதற்கில்லை.''

'ஞானம்' கட்டுரையினையும் இந்த நூலின் கருத்துக்களையும் ஒரு சேரப் பார்க்கும் போது, எனக்கு வியப்பாக இருக்கிறது.

- அ. யேசுராசா

'ஞானம்' சஞ்சிகையின் வளர்ச்சிக்குக் கைகொடுத்து வாசிப்புக் கலாசாரத்தை வளர்த்தெடுக்கும் அன்பு நெஞ்சங்கள்

● புரவலர் அல்ஹாஜ் ஹாசிம் உமர் 46, ஆனந்தகுமாரசுவாமி மாவத்தை, கொழும்பு	20 பொதுநூலகங்களுக்குத் தொடர்ந்தும் ஞானம் சஞ்சிகையை அனுப்பிவைக்க உதவுகின்றார்.
● கலாபூஷணம் அ. முகம்மது சமீம் (முன்னாள் கல்விப் பணிப்பாளர்) இல 09, இராஜசிங்க வீதி, கொழும்பு – 06.	30பாடசாலை நூலகங்களுக்கு ஒரு வருட காலத்திற்கு ஞானம் சஞ்சிகையை அனுப்பிவைக்க உதவுகின்றார்.
● திரு. சேகரன் சோமபாலன் JANALANKA ENTERPRISE No. 60 Kotagodella Veediya, Kandy.	30 பாடசாலை நூலகங்களுக்கு ஒரு வருட காலத்திற்கு ஞானம் சஞ்சிகையை அனுப்பி வைக்க உதவுகின்றார்.
● **NAGALINGAMS JEWELLERS** No.101, Colombo Street, Kandy. T. P - 081 2232545	30 பாடசாலை நூலகங்களுக்கு ஒரு வருட காலத்திற்கு ஞானம் சஞ்சிகையை அனுப்பி வைக்க உதவுகின்றனர்.
● **A. G. Sarma & Co.** (Chartered Accountants) 117, Bandaranayake Mawatha, Colombo 12. T.P.: 011 2435666	118 பாடசாலை நூலகங்களுக்கு ஒரு வருட காலத்திற்கு ஞானம் சஞ்சிகையை அனுப்பி வைக்க உதவுகின்றனர்.
● **Alhaj S. Muthumeeran** Attorney-at-law Nintavur - 12 T.P: 067 22505380	15 பாடசாலை நூலகங்களுக்கு ஒரு வருட காலத்திற்கு ஞானம் சஞ்சிகையை அனுப்பி வைக்க உதவுகின்றார்.
● சிவஸ்ரீ சோ. ரவிச்சந்திரக் குருக்கள் ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானம் திருக்கோணமலை	60 பாடசாலை நூலகங்களுக்கு ஒரு வருட காலத்திற்கு ஞானம் சஞ்சிகையை அனுப்பி வைக்க உதவுகின்றார்.

நீங்களும் இப்பணியில் இணைந்து கொள்ளுங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமகாலக் கலை இலக்கிய நிகழ்வுகள்

—பார்வையும் பதிவும் —

த. சிவசுப்பிரமணியம்

அகவை எழுபது பூர்த்திகண்ட கவிஞர் முருகையன்

தேசிய கலை இலக்கியப் பேரவையின் தலைவரும், மூத்த முற்போக்கு கவிஞரும், தமிழறிஞருமான கலாநிதி இ. முருகையனின் அகவை எழுபது பூர்த்தியைக் கௌரவிக்கு முகமாக கலை இலக்கிய ஒன்றுகூடல் நிகழ்வு யாழ்ப்பாணம் திருநெல்வேலி இந்து வாலிபர்சங்க மண்டபத்தில் இடம்பெற்றது. 'தாயகம்' சஞ்சிகையின் ஆசிரியர் க. தணிகாசலம் தலைமையில் இந்நிகழ்வு நடாத்தப்பட்டது. சட்டத்தரணி சோ. தேவராஜா வரவேற்புரை நிகழ்த்தினார்.

கலை இலக்கியப் படைப்பாளிகள், ஆர்வலர்கள், கல்விசார் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் பலர் கலந்துகொண்டு சிறப்பித்த நிகழ்வில் முருகையனின் கட்டுரைகள்பற்றி பேராசிரியர் அ. சண்முகதாஸும், கவிதைகள் பற்றி பேராசிரியர் சி. சிவசேகரமும், நாடகங்கள் பற்றி தே. தேவானந்தும் மதிப்புரைகளை நிகழ்த்தினார்கள். திரு. ஏ. ஜே. கனகரட்ணா, குழந்தை ம. சண்முகலிங்கம், கலாநிதி செ. திருநாவுக்கரசு, திருமதி ஈஸ்வரி தர்மலிங்கம், திருமதி பகீரதி கணேசதுரை, சி. கா. செந்தில்வேல் ஆகியோர் வாழ்த்துரைகளை வழங்கினார்கள்.

கவிஞர் சோ. பத்மநாதன் தலைமையில் "கவிதைக்குள் உயிர் ஒன்றிவாழ்" என்னும் தலைப்பில் கவியரங்கு இடம்பெற்றது. இக்கவியரங்கில் ரி. திருக்குமரன், அ. பகீரதன், த. ஜெயசீலன், க. வேல்தஞ்சன் ஆகியோர் கலந்து கவியுரைத்துச் சிறப்பித்தனர்.

ஆய்வுநூல் வெளியீடு

மௌலவி இஸட் ஏ. முகம்மது ஹனிபா எழுதிய 'உடுநுவரை முஸ்லீம்கள் வாழ்வில் ஸூபித் தரீக்காக்கள்' ஆய்வு நூலின் வெளியீட்டு விழா அண்மையில் உடுநுவரை கெட்டகும்பர ஜும்ஆ பள்ளிவாசல் கலாசார மண்டபத்தில் பெருந்திரளான மக்கள் முன்னிலையில் நடைபெற்றது. இவ்விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பித்த மேல்மாகாண ஆளுநர் அலவி மௌலானா அவர்கள் நூல் ஆசிரியரிடமிருந்து முதற்பிரதியைப் பெற்றுக் கொண்டார்கள்.

"தேசத்தின் கண்" (தேச நேத்ரு) விருது

தேசிய சாகித்திய விழாவின் ஆரம்பநாள் வைபவத்தில் மல்லிகை ஆசிரியர் திரு. டொமினிக் ஜீவா, திரு. மான மக்கீன் ஆகியோர் பல ஆண்டுகளாக கலை இலக்கிய சேவை செய்தமைக்காக "தேசத்தின் கண்" (நேசநேத்ரு) என்ற கலாசார விருதினை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடமிருந்து பெற்றுக் கொண்டனர்.

ஏறாவூர் வரலாறு

"ஏறாவூர் வரலாறு" நூல் வெளியீடு ஏறாவூர் வரலாற்று ஆய்வு மையத்தின் தலைவர் திரு. ஏ. எஸ். இஸ்ஸதீன் தலைமையில் ஏறாவூர் டாக்டர் அஹமட் பரீத் விளையாட்டரங்கில் நடைபெற்றது. பிரதம அதிதியாக கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் எஸ். ரவீந்திர நாத் கலந்து சிறப்பித்துளார்கள். பலதுறைசார் கல்விமான்கள் சிறப்புப் பேச்சாளராகக் கலந்துகொள்ள நூலின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆய்வுரையை தென்கிழக்குப் பல்கலைக்கழக தமிழ்த்துறை இணைப்பாளர் ஜனாப் றமீஸ் அப்துல்லாஹ் அவர்கள் நிகழ்த்தினார்கள்.

கொக்கிளாய் மாமி

"ஞானம்" கலை இலக்கியப் பண்ணை ஏற்பாட்டில் கலாபூஷணம் புலோலியூர் க. சதாசிவம் ஞாபகார்த்த சிறுகதைப் போட்டியில் பரிசில் பெற்ற எழுத்தாளர்களின் சிறுகதைகள் அடங்கிய 'கொக்கிளாய் மாமி' என்னும் சிறுகதைத் தொகுதி கொழும்புத் தமிழ்ச்சங்க மண்டபத்தில் அண்மையில் வெளியிடப்பட்டது. திரு. என். சோமகாந்தன் தலைமையில் நடைபெற்ற விழாவில் பரிசளிப்பு அறிமுகத்தை ஞானம் ஆசிரியர் தி. ஞானசேகரன் வழங்கினார். பணப்பரிசில்கள் பெற்ற முதல் மூன்று எழுத்தாளர்களுக்கும் திருமதி சதாசிவம் அவர்கள் பரிசில்களை வழங்கினார். நூல்வெளியீட்டுரையை திரு. வி. ஏ. திருஞானசுந்தரம் வழங்க, நூலின் முதற்பிரதியை தொகுப்பாசிரியரிடமிருந்து புரவலர் அல்ஹாஜ் ஹாசிம் உமர் அவர்கள் பெற்றுக் கொண்டார். நூலின் ஆய்வுரையை தெளிவான கருத்துக்களுடன் திருமதி வசந்தி தயாபரன் அவர்கள் வழங்கிச் சிறப்பித்தார்கள். இந்நிகழ்வில் 'சாஹித்ய ரத்னா' விருதை அண்மையில் பெற்ற மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவா அவர்கள் கௌரவிக்கப்பட்டார்கள்.

ஜென்மம்

நீர்வை பொன்னையனின் 'ஜென்மம்' சிறுகதைத் தொகுதியின் ஆய்வரங்கும் கலந்துரையாடலும் விபவி கலாசார மையம், மற்றும் இலங்கை முற்போக்குக் கலை இலக்கியப் பேரவையின் ஏற்பாட்டில் வெள்ளவத்தை பெண்கள் கல்வி ஆய்வு நிறுவன கேட்போர் கூடத்தில் தோழர் த. சிவசுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றது. ஆய்வரங்கில் கலாநிதி வ. மகேஸ்வரன் திரு. தெ. மதுசூதனன் கலந்துகொண்டு காத்திரமான ஆய்வுகளை வழங்கினார்கள். அதைத் தொடர்ந்து நடைபெற்ற கலந்துரையாடலில் எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்கள், விமர்சகர்கள் பங்குகொண்டு தமது கருத்துக்களை வழங்கினார்கள். இலங்கை முற்போக்குக் கலை இலக்கியப் பேரவை எழுத்தாளர்கள் பலர் கலந்து சிறப்பித்தமை விஷேட அம்சமாகும்.

வாழ்வில் வசந்தங்கள் - பாகம் 2

பருத்தியூர் பால வயிரவநாதன் எழுதிய 'வாழ்வில் வசந்தங்கள் – பாகம் 2 நூல் வெளியீட்டுவிழா அண்மையில் கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் மேல் நீதிமன்ற நீதிபதி ஜே. விஸ்வநாதன் தலைமையில் இடம்பெற்றது. மணிமேகலைப் பிரசுரமாக வெளிவந்திருக்கும் இந்நூல் வெளியீட்டு விழாவுக்கு பிரதம விருந்தினராக பேராசிரியர் சி. பத்மநாதன் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள். திணைக்களத் தலைவர்களும், பத்திரிகையாளர்களும் வாழ்த்துரை வழங்கினார்கள். வெளியீட்டுரையைத் தொடர்ந்து புரவலர் ஹாசிம் உமர் நூலின் முதற்பிரதியைப் பெற்றுக் கொண்டார்கள். பேராசிரியர் சோ. சந்திரசேகரன் அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார்கள்.

ஈழம் சிவக்கிறது :

'ஈழம் சிவக்கிறது' என்ற நூலை வெளியிட்ட தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ. நெடுமாறனுக்கும், அந்த இயக்கத்தைச் சேர்ந்த பதிப்பாளர் சாகுல் அமீதுக்கும் எதிராக சென்னை நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

'கா' என்ற புதிய சஞ்சிகை

மட்டக்களப்பு ஆரயம்பதியிலிருந்து 'கா' இந்தவருடம் ஆவணிமாதம் முதல் பல்துறைசார் இலக்கிய அம்சங்களையும் வெளிவந்துகொண்டிருக்கின்றது. இச் சஞ்சிகையின் ஆசிரியர் குழுவில் ச. மணிசேகரன், வி. கௌரிபாலன் ஆகியோரும் வேறும் இலக்கிய நண்பர்களும் கூட்டாகச் செயலாற்றிவருகின்றார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'புதிய சிந்தனை' நாடகநூல்

ஞானம் பதிப்பக வெளியீடான மலையகத்தின் நாடகக் கலைஞர் வாசுதேவன் எழுதிய 'புதிய சிந்தனை' நாடக நூலில் அறிமுகவிழா அண்மையில் கம்பளை ஸ்ரீ முத்துமாரி அம்மன் தமிழ் மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது. பிரதம அதிதியாக மத்திய மாகாண சபைத் தலைவர் திரு. மதியுகராசா கலந்து சிறப்பித்தார். நூலின் முதற்பிரதியை திரு. எம். முத்துக்குமார் பிரதம அதிதியிடமிருந்து பெற்றுக் கொண்டார்.

'மலைச் சுவடுகள்'

'மலைச் சுவடுகள்' என்ற கவிதை நூலின் வெளியீட்டுவிழா கலாபூஷணம் சாரல் நாடன் தலைமையில் ஹட்டன் ஸ்ரீ மாணிக்கப் பிள்ளையார் ஆலய பிரதான மண்டபத்தில் நடைபெற்றது. மலையகக் கவிஞர் ஹட்டன் மாரிமுத்து சிவகுமாரின் 'மலைச் சுவடுகள்' வெளியீட்டுவிழாவுக்கு மத்திய மாகாணக் கல்வி அமைச்சர் வே. இராதாக்கிருஷ்ணன் அவர்கள் பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பித்தார்கள். இந்நிகழ்வில் மல்லிகை சி. குமார், இரா கோபாலன், கலாபூஷணம் புண்ணியாமீன், திருமதி சாந்தா இராஜகோபால் ஆகிய இலக்கியவாதிகள் கௌரவிக்கப்பட்டார்கள். தி. ஞானசேகரன் சிறுகதைகள் என்ற நூலின் பிரதிகள் முக்கிய படைப்பாளிகளுக்கு அன்பாளிப்பாக வழங்கப்பட்டன

புலோலியூர் ஆ. இரத்தினவேலோன் சிறுகதைகள் ஆய்வுநூல்

யாழ். பல்கலைக்கழகத்தில் ஆய்வுக்காக செல்வி. ம. திருமகள் புலோலியூர். ஆ. இரத்தினவேலோன் எழுதிய சிறுகதைகளை எடுத்துக் கொண்டார். அந்த ஆய்வுநூல் அண்மையில் கொழும்பு வெள்ளவத்தை பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனக் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற நிகழ்வில் வெளியிட்டு வைக்கப்பட்டது. பிரதம அதிதியாக புரவலர் ஹாசிம் உமர் அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். நூலின் சிறப்புப் பிரதியை திரு. இரத்தினவேலோனிடமிருந்து திருமதி அனுஷா சுந்தரேஷன் பெற்றுக் கொண்டார். மதிப்பீட்டுரையை திரு. ஈ. வி. டேவிட்ராஜ், தினக்குரல் பிரதம ஆசிரியர் வி. தனபாலசிங்கம் ஆகியோர் வழங்கினார்கள். எழுத்தாளர் தெளிவத்தை ஜோசப் தலைமை ஏற்றுச் சிறப்பித்தார்.

'ஒரு விதை நெல்'

எழுத்தாளர் மு. சிவலிங்கம் எழுதியுள்ள 'ஒரு விதை நெல்' என்ற சிறுகதைத் தொகுதியின் வெளியீட்டுவிழா கொட்டகலை தமிழ் மகாவித்தியாலயத்தில் உதவிக் கல்விப் பணிப்பாளர் மொழிவரதன் தலைமையில் நடைபெற்றது. அறிமுக உரைகளை திரு. வ. செல்வராஜ், ஆசிரியர் ஆ. செல்வேந்திரன், கலாசாலை உப அதிபர் சந்திரலேகா கிங்ஸ்லி ஆகியோர் நிகழ்த்தினார்கள். மலையகத் தமிழரின் சமூக வாழ்க்கையை ஆய்வு ரீதியில் எடுத்துக்காட்டியிருக்கின்ற 15 சிறுகதைகள் இத்தொகுதியில் அடங்கியுள்ளன.

'ஒரு பிடி மண்'

சிறுகதை எழுத்தாளர் கனகசபை தேவகடாச்சம் எழுதிய 'ஒரு பிடி மண்' சிறுகதைத் தொகுதியின் அறிமுக நிகழ்வு திருகோணமலை பெருந்தெரு விக்னேஸ்வரா மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது. கல்லூரியின் அதிபரும் இலங்கைத் தமிழாசிரியர் சங்கத்தின் தலைவருமான திரு. என். இராஜநாதனின் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் நூலின் முதற்பிரதியை பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் த. மகாசிவம் அவர்கள் திரு. மு. வடிவேலுவிடமிருந்து பெற்றுக் கொண்டார். இந்த நூல் விற்பனை மூலம் பெறப்படும் பணம் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு முழுமையாகப் பயன்படுத்தப்படும் என்று தனது ஏற்புரையில் நூலாசிரியர் திரு. க. தேவகடாட்சம் குறிப்பிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவம்பர் 07

கோ. நடேசய்யரின் நினைவு தினம்

– அந்தனி ஜீவா

மலையக மேம்பாட்டின் பெருமைக்கும், புகழுக்கும் காரணமாக திகழ்ந்தவரும், இலங்கை பத்திரிகைத் துறையின் முன்னோடிகளில் ஒருவரும், மலையகத்தில் முதல் தொழிற்சங்கம் அமைத்தவரும், மலையகத்தின் இலக்கிய முதல்வருமான கோ. நடேசய்யர் மறைந்து அரை நூற்றாண்டுகளாகி விட்டன.

ஆனால்... அத்தகைய பெருமகனை மலையக தொழிற்சங்கங்கள் நினைவு கூருவதில்லை...

நவம்பர் 07–ம் திகதி அவர் மறைந்த தினமாகும்.

மலையக தொழிற்சங்க, பத்திரிகை, அரசியல் ஆகியவற்றுக்கு வித்திட்ட அவரை மலையக மக்கள் மறந்துவிட்டது வேதனைக்குரிய விடயமாகும்.

கோ. நடேசய்யர் ஒரு யுகபுருஷர். அதனால் தான் இலங்கையின் சுதந்திர பொன்விழாவின் பொழுது ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்க தொழிற்சங்கவாதிகளில் முதலில் இவர் பெயரையே குறிப்பிட்டு பேசினார்.

இலங்கை வாழ்ந்த இந்தியத்தமிழருக்கு மாத்திரமன்றி சமுதாய உணர்வோடு நலிவுற்ற மக்கள் அனைவருக்காகவும் குரல் எழுப்பிய பெருமகன் கோ. நடேசய்யர்

தேசபக்தன் கோ. நடேசய்யரின் ஆற்றலையும், ஆளுமையையும் அவரின் பாரிய பன்முக பங்களிப்பையும் வெளிச்சத்திற்கு கொண்டு வந்த பெருமை எழுத்தாளரும், ஆய்வாளருமான சாரல் நாடனையும் மலையக கலை இலக்கியப் பேரவையையும் சாரும்.

கலாநிதி குமாரி ஜயவர்தனாவால் தொழிற்சங்க வாதியாக மாத்திரமே அறியப்பட்டிருந்த கோ. நடேசய்யரின் வரலாற்றை தேசபக்தன் கோ. நடேசய்யர் என்ற நூலின் மூலமும் அவரின் பத்திரிகைப் பணிகளைப்பற்றி "பத்திரிகையாளர் நடேசய்யர்" என்ற நூலின் மூலமும் பல உண்மைத்தகவல்களை வெளிச்சத்திற்கு கொண்டு வந்தார் சாரல் நாடன். இந்த இரண்டு நூல்களுமே தேசிய அரச சாகித்திய விருதுகளைப் பெற்றன.

இலங்கை அரசியலிலும் தொழிற்சங்கத் துறையிலும் தனது சுவடுகளை பதித்த சோ. நடேசய்யர் வரலாற்று புகழ்மிக்க தஞ்சாவூரில் 1891–ம் ஆண்டு பிறந்தவர். தென்னிந்திய வியாபாரிகள் சங்க ஆண்டுவிழாவில் கலந்து கொள்வதற்காக 1919–ம் ஆண்டு நடேசய்யர் இலங்கை வந்தார். இலங்கை வந்த இவர் மலையக தோட்டங்களில் இந்தியத் தொழிலாளர்கள் படும் துன்பங்களை நேரில் கண்டறிந்தார். இந்தப் பாவப்பட்ட மக்களின் விடிவுக்காக செயல்பட வேண்டும் என விரும்பினார். 1920–ம் ஆண்டு மீண்டும் இலங்கைக்கு வந்தார். 1947–ம் ஆண்டு நவம்பர் 07–ம் திகதி மரணிக்கும் வரை மலையக மக்களுக்காக உழைத்தார்.

இன்று இலங்கையில் இந்திய வம்சாவழியினர் அனுபவிக்கும் உரிமைகளுக்கு வித்திட்டவர் தஞ்சாவூரைச் சேர்ந்த கோ. நடேசய்யர் தான் என்ற உண்மையை தேசிய சுவடிகூடத் திணைக் களத்திலுள்ள பழைய பத்திரிகைகளும், நாடாளுமன்ற அறிக்கைகளும் சான்று பகர்கின்றன.

மலை முகடுகளிலும், தேயிலைக் காடுகளிலும் தங்கள் வாழ்வை அர்ப்பணித்த மனித ஜீவன்களைப் பற்றிக் குரல் கொடுத்த ஒரு மாமனிதனை, மறக்காமல் நினைவு கூருவது மலையகத்தவர் ஒவ்வொருவரின் கடமையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கிய கலாவித்தகி

நீர்கொழும்பு இந்து கலாசார மண்டபத்தில் நடைபெற்ற விழாவில் மன்றத் தலைவரும் விழாத் தலைவருமாகிய பொ. ஜெயராமன் அவர்கள் திருமதி பத்மா சோமகாந்தன் அவர்களுக்கு அவரின் நீண்ட கால இலக்கிய சேவையைப் பாராட்டி 'இலக்கிய கலாவித்தகி' என்னும் பட்டத்தை இந்து இளைஞர் மன்றத்தின் சார்பில் வழங்கிக் கௌரவித்தார். முதுபெரும் பெண் எழுத்தாளரைக் கௌரவிக்கும் இவ்வைபவத்தில் இந்து இளைஞர் மன்ற உறுப்பினர்கள் உட்பட, கலாசூரி ஆ. சிவநேசச் செல்வன், கலைச்செம்மல் எம். எஸ். விசுவநாதன், எழுத்தாளர் என். சோமகாந்தன் ஆகியோரும் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள்.

பல்கலைக்கழகங்களில் பதவி உயர்வுகள்

அண்மையில் யாழ் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறைப் பேராசிரியராக கலாநிதி எஸ். சிவலிங்கராசா அவர்களும் பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவராக கலாநிதி துரை மனோகரன் அவர்களும் பதவி உயர்வு பெற்றுள்ளமை மகிழ்ச்சியான செய்தி. பொதுவாக நம் நாட்டு பல்கலைக்கழகங்கள் படைப்பாளிகளைத் தூரத்திலேதான் வைத்திருக்கின்றன. தமிழ்நாட்டில் நிலமை அப்படி அல்ல. அங்கு படைப்பாளிகளுக்கும், பல்கலைக்கழகங்களுக்கும் நெருக்கமான தொடர்பு உண்டு. சில பல்கலைக்கழகங்களில் படைப்பாளிகள் வருகை விரிவுரையாளர்களாகக்கூட இருக்கின்றனர். அந்த நிலமை நமது நாட்டுப் பல்கலைக்கழகங்களில் ஏற்படுமா ? புதிதாகப் பதவி உயர்வு பெற்றோரின் செயற்பாடுகளிலேதான் இது தங்கியுள்ளது.

யாழ் பல்கலைக்கழகத்தின் கௌரவ கலாநிதிப் பட்டம் பெறுவோர்

ஒக்ரோபர் 6, 7ம் திகதிகளில் யாழ். பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழா நடைபெற்றது. இரண்டு நாட்களிலும் இடம்பெற்ற பத்து அமர்வுகளில் 2375 மாணவர்கள் பட்டம் பெற்றனர். சிறப்பு நிகழ்வாக கௌரவ கலாநிதிப் பட்டங்கள் அறுவருக்கு வழங்கப்பட்டன. எழுத்தாளர் முல்லைமணி வே. சுப்பிரமணியம், கவிஞர் வித்துவான் சவரிமுத்து அடைக்கலமுத்து, திரு. கணபதிப்பிள்ளை சிவராமலிங்கம்பிள்ளை, திரு. வல்லிபுரம் கந்தசாமி, வைத்தியகலாநிதி செல்வி தவமலர் கனகரத்தினம், பேராசிரியர் வேலுப்பிள்ளை தர்மரட்ணம் ஆகியோர் கௌரவ கலாநிதிப் பட்டம் பெற்றனர்.

வடமராட்சியின் இசைப் பாரம்பரியம்

ஊடகவியலாளர் திரு. வரதராஜன் சங்கீதபூஷணம் கலாபூஷணம் திருமதி இராசம்மா மரியாம்பிள்ளை அவர்கள் நினைவாக "வடமராச்சியின் இசைப் பாரம்பரியம்" என்னும் நூலைத் தொகுத்துத்தந்துள்ளார்கள். திருமதி இராசம்மா மரியாம்பிள்ளை அவர்களைப்பற்றி எழுதியுள்ள நினைவுக் கட்டுரை ஒவ்வொன்றும் தனிநபர் பற்றிய தகவல்களாக இல்லாமல் வடமராச்சியின் இசைப்பாரம்பரியம், கல்விப்பாரம்பரியம், இலக்கியவளம் போன்ற விடயங்களைத் தருவனவாகவே அமைந்துள்ளது. கலாநிதி எஸ். சிவலிங்கராஜாவால் 1984 ஆம் ஆண்டு எழுதப்பட்ட "வடமராச்சியின் கல்விப்பாரம்பரியமும் இலக்கிய வளமும்" என்ற நூலிலிருந்து தொகுக்கப்பட்ட கட்டுரையும், "வடமராச்சியின் இசைப்பாரம்பரியம் ஓர் அறிமுகக் குறிப்பு" என்ற பேராசிரியர் கா. சிவத்தம்பி எழுதிய கட்டுரையும் இந்நூலில் இடம்பெற்றுள்ளன.

நூல் வெளியீடுகள்

- 'அந்தப் பௌர்ணமியில்' – என்ற கவிதைநூல் வெளியீட்டுவிழா தர்கா நகர் அல்–ஹம்ரா முஸ்லிம் மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது. தர்கா நகர் றம்ஸியாவின் நூல் வெளியீட்டு விழாவில் தகவல் ஊடகப் பிரதி அமைச்சர் எம். எச். சேகு இஸ்ஸதீன் பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பித்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- மலையக எழுத்தாளர்களின் நூல் அறிமுகவிழா – அட்டன் சக்தி மண்டபத்தில் அட்டன் தமிழ்ச்சங்கமும், கண்டித் தமிழ்ச் சங்கமும் இணைந்து மலையக எழுத்தாளர்களின் நூல் அறிமுகவிழாவை சிறப்பாக நடத்தின. தேசிய நிலைய கல்விப்பணிப்பாளர் திரு. சு. முரளிதரன் தலைமையில் நடைபெற்ற விழாவுக்கு மத்திய மாகாணக் கல்வி அமைச்சர் வே. இராதாக்கிருஷ்ணன் அவர்கள் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்கள். மலையக எழுத்தாளர்களான மு. சிவலிங்கம் எழுதிய 'ஒரு விதை நெல்', பாலு சங்குப்பிள்ளையின் 'காதலனுக்கு கல்யாணம்', சாரல் நாடனின் 'கண்டி இராச்சியம்', அமரர் க. ப. லிங்கதாஸனின் 'ஔவையின் அமுத மொழிகளும் விளக்கங்களும்', பசுமை பெரியசாமியின் 'முடிந்தால் மன்னித்துவிடு' அந்தனி ஜீவாவின் 'நெஞ்சில் பதிந்த ஐரோப்பிய பயணம்'', பெ. லோகேஸ்வரனின் 'என் இனியவளுக்கு', இரா கோபாலனின் 'வாழ்வும் வயலும்' ஆகியோரது எட்டு நூல்களின் அறிமுகவிழா ஒரே மேடையில் நடாத்தப்பட்டமை வரவேற்புக்குரியது.

- 'நீதிக்காய் போராடியவனே' – என்ற கவிதைத் தொகுப்பு நூல் மடவளை மதீனா தேசிய பாடசாலையில் நடைபெற்றது. பிரதம அதிதியாக திரு. ரவூப் ஹக்கீம் கலந்து சிறப்பித்தார்கள்.

- 'விடுதலை பேரொளி' – ஈழமுரசு பத்திரிகை நிறுவனத்தினரால் பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் விடுதலை பேரொளி நூல் வெளியீட்டு விழா திரு. மணி நாகேசின் தலைமையில் நடைபெற்றது. திரு. ஜோசப் பரராசா நூலை வெளியிட்டு வைத்து சிறப்புரை நிகழ்த்தினார். நூலின் முதற்பிரதியை திருமதி முத்துக்குமாரசாமி சற்குணம் பெற்றுக் கொண்டார்கள். ஊடகவியலாளர்கள் திரு. சிவகுரு பிறேம், திரு. பற்றிமாகரன் ஆகியோர் நூல்பற்றி சிறப்புரையாற்றினார்கள். இந் நிகழ்வில் கலைநிகழ்ச்சிகளும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

- 'காதலி தேடிக் கொடுத்த மனைவி' – ஆர். ராஜலிங்கத்தின் காதலி தேடிக் கொடுத்த மனைவி என்ற நூலின் அறிமுக விழா கொழும்புத் தமிழ்ச்சங்கத்தில் நடைபெற்றது. 'விஜய்' பத்திரிகையின் பிரதம ஆசிரியர் இரா சடகோபன் நூலின் ஆய்வுரையை நிகழ்த்தினார். வி. ஏ. திருஞானசுந்தரத்தின் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட பேராசிரியர் சோ. சந்திரசேகரத்திடமிருந்து முதற்பிரதியை புரவலர் ஹாசிம் உமர் பெற்றுக் கொண்டார்கள். தினக்குரல் பிரதம ஆசிரியர் வீ. தனபாலசிங்கத்திடமிருந்து திருமதி வீ. ஜே. ஜெயக்குமார் சிறப்புப் பிரதியை பெற்றுக் கொண்டார்கள்.

- 'இன்னும் மனிதர்களாக .....! – காத்தான்குடியைப் பிறப்பிடமாகக் கொண்ட எம். எம். ஜூனைதீனின் கவிதைத் தொகுதியான 'இன்னும் மனிதர்களாக ......'! தவ இலக்கிய மன்றத்தின் ஒன்பதாவது வெளியீடாக வந்திருக்கின்றது. இத்தொகுப்பில் முப்பத்தெட்டு கவிதைகள் அடங்கியுள்ளன. இத்தொகுதி ஈழத்தின் காத்திரமான கவிதைப் பாரம்பரியத்துடன் சேர்ந்து கொள்கிறது என்று கலாநிதி செ. யோகராசா குறிப்பிட்டுள்ளார்.

- 'அழகான இருட்டு' – காத்தான்குடியைச் சேர்ந்த எம். ஐ. எம். சுபைரின் புதுக்கவிதைத் தொகுப்பு 'அழகான இருட்டு'. மரபுக்கவிதை, புதுக் கவிதைகளையும் எழுதும் நூல் ஆசிரியர் சிறுகதைகளையும் எழுதி வருகின்றார். இந்நூலின் முன்னுரையை திரு. வாசுதேவன் எழுதியுள்ளார்.

- 'சிரட்டையும் மண்ணும்' – நாச்சியா தீவு பர்வீனின் 'சிரட்டையும் மண்ணும்' என்னும் கவிதைநூல் வெளியீடு அனுராதபுரம் ஸாஹிரா மகா வித்தியாலய பிரதான மண்டபத்தில் நடைபெற்றது. அனுராதபுரம் ப்ரிஸம் சமூக அபிவிருத்தி அமைப்பு இந் நூல் வெளியீட்டுக்கான அனுசரணையை வழங்கியிருந்தது. அன்பு ஜவஹர்ஷா தலைமையில் நடைபெற்ற வெளியீட்டுவிழாவில் அறிமுகவுரையை எம். எஸ். லத்தீப்பும், நூல் ஆய்வினை மேமன்கவியும் ஆற்ற, சிறப்புரையை சிவஸ்ரீ பா. ஞானச்சந்திரன் குருக்களும் கருத்துரையை ஏ. ஏ. ஜப்பாரும் நிகழ்த்தினார்கள். ❏

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உனக்குள் கட்டுண்ட வேளையில்
உலகம் மறந்ததை
அறியாமலிருந்தேன்

ஆழ்ந்த கடின குரல் ஒலிகளின்
ஆதிக்கம் கண்டு
அவ்வப்போது அதிர்வுகள்,
திடீரென
எனக்குள் விழிப்பு

சங்கிலியைக் கயிறாக்கி
இறுகக் கட்டப்பட்ட
பின்னங் கைகள்,

உணர்வைச் சூறையாடி
உடைக்கப்பட்ட
குருதிச் சிறுதட்டுக்கள்
புலன்கள்
தடைசெய்யப்பட்ட
பாதுகாப்பு வலயங்கள்
தொடர்ந்தன....
அன்பின் உருவங்கள்

அகந்தையுடன்
துரத்தியதில்
ஓடி ஓடி களைப்புற்று
மீண்டும்
உன்னருகில்
நிர்க்கதியானேன்

யாராலோ
சூறையாடப்பட்ட
என் நிர்வாணக் கனவுகள்
மழையில்
கரைந்து போயின
இன்னும்
கறை படிந்த
உணர்வலைகளின்
ஆதிக்கம்,
காற்று புகக் கதியற்று
நிரம்பியிருக்கிறது.

செல்வி. சுப்ரமணியம் சுதாஜினி
(பேராதனை வளாகம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுதத் தூண்டும் எண்ணங்கள்

கலாநிதி துரை. மனோகரன்

பதவிப் போட்டியும் பல காட்சிகளும்

பெரிய அதிகாரிப் பதவிக்குப் போட்டியிடும் முக்கியஸ்தர்கள் தத்தம் எதிர்காலக் கற்பனைகளையும், சிந்தனைகளையும் எழுத்தில் கொண்டு வந்துள்ளனர். மேடை மேடையாக ஏறி இறங்கிப் பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றனர். இப்பதவிக்குப் போட்டியிடும் முக்கியஸ்தர்களில் ஒருவர் எவ்வளவு வாக்குறுதிகளை அள்ளி வீச முடியுமோ, அந்த அளவுக்கு வாரி வழங்கும் வள்ளலாக விளங்குகிறார். தமது பேரினவாதச் சகாக்களைத் திருப்திப்படுத்துவதற்காகக் காலாவதியாகிப்போன ஒற்றையாட்சி முறையைத் தூக்கிப் பிடித்துக்கொண்டு மக்களிடம் வாக்குக் கேட்கிறார். சாதாரண பொதுமக்களுக்கோ ஒற்றையாட்சி, சமஷ்டி ஆட்சி என்பவை பற்றிய வேறுபாடுகள் எவையும் தெரியாது. உரத்துக் கத்திக் குழறி யார் பேசுகிறார்களோ, அவர்களிடமே விஷயம் உண்டு என்று கருதி, அவர்களுக்கே தமது பொன்னான வாக்குகள் என்பது போல் அரைத் தூக்கத்தில் தீர்மானித்துக் கொள் கின்றனர். தங்களை உணர்ச்சிவசப்படுத்தக்கூடியவர்களே உண்மையான அரசியல்வாதிகள் என்ற "அரசியற்கொள்கையைக்" கொண்டிருக்கின்றனர். அதிகமான கற்பனைகளை ஆரவாரமாக மேடைகளில் வெளியிடுபவர்களைத் தெய்வம் போல் மக்கள் மதிக்கின்றனர். நாட்டைக் காப்பதற்கென்றே பிறவியெடுத்து வந்தவர்கள் என்று கருதிக் கொள்கின்றனர். பெரிய அதிகாரிப் பதவிக்குப் போட்டியிடுபவர்களிற் சிலர் இதனை மிக நன்றாக அறிந்து வைத்துள்ளனர். மக்கள் முன் நல்ல விதமாக நடித்து, அவர்களின் ஆதரவைத் திரட்டுவதில் கைதேர்ந்தவர்களாக அவர்கள் உள்ளனர்.



ஏற்கனவே பெரிய அதிகாரிப் பதவிகளில் இருப்பவர்கள் சிலருக்கு மூளையில் ஏதாவது பிசகோ என்று எண்ணத் தோன்றும்படி அவர்கள் நடந்துகொள்கின்றனர். ஒவ்வொரு நேரம் ஒவ்வொரு மாதிரி அவர்கள் பேசுகின்றனர்; நடந்துகொள்கின்றனர். தங்கள் பக்கத்தில் பெரிய அதிகாரிப் பதவிக்குப் போட்டியிடுபவரை ஆதரிப்பது போலவும் பேசுகின்றனர். எதிர்ப்பது போலவும் பேசுகின்றனர். மக்களோ குழம்பிப் போய் இருக்கின்றனர்.

சிவப்புச் சட்டைப் பேரினவாதிகளும், பேரினவாதக் குருக்கள்மாரும் பொதுமக்களை எவ்வாறு ஏமாற்றிப் பிழைக்கலாம் என்பதை மிக நன்றாகவே தெரிந்துள்ளனர். தமது ஆட்டங்களுக்குப் பொருத்தமான ஒருவரைப் பெரிய அதிகாரிப் பதவிக்குத் தேடிப்பிடித்து, அவருக்குச் சாமரை வீசியும், மற்றவர்களுக்குச் சேறு பூசியும் சேவை செய்கின்றனர். இவர்களுள் ஒரு சாரார் மார்க்சியத்தைக் காலில் போட்டு மிதித்தும், மறுசாரார் தர்மத்தைக் காலில் போட்டுத் துவைத்தும் தாம் எத்தகையவர்கள் என்பதை உலகுக்கு இனங்காட்டிக்கொண்டிருக்கின்றனர்.

ஒரு நல்ல மார்க்சியவாதி என்று தமிழ்மக்களால் நம்பப்பட்டுவந்த ஓர் அரசியல்வாதி, இப்போது சிவப்புச்சட்டைப் பேரினவாதிகளுடனும், பேரினவாதக் குருக்கள்மாரிடமும் கூட்டுச் சேர்ந்தவருக்கு ஆதரவு தெரிவித்து, சிரித்து மகிழ்ந்து குலாவித் திரிகிறார்; படுபிற்போக்கான பேரினவாதிகளுக்கு ஆதரவு தெரிவித்து வருகிறார். இதில் ஆச்சரியத்துக்குரிய விடயம் என்னவெனில், பெரிய அதிகாரப்பதவிக்கு இரு வெவ்வேறு இடதுசாரி அரசியல்வாதிகள் போட்டியிடுகின்றபோதிலும், தார்மீகரீதியாகவும், கொள்கைரீதியாகவும் அவர்களில் ஒருவருக்காவது தமது ஆதரவை வழங்காமல், பேரினவாதிகளின் கதாநாயகருக்கு அவர் ஆதரவு வழங்கவேண்டியதன் அவசியம் என்ன? மார்க்சியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேசிய அந்த அரசியல்வாதியின் தற்போதைய நிலையை நினைக்கும்போது, வேதனையாகவும், பரிதாபமாகவும் இருக்கிறது.

தமிழ் அரசியல்வாதிகள் சிலரின் செயற்பாடுகளைப் பார்க்கும்போது வேடிக்கையாக இருக்கும். அவர்களுக்குத் தமிழ்மக்களைப் பற்றிச் சிந்திப்பதற்கு நேரம் என்பதே கிடைப்பதில்லை. பேரின வாதிகளுக்கு ஆலவட்டம் பிடிப்பதற்கும், ஆலோசனைகள் வழங்குவதற்குமே அவர்களுக்கு நேரம் போதுமானதாக இருக்கிறது. தமிழ் மக்களின் பாதுகாப்புக் குறித்து எந்தவித அக்கறையும் செலுத்தாத அவர்கள், தமது விசுவாசத்துக்குரிய பேரினவாதத் தலைவர்களின் பாதுகாப்புப் பற்றி என்னமாதிரிக் கவனம் செலுத்துகிறார்கள்! சிலரின் "சிந்தனைகள்" பற்றிக் கருத்துத் தெரிவிப்ப தற்கு, அவர்களாலேயே இந்தத் தமிழ் அரசியல்வாதிகளுக்குச் சந்தர்ப்பம் வழங்கப் பட்டிருந்தபோதிலும், சமஷ்டியாட்சிக்கு எதிரான, தமிழர் தாயகக் கோட்பாட்டுக்கு எதிரான, சுனாமிப் பொதுக்கட்டமைப்புக்கு எதிரான "சிந்தனைகளை" எந்தவித எதிர்ப்புமின்றி ஏற்றுக்கொண்டு, தமிழ்மக்களுக்கு உபதேசம் செய்யும்போது மாத்திரம், தாங்கள் இன்னமும் தமிழர் தாயகம், சுயநிர்ணய உரிமை, சமஷ்டி ஆட்சி முதலிய கொள்கைகளைத் கொண்டிருப்பதாகப் பாசாங்கு செய்கின்றனர். "சிந்தனைகளில்" இடம்பெறும் தமிழர் விரோதக் கருத்துகள் பற்றித் தங்களது குறைந்தபட்ச எதிர்ப்புணர்வையாவது காட்டுவதற்கு வக்கில்லாத தமிழ் அரசியல்வாதி களாகவே அவர்கள் காட்சிதருகின்றனர். "சிந்தனைகளுக்கு" உரியவர்கள் பெரிய அதிகாரிப் பதவிப்போட்டியில் வெற்றிபெற்றால், அதன் இலாபம் தங்களுக்கும் சுவறும் என்ற சுயநலமே இதற்குக் காரணமாகும். தமிழர்களின் தலைவிதி அப்படி!

பெரிய அதிகாரிப் போட்டியில் யார்வென்றாலும், தமிழ் மக்களைப் பொறுத்தவரை பெரிதாக எந்தவித நன்மையும் ஏற்பட்டுவிடப் போவதில்லை. ஆனால், போட்டியிடும் முக்கியஸ்தர்களில் ஒருவர் வென்றால், நாட்டில் பேரினவாதம் மேலும் தலைவிரித்தாடும் இன்னொருவர் என்றால், போரும், சமதானமும் அற்ற சூழ்நிலை தொடரும். முன்னையவர் பேரினவாதிகளின் 'சுப்பர் ஸ்ராராக' விளங்குவார். மற்றையவர் 'ஜென்ரில்மன்' போர்வையில் வெளிநாட்டு உதவிகளைக் கொண்டு தமிழர்களின் உணர்வுகளைக் கொச்சைப்படுத்த முயல்வார். பெரிய அதிகாரிப் பதவிக்குப் போட்டியிடும் முக்கியஸ்தர்கள் தமிழ்மக்களைப் பொறுத்தவரையில், கொழுக்கட்டையும், மோதகமும் தான்.

கண்டியில் கலைநிகழ்ச்சிகள்

ஒக்ரோபர் மாதம் முழுவதும் கண்டி நகரில் அடுத்தடுத்து கலகலப்பான கலைநிகழ்ச்சிகளைக் கண்டு மகிழ முடிந்தது. கண்டி இந்து மாமன்றத்தினரின் நவராத்திரி விழாவில் இசை நடன நிகழ்ச்சிகளைக் கண்டியைச் சார்ந்த பல்வேறு அமைப்புகளும், பாடசாலைகளும் வழங்கின. நடன நிகழ்ச்சிகள் அனைத்தும் சிறப்பாக அமைந்திருந்தன. இசை நிகழ்ச்சி களில் இன்னும் போதிய அக்கறை எடுத்திருக்கலாம்.

கண்டி இலங்கை– இந்திய நட்புறவுச் சங்கம் 'கல்யாண ரங்கா' என்ற கலைநிகழ்ச்சியை ஆண்டுதோறும் நடத்திவருகிறது. இவ்வாண்டு நிகழ்ச்சியும் சிறப்பாக அமைந்திருந்தது. இளம் தமிழ், சிங்களக் கலைஞர்களின் நிகழ்ச்சிகளை ஒரே மேடையில் பார்த்து ரசிக்க முடிந்தது. ஓர் ஆண்கள் பாடசாலை அளித்த நிகழ்ச்சியைத் தவிர, மற்றைய நடன நிகழ்ச்சிகள் அனைத்தும் அருமையாக இருந்தன; வழக்கத்தைவிட வித்தியாசமாகவும் அமைந்தன.

கண்டிக் கலைக்கழகம் அண்மையில் தனது தீபாவளி விழாவை நடத்தியது. இசை, நடன நிகழ்ச்சிகள் சிறப்பாக இருந்தன. துரை. மனோகரன் தலைமையில் இடம் பெற்ற குற்றவாளிக் கூண்டில் தமிழ்த் திரைப்படங்கள் என்னும் வழக்காடுமன்றமும், செ. நடராஜா தலைமையில் நடைபெற்ற சொற்சிலம்பம் நிகழ்ச்சியும் சபையோரைக் கவரும் முறையில் அமைந்திருந்தன.

ஒரே மாதத்தில் மூன்று கலைவிழாக்களைக் காணக்கூடிய வாய்ப்பினை அளித்த கண்டி இந்துமாமன்றம், கண்டி இலங்கை இந்திய நட்புறவுச் சங்கம், கண்டிக் கலைக்கழகம் ஆகியவை பாராட்டுக்குரியவை.

❑

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராசிரியர் க. கணபதிப்பிள்ளையின்

"காதலியாற்றுப்படை"

— ஒரு பண்பாட்டுக் கோலப் பதிவு

— இ. இராஜேஸ்கண்ணன்

பேராசிரியர் கந்தசாமிப்பிள்ளை கணபதிப் பிள்ளை (1903 – 1968) அவர்கள் தமிழ் கல்வெட்டு ஆராய்ச்சியியல், மொழியியல் தமிழ் வரலாற்றியல், தமிழிலக்கிய வரலாற்றியல், தமிழர் வாழ்வியல் போன்ற ஆய்வுத் துறைகளுக்கு வலுச்சேர்த்த அறிஞர். இவற்றோடு நாடகம், கவிதை, நாவல் போன்ற படைப்புத் துறைகளிலும் நாட்டமுடையவராக இருந்தார். பேராசிரியர் வித்தியானந்தன். பேராசிரியர் கைலாசபதி, பேராசிரியர் சிவத்தம்பி, பேராசிரியர் தில்லை நாதன், பேராசிரியர் சண்முகதாஸ், பேராசிரியர் வேலுப்பிள்ளை போன்றவர்கள் இவரின் புலமைச் சிறப்பை உலகத்திற்கு அறியத்தரும் புலமைப் பாரம்பரியத்தில் வந்தவர்கள் என்பது பேராசிரியர் க. கணபதிப்பிள்ளையின் புலமைத்துவ முதன்மையினை உணரவைக்கும்.

பேராசிரியர் அவர்களின் படைப்புகள் பன்முகப்பட்டவை. இவர் நாநாடகம், மாணிக்க மாலை, சங்கிலி, இருநாடகம் போன்ற நாடகங் களைத் தந்துள்ளார். "இவரது நாடகங்கள் வாசிப்பதற்குரிய வகையினன்று, அரங்க ஆற்றுகையிலேயே கலை முழுமையைப் பெறும் வகையில் அமைந்தனவாகும்" (பேரா. சிவத்தம்பி, ஈழத்து வாழ்வும் வளமும் : பக் 12 (1996) என்பார். பூஞ்சோலை, நிரரமகளிர், வாழ்க்கையின் வினோதங்கள் போன்ற நாவல்களை எழுதினார். இவை பிரெஞ், ஜேர்மன் நாவல்களின் தழுவலாய மைந்தவை என கூறப்படுகின்றது. இவரது கவிதை இலக்கியங்களில் தூவுதும் மலரே, காதலியாற்றுப்படை போன்றவை அடங்கும். இவரின் இந்தக் கவிதைகள் யாழ்ப்பாணத்து வாழ்வியல் மரபுகளைப் பதிவு செய்பவையாக அமைந்துள்ளன. அத்தோடு "ஈழத்து வாழ்வும் வளமும்" என்ற ஒரு நூலையும் தந்துள்ளார். இந்நூல் பற்றிய பேராசிரியர் கா. சிவத்தம்பியின் குறிப்பில் "இலங்கைத் தமிழர் பண்பாட்டை இவ்வாறு கேசாதிபாதமாகப் பார்த்து, இப்பண் பாட்டின் சிகரங்களையும், வேர்களையும் எடுத்துக் கூறி, இந்தப் பண்பாட்டின் கோல முழுமை யையும் ஒரு சேர வைத்து நோக்கிய மனப்பாங்கு பேரா. கணபதிப்பிள்ளையிடத்தே முதன்முதலில் தெரிய வருகிறது." என்று குறிப்பிட்டார்.

இந்தவகையில் எமது பண்பாட்டுக் கோலங்களைப் பதிவுசெய்யத் தொடங்கிய ஒரு முதன்மைப் புலமையாளனாக பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை அவர்கள் விளங்கியிருந்தார் எனலாம்.

காதலியாற்றுப்படை என்ற கவிதை இலக்கியம் :

பேராசிரியர் அவர்களின் படைப்புக்களில் "காதலியாற்றுப்படை" ஈழத்தின் நாட்டார் வழக்காறுகளைப் பதிவு செய்யும் நல்லதொரு படையல். சிறப்பாக வட மராட்சிப் பிரதேசத்தின் பருத்தித்துறையின் வாழ்வியல் வழக்காறுகளைப் பதிவு செய்கின்ற இலக்கியம் அதுவாகும். மண்வாசனை மிக்க இவ் இலக்கியம் 20ம் நூற்றாண்டின் முற்பகுதியிலே வாழ்ந்த ஒரு சமூகத்தின் வழக்காறுகளைப் பதிவு செய்வது ஒரு வரலாற்றுக் காலகட்டத்து வாழ்வினை சமூகவியலாளன் அல்லது மானுடவியலாளனின் கண் கொண்டு பார்க்கும் புலமை பேராசிரியர் அவர்களிடத்தில் இருந்துள்ளது.

பருத்தித்துறையிலுள்ள தலைவனின் வீட்டிற்கு யாழ்ப்பாண நகரிலிருக்கும் தலைவிக்கு வழிகாட்டுவதாக அமைந்த இவ் இலக்கியம். 877 வரிகளைக் கொண்ட நீண்ட கவிதை இலக்கியம். இவ் இலக்கிய வடிவமானது சங்க காலத்து ஆற்றுப்படை இலக்கிய வடிவத்தின் ஒரு எளிமை வடிவம் என்ற தோரணையில் பேராசிரியர் சண்முகதாஸ் அவர்கள் "பேராசிரியருடைய இக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காதலியாற்றுப்படையை படித்துத் தெளிவு பெறுபவர்கள் சங்க இலக்கிய ஆற்றுப் படை நூல்களை நன்கு விளங்கிச் சுவைப்பார்கள். ஓரளவு இன்று நாம் விளங்கிக் கொள்ளக் கூடிய தமிழ் மொழியிலே எமக் கெல்லாம் பரிச்சயமான முதல் கரு வர்ணனைகள் இந்நூலிலே இடம் பெறுகின்றன. இந்நூலின் கட்டமைப்பினை நன்கு விளங்கிக் கொண்டு எம்முடைய பண்டைய ஆற்றுப்படைகளை அணுகின் அவற்றை மிகுந்த ரசனையுடன் படிக்க முடியும்'' என்று குறிப்பிடுகிறார்.

வடமராட்சிப் பிரதேசத்தின் புவிசார் அம்சங்கள் சமூக, பண்பாட்டு, பொருளாதார அம்சங்கள் என்பவற்றை வெளிப்படுத்தி நிற்கும் இந்நூல் ஆசிரியரின் முந்தைய நூற்பயிற்சி, அழகியல் நாட்டம், மொழிச் சிறப்பு, நகைச் சுவை உணர்வு, சீர்திருத்த சிந்தனை போன்ற பல்வேறு அம்சங்களை வெளிக்கொணர்வதே இக் கட்டுரையின் நோக்கமாகும்

இச் சிறுகாவியத்தின் 877 வரிகளிலே முதல் 549 வரிகளும் பருத்தித்துறைப் பிர தேசத்தின் வர்ணனைகளாயுள்ளன. இடையில் வரும் 157 வரிகள் நல்லூர் முதல் புறாப் பொறுக்கி வரையான பாதையினை தலைவிக்கு சொல் வதாக அமைந்தது. 702வது வரி தொடக்கம் இறுதி வரை மீண்டும் பருத்தித்துறை பற்றிய பதிவுகள் வருகின்றன. மொத்தம் 726 வரிகளில் பருத்தித்துறைப் பிரதேசத்தை படம் பிடித்துள்ள பேராசிரியர் அவர்கள் 20ம் நூற்றாண்டின் தொடக்ககாலப் பருத்தித் துறையை எம் கண்முன் கொண்டு வருகின்றார். சமூக அமைவுகள், தொழில்கள், மரபு வழக்காறுகள், கல்வி முறை, விளையாட்டுகள், உணவுப் பழக்கம், கலைப் பாரம்பரியம், பொழுது போக்குகள் போன்ற பல்வேறு அம்சங்களையும் கவிதை தெரிந்த மானுடவியலாளன் எவ்வாறு பதிவு செய்வானோ அவ்வாறு பதிவு செய்துள்ளார். நாட்டுப்புற ஆய்வுகளில் ஈடுபடும் அறிஞர்களுக்கு தீனி யாகும் தகவல்கள் செறிந்த இலக்கியமாக காதலியாற்றுப்படை விளங்குகிறது.

''நாட்டுப் புறப் பண்பாட்டியல் என்பது கிராமாந்திர மக்களின் அனுபவத்தின் பொக்கிஷம் – மனிதனோடு மனிதனை அது நேரடியாக மட்டுமல்லாது இதயத்தோடு இதயத்தை பிணைத்து வைக்கிறது'' என்ற நாட்டுப்புறப்பண்பாடு பற்றிய 'சங்கர் சென்குப்தாவின்' கருத்தினுக்கு அமைவாக பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை தரும் பண்பாடுசார் தகவல்கள் அமைகின்றன.

தொழில்கள் :

காதலியாற்றுப்படை அன்றைய பருத்தித் துறைப் பிரதேசத்தின் தொழில்களை ஆங் காங்கே பதிவு செய்கின்றது. சந்தை வியாபாரம், கடை வியாபாரம், துறைமுகத் தொழில், மீன் வியாபாரம், பன்னம் செய்தல், விவசாயம், கள் இறக்குதல், நகைத் தொழில், கடல் வாணிபம் எனப் பல்வேறு தொழில்களின் சங்கமமாய் இருந்த பருத்தித்துறையைச் சித்திரிக்கும் அழகு அற்புதமானது.

ஆசிரியருக்கு துறைமுகங்கள், கடல் வாணிபம் என்பவற்றைப் பற்றிய தகவல்களை ஆய்வதில் ஆர்வம் இருந்துள்ளது. 'ஈழத்து வாழ்வும் வளமும்' என்ற இவரது நூலில் 'வடபகுதித் துறைமுகங்கள் (பக் : 97 – 103) என்ற ஒரு கட்டுரை உள்ளது. பருத்தித் துறையில் கடல் வணிகத்துக்கு பேர் பெற்ற துறைமுகப்பட்டினம் இருந்துள்ளது.' அத்துறை முகத்தில் நெல், கொள்ளு, கடலை, எள்ளு, பயறு போன்ற தானிய வகைகள் மூடைகளாக குவித்து வைக்கப்பட்டன என்பதை,

''மன்பதை தனக்கு மாறாப் பசிப்பிணி
பண்புறத் தீர்க்கும் பசிய நெற் திரளும்
கொள்ளும் கடலையும் எள்ளும் பயறும்
பல்வகைத் தானியம் பாங்கொடு கொணர்ந்து
சுங்கம் கொடுத்து துறையிற் பறித்த
விண்ணை அளாவு மூடையின் குவையும்''

என்று பாடியுள்ளார்.

மனித குலத்துக்கு மாறாப் பசிதீர்க்கும் தானியங்கள் வரும் துறைமுகத்தில் கடல் வணிகர்களால் அள்ளிவரப்பட்ட புடவைகள் வந்திறங்கி, அப் புடவைகள் பருத்தித்துறையில் கண்ணைப் பறிக்கும் கடை நிரைகளில் விற்பனையாகியுள்ள விதத்தினை கண் முன்னே நிலை நிறுத்துகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"காந்திக் கதரும் காசு மீரமுந்
தோய்ச்சிடு சாயம் காய்ச்சிடு கலிங்கமும்
மறுநாடு எங்கணும் பெறுதற்கு அரிதாய்க்
கூறை நாடு அளித்த கோலப் புடவையும்
வள்ளுவன் சேலையும் வான்பட்டணமும்
எவ்வகைச் சேலையும் ஏரொடு விளங்கிக்
கண்ணினை இழக்குங் கடைகளின்
நிரைகளும்"

என்று வரும் வரிகள் பருத்தித்துறைப் பகுதியில் நிலவிய கடல் வணிகத்தினை குறித்துக் காட்டுகின்றன.

பனைப் பொருள்களை உபயோகித்துப் பன்னம் செய்பவர்கள் கூட 'பன்னக்கடைகள்' வைத்து வியாபாரம் செய்திருந்தனர். இந்தப் பன்னக் கடைகளைப் பற்றி கூறும் ஆசிரியர் பன்னங்களின் வகைகளையும் அவற்றின் பயன்களையும் இணைத்துப் பாடும் விதமும் சிறப்பானது.

"அழகுறு வன்னம் அமைவுறப் போட்டுத்
தொழிலமை வனிதையர் திறமையோடிழைத்த
பெட்டிபாய் குட்டான் பெயர்பெறு கதிர்ப்பாய்
அடுக்குப் பெட்டியும் சுண்டும்
பிட்டவி நீத்துப் பெட்டியும் சுண்டும்
பனையின் குருத்தைப் பதனமாய் வார்ந்து
பன்னிறந் தீட்டிய பன்னோலை கொண்டு
கைவல் இளையர் கருதி இழைத்த
ஆனைப் பெட்டியும் அழகிய தேரும்
கொட்டைப் பெட்டியும் கிலுக்குப் பெட்டியும்
எனவாங்கு,

இன்னணம் நெருங்கிடு பன்னக் கடைகளும்"

என்று கூறும் வரிகளில் 'கைவல் இளையர்' இழைக்கும் பெட்டிகளின் வகையினை இன்று அறிந்தவர்கள் மிகக் குறைந்தவர்களே.

காற்றின் துணையால் கட்டுமரத்தில் கடலிற் சென்று மீன் பிடித்து வந்து மாலையில் கூறுவைத்து மீன் விற்கும் நடைமுறையினையும், புல்லுக்கட்டு விற்கும் முறையினையும் ஆசிரியர் குறிப்பிடுகின்றார்.

"அந்தி வேளையில் அசையுங் காற்றால்
கட்டு மரங்களில் கடல்மேல் ஏகிக்
கங்குற் காலம் கழிந்த பின்றைக்
கொண்டு தாம் வந்து விலையது கூறும்
பல்வகைப் புலவுமீன் பரவுறு குவியலும்;
முல்லையின் புறவ முறைமையில் அடைந்தே
மெல்லிள மாதர் வெவ்வேறு கூட்டமாய்
ஒள்ளுறத் தீட்டிய உழவா ரைக்கை
வள்ளுறச் செருக்கு புல்வளம் பெறத் திணித்துப்
பிற்பகற் சந்தையிற் பீடுற வைத்துப்
பற்பல விலை பகர் பறியி னீட்டமும்"

என்று பாடும் வரிகள் அருகியொழிந்து விட்ட சில சந்தை முறைகளை எமக்கு உணர்த்தும் வரிகளாகி முதன்மை பெறுகின்றன.

யாழ்ப்பாணத்தில் கள் சீவி இறக்குதல் ஒரு சாதித் தொழிலாக நிலவி வருகின்றது. அத் தொழில் சார்ந்த உபயோகப் பொருள்கள் பல வழங்கி வருகின்றன. பெரும்பாலான அப் பொருள்களை குறிக்கும் சொற்கள் காரணப் பொருளாகி இன்றும் வழங்கி வருகின்றன. தொழில் சார் சொற் பொருட்களை ஆராயும் ஒரு முயற்சியும் மானுடவியல் பரப்பில் வளர்ந்துள்ளது. உழவு, பன்னம், கொல், சீவல் போன்ற தொழில்கள் பலவற்றிலும் வழங்கி வரும் சொற்களை முழுமையாக ஆய்வு செய்வது அவசியமான மானுடவியல் பணிகளாகலாம். காதலியாற்றுப் படையிலும் சீவல் தொழிலுடன் சம்பந்தப்பட்ட சொற் பிரயோகங்கள் வருகின்றன.

"நரைதோல் இயனம் அரையிற் கட்டி
அதன்கீழ் முட்டி அசைதர விட்டு
மார் போடணையத் தோலது தூக்கி
உரனுறு தளைநார் காலிணை மாட்டிக்
கால் மடித்து உன்னிக் கரு நெடும் பனைமிசைப்
பாளை தட்டிப் பார்த்துச் சீவி
ஏர் தரும் ஊசலோடு இயனத் தசையும்
இன்கள் முட்டியொடு இறங்கும் போதில்
அடிமரத் திருந்து நுனிவரை நோக்கி
நாநீர் ஊறி உதடு வருடிப்
பெரு மகிழ்வோடு பிளாவை ஏந்தி
அருவிலை கொடுத்து நறவினை மாந்திக்
களிப்புறு மாக்கள் விளிப்புறு கும்பலும்"

என்று பாடும் வரிகள் மூலம் ஒரு தொழிலைப் பதிவு செய்துள்ள போதிலும் கள்ளருந்தக் காவல் நிற்பவரை எள்ளலுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்த்து நகைச் சுவையுடன் வெளிப்படுத்தும் வரிகளாகின்றன.

அன்றைய நாட்களில் கூடாரம் போட்ட மாட்டு வண்டியில் தொலைதூரச் சந்தைகளுக்குச் சென்று வியாபாரம் செய்யும் மூதாட்டிகள் இருந்தனர். புகையிலை, வெற்றிலை, பாய் பெட்டி விற்பனைக்காக இப்படிச் செல்லும் வழக்கம் இருந்து வந்துள்ளது. இந் நடை முறையும் பதிவு செய்யப்பட்டுள்ளது. வல்லை வெளியை கடக்கவேண்டிய காதலிக்கு வழி கூறும் ஆசிரியர்,

"வல்லையென்பேர் வன்பாலை நிலந்
தன்னைத் தனியே தாண்டல் அரிதால்,
குவிந்து காய்கறி மலிந்து விற்கும்
சுன்னாகத்துச் சேர் முறைச் சந்தையில்
பண்டம் பலப்பல வாங்கி வண்டியில்
கங்குற்காலம் வந்து தோன்ற
ஏற்றி வரிசையாய் இவரும் வேளை
வண்டிக்குள்ளே மகிழ்வுற இருந்து
முழங்கால் நீட்டி யோர்மூதாட்டியர்
கணக்குப் பார்த்துக் கதைபல பேசி
வெற்றிலை இடித்து விரும்பி அருந்தி ......"

என்று கூறும் வரிகள் வியாபாரம் முடித்துச் செல்லும் முதாட்டியரின் வண்டில் பவனியை நன்றே படம்பிடித்துக் காட்டும் வரிகளாய் இன்னும் தொடர்கின்றன.

நகைத் தொழில் செய்பவர்கள் பருத்தித் துறையில் இன்றும் தனியான தெருவில் வாழ்ந்து வருகின்றனர். அன்றும் நகைத் தொழிலாளர் வாழ்ந்த செய்தியை கூறவந்த ஆசிரியர் அத்தொழிலாளர் செய்யும் பல்வகை நகைகளைப் பட்டியல் இடுகின்றார். தாலி, அட்டியல், பதக்கம், பிலாக்கு, மூக்குத்தி, பூரான் அட்டியல், கல்லட்டியல், ... என்று இந்தப் பட்டியல்நீண்டு செல்வதை,

"நன்னாள் பார்த்துப் பொன்னை உருக்கி
மணவினைக் கென்றே வரைந்திடு தாலியும்
அட்டியல் பதக்கம் பிலாக்கு மூக்குத்தி
பூரான் அட்டியல் கீச்சிக் கல்லட்டியல்
கடுகுமணி சொலிசு கவுத்தோர் காதுப்பூ
வாளி சிமிக்கி வளையல் தோடு
பட்டணங் காப்புப்பீலிக் காப்புப்
பாத சரமொடு சங்கிலி சிலம்பு
தூங்கு கடுக்கண் நட்டுவக் காலி
அரும்பு மணிமுரு கொன்றைப் பூவும்
ஒட்டியாணம் மொழிபெறு நுதலணி
அரைஞாண் கயிறொடு அரைமுடி சலங்கை
சித்திரவேலை செய்திடும் போது
புகழுறு கைபுனை பொற்றொழிலாளர்
பட்டை மீது சுத்தியல் ஓங்கித்
தட்டி அடிக்கும் தகவுறும் ஓதையும்"

என்ற பாடலடிகளில் விஸ்தாரமாகக் கூறுன்றார். Ethnography in Complex Society (James. P. Spradley, David. W. Mc Curdy - 1972) என்ற மானுடவியல் சார் நூல் ஒன்றில் A Little Gem : Ethnography of an Urban Jewelry Store (Brenda. J. Mann) என்ற தலைப்பில் இடம்பெற்றுள்ள மானுடவியல் தகவல் தரும் கட்டுரையில் முழுவதும் நகைத் தொழிலகங்களில் செய்யப்பட்ட மானுடவியல் ஆய்வுகள் கூறப்பட்டுள்ளன. என்பதனை இந்தப் பாடல்வரிகளோடு ஞாபகப்படுத்தலாம். ரங்கோலி, மட்பாண்டம் வனைதல், மரப் பொம்மைகள் செய்தல், பின்னல் வேலைகள், நாட்டுபுறச் சிற்பக்கலை, நாட்டுப்புற ஓவியக்கலை என்றெல்லாம் கைவினைக் கலைகளை வகுத்துக் கூறுபவர்கள் நகைத் தொழில்களையும் ஒருவகை நாட்டுப்புறக் கலையாகவே கொள்கின்றனர். இத்தகைய கலைகளை ஆராய்பவர்களுக்கு தகவல்களைத் தருவதாக காதலியாற்றுப் படையின் பாடல்வரிகள் அமைந்துள்ளன.

விளையாட்டுக்களும் பொழுது போக்குகளும் : -

காதலியாற்றுப்படையின் உள்ளடக்கமாக யாழ்ப்பாணத்துக் கிராமிய வாழ்வில் போட்டியாகவும், பொழுதுபோக்காகவும், சில சமயங்களில் ஒருவகை கலையாகவும் இடம் பெற்று வந்துள்ள பல விளையாட்டுக்கள் உள்ளன. பருத்தித் துறையைச் சார்ந்த கிராமங்களில் தாயம், நாயும் புலியும், கிந்தி அடித்தல், வளையம் உருட்டல், கிட்டியடித்தல் போன்ற பல விளையாட்டுக்களை சிறுபிள்ளைகள் விளையாடி வருவர். இன்றும் சில இடங்களில் இவ் விளையாட்டுக்கள் நிலவி வருகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஞானம்" – திருமலையில் ஒரு கனதியான கலந்துரையாடல்

திருமலை. வி. என். சந்திரகாந்தி.

27. 09. 2005 தினம் மாலை 5.00 மணியளவில் "ஞானம்" கலை இலக்கிய சஞ்சிகை சார்ந்த கலந்துரையாடல் ஒன்று திரு. எஸ். கிருஷ்ணானந்தன், (பிரதி செயலாளர், முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சித் திணைக்களம் வடக்கு கிழக்கு மாகாணம்) அவர்களின் தலைமையில், திருகோணமலை டொக்கியாட் வீதியில் அமைந்துள்ள மனிதவள மேம்பாட்டு நிலையத்தில் நடைபெற்றது.

"ஞானம்" சஞ்சிகையின் ஆசிரியர் தி. ஞானசேகரன் அவர்கள் இக்கலந்துரை யாடலில் பங்கு பற்றிய அதே சமயம் பல ஆக்க இலக்கியகர்த்தாக்களும் இலக்கியஆர்வலர்களும் கலந்துகொண்டனர்.

எழுத்தாளர் நந்தினி சேவியர் கருத்து தெரிவிக்கையில், நேர்காணல்களில் ஆசிரியர் தனக்குச் சாதகமான கருத்துக்களை வெளிப்படுத்தும் வகையில் கேள்விக் கணைகளை தொடுப்பதாக குற்றம் சாட்டினார்.

எழுத்தாளர் ராஜதர்மராஜா குறிப்பிடுகையில் தான் வாசகர் பகுதிக்கு எழுதிய கடிதமொன்று தணிக்கை செய்யப்பட்டு தவறான அர்த்தம் கொள்ளும் வகையில் பிரசுரிக்கப்பட்டதாக வருத்தம் தெரிவித்தார்.

அதே போன்று "சுட்டும் விழி" ஆசிரியர் யதீந்திரா, தனது கட்டுரைகள் பிரசுரிக்கப்படாமை பற்றி விசனம் வெளியிட்டார்.

முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சி திணைக்கள பிரதி செயலாளர், திரு. எஸ். கிருஷ்ணானந்தன் கருத்து தெரிவிக்கையில் "ஞானம்" சஞ்சிகை கடந்த கால இலக்கிய சாதனைகளை நினைவு மீட்டல் செய்து கொண்டிருப்பதை விடுத்து இலக்கிய மட்டத்தில் புதிய சாதனைகளை புரிய வேண்டும் என வேண்டிக்கொண்டார்.

கலாபூஷணம் த. சித்தி அமரசிங்கம் உட்பட மற்றும் பலர், ஞானத்தின் இலக்கிய பணிபற்றி புகழ்ந்துரைத்தனர்.

இறுதியாக "ஞானம்" ஆசிரியர் தனது ஏற்புரையில் பேட்டி காணப்படுபவரின் ஆழ்ந்த இலக்கிய கருத்தோட்டங்களை வெளிக்கொணரும் வகையிலேயே நேர்காணல்களில் கேள்விகள் தொடுக்கப்படுகின்றனவேயன்றி ஆசிரியர் கொண்ட கருத்துக்களுக்கு ஆதாரம் திரட்டும் வகையில் அல்ல என குறிப்பிட்டார். மேலும் வாசகர் பகுதிக்கான கடிதங்கள் தெள்ளத் தெளிவாகவும், சுருக்கமாகவும், அமைந்திருத்தல் பக்கங்களின் சிக்கனத்திற்கு அவசியமாக இருப்பதால், உபகதைகள், எடுத்துக்காட்டுக்கள் போன்ற சில பகுதிகளை நீக்கி விடுதல் ஆசிரியரின் பொறுப்பாகி விடுவதாகவும், அரசியல் சார்பான சர்ச்சைகளில் சிக்கிக் கொள்ளாதபடி கட்டுரைகளை வரையறை செய்யும் கடமையை செவ்வனே கடைப்பிடிப்பதன் மூலமே "ஞானம்" சஞ்சிகை இலக்கிய உலகில் நீடித்திருக்க முடியும் எனவும் ஆணித்தரமாக எடுத்துரைத்தார்.

விடயங்களை வெளியிடும்போது ஞானம் சஞ்சிகைக்குப் பாதிப்பு ஏற்படாதவகையிலும் வாசகர்களின் பயன்பாட்டினைக் கருத்தில் கொண்டு காரணகாரியத் தொடர்புகளற்ற வெற்று சொல்லாடல்களைச் செவ்வைப்படுத்தியும் வெளியிடவேண்டியுள்ளது.

இந் நிகழ்வு திருகோணமலையில் "ஞானம்" சார்பான இரண்டாவது கலந்துரையாடல் ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'தரைமேற் கோடு தகவுடன் கீறித்
தாயக்கட்டை தாவி எறிந்தும்
சோகி எடுத்துச் சோணாலு பாணால்
என்றே உறுக்கி யெறிந்து தானுருட்டியும்
பந்தயம் பேசி பலபேர் இருந்து
நாயும் புலியும் நலிவிலாது ஆடியும்
சீட்டை கையில் நீட்டி விரித்துப்
பல்வகை ஆட்டம் ஒல்வகை ஆடியும்''

என்ற வரிகள் சில விளையாட்டுக்களை கூறு கின்றன. இவற்றோடு மட்டும் நின்று விடாத கவிஞர்,

"கிந்தி அடித்தும் வளையம் உருட்டியும்
தட்டுப்பாய்ந்தும் கிட்டி அடித்தும்
மாவின் கொட்டை மகிழ்வொடு போட்டும்
பல்வகை ஆட்டம் பாங்குடன் ஆடும்
பள்ளிப் பொடியள் பண்புறு கூட்டமும்''

என்று மேலும் சில விளையாட்டுக்களை குறிப்பிடு கின்றார். ஒரு சமூகத்தின் மரபு வழக்காறுகளைத் தாங்கிநிற்பவையாக விளை யாட்டுக்களும் அமைந்து விடுகின்றன. அத்தகைய விளையாட்டுக்கள் அந்தந்தப் பண்பாடுசார் அடையாளங்களுமாகி விடுகின்றன. அவை அருகிவரும் காலங்களில் நினைந்து இன்புறத்தக்கவையாகவும் அமைந்து விடுகின்றன.

பட்டம் விடுதல், நீச்சல் அடித்தல், சிறுதேர் இழுத்தல் போன்றனவும் விளையாட்டுக்களாக விளங்கியிருந்தன. பருத்தித்துறை சார்ந்த கிராமங்கள் சிலவற்றில் பட்டம் கட்டுதல் ஒரு வகை கலை. பலவகைப் பட்டங்கள் கட்டப்பட்டு வந்தன. பலவகை பட்டங்கட்டி "விண்" ஒலி கேட்டு மகிழும் இன்பத்தை கவிஞர் பாடுகின் றார். பருத்தித்துறை, வல்வெட்டித்துறை போன்ற இடங்களில் இன்றும் பட்டம் ஏற்றுதல் ஒருவித 'சடங்காக' நடைபெறுகின்றமை பண்டிகைக் காலங்களில் அவதானிக்கத்தக்கது. பட்டம் ஏற்றுதலைப் பாடும் கவிஞர்,

"மூங்கில் எடுத்து முறையோடு கட்டிக்
கடதாசி ஒட்டிக் குஞ்சம் புனைந்த
கொக்குக் கொடியும் கோதறு பருந்தும்
வளம்பெற வாலா வசையில் சந்திரன்
எட்டு மூலையும் கட்டுக் கொடியும்
உரற் கொடி மீன்கொடி உயராட் கொடியும்
விண்ணை அளாவி வெகுவாய்ச் சாடிக்
கரணம் பலமுறை எழுந்தெழுந் தடித்துப்
பூட்டிய விண்கள் பொலிவொடு கூவ..''

என்ற வரிகளில் மட்டும் ஒன்பதுவகை பட்டங்கள் பற்றிக் கவிஞர் கூறுவதைக் காணலாம்.

மழைக்காலத்தில் கிராமங்களில் வாழும் சிறுவர்கள் – இளைஞர்கள் வயல் வெளிக் குளங்கள் கிணறுகளில் நீச்சலடிப்பதை பருத்தித்துறைப் பிரதேசத்தில் இன்றும் காணலாம். இதனை,

"துன்னு மாமழை சோனையாய் பெய்ய
நீளிருங் குளங்கள் நீரொடு நிறைந்து
கரையைப் பொருது நிறையுறு வெள்ளம்
துடுமெனப் பாய்ந்து சுழிகீழ் ஓடியும்
நீந்தியும் ஆடியும் நீரினை எற்றியும்''

என்ற வரிகள் புலப்படுத்துகின்றன.

யாழ்ப்பாணத்தில் உழவுத் தொழில் வழங்கிவரும் பிரதேசங்களில் நிலவி வருகின்ற விளையாட்டுக்களில் ஒன்று 'வண்டிச் சவாரி'. வல்லிபுரக் கோயில் சப்பறத் திருவிழா காலத்தில் நடைபெறும் வண்டிச்சவாரியின்போது சோடிக் காளைகளுக்கு கள்ளினை வலிந்து பருக்கி சோடினை செய்து வண்டியில் பூட்டி சவாரி செய்யும் முறையினைப் பாடுகின்றார்.

"தெளிந்த கள்ளை வலிந்து பருக்கி
வெறிமிக் கேறிய காளை எருத்தைச்
சோடி சேர்த்துச் சோடினை செய்து
பூட்டி வண்டியில் நீட்டிக் கால்களை
ஆசன மீதினில் அமர்ந்தினி திருந்து
நாணயக் கயிற்றைப் பேணி ஒருவன்
பற்றவோர் கையால் மற்றக் கையதில்
சவுக்கினை உயர்த்திச் சட சட என்ன
அடித்து வாலைக் கடித்துத் துரத்த''

என்று மாட்டுவண்டிச் சவாரியை விபரித்துச் செல்கின்றார் கவிஞர்.

தென்னங் குரும்பை, தென்னம் ஈர்க்கு, என்பவற்றால் சிறுதேர் செய்து சிறுவர்கள் இழுத்து விளையாடும் காட்சியை இன்று காண்பது அரிது இதனை,

"தென்னங் குரும்பை தெரிந்துதா னெடுத்தே
அன்னதன் மேலே
யளவுடை யீர்க்கை அமைவுறக் குத்தியழகுறு
சிறுதேர்''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்வதோடு,

"கா கா டுண் டுண் கா கா டுண் டுண்
ஈதோ சாமி எழுந்து தேர்
வாறார் கா கா டுண் டுண் கா கா டுண்
டுண் அம்மா வழிவிடு ஆத்தை நீவிலகு"

என்று கூறி இழுத்துச் செல்வதாகவும் கவிஞர் பாடி வைத்துள்ளார்.

உணவுப் பழக்கங்கள் :-

காதலியாற்றுப்படையில் அன்றைய பருத்தித்துறைப் பகுதியில் நிலவிவந்த உணவுப் பழக்கங்கள் பற்றி பலவரிகளில் கவிஞர் பாடுகின்றார்.

"The Dish Ranaway with the spoon : Ethnography of kitchen culture" என்ற Alan Schroedl என்பவரின் கட்டுரையில் வரும் சமயலறைக் கலாசாரம் தொடர்பான தகவல்களைப் போன்ற சுவாரஸ்ய மான தகவல்கள் இந்தக் கவிதையிலும் உள்ளன. உணவின் வகைகள், ஆக்கப்படும் முறைகள், அதன் பயன்கள், சுவை என்பவற்றை பாடியுள்ளார் கவிஞர்.

"விட்டுக் கள்ளினை விளைபதம் எய்து நெல்
மாவினிற் சுட்ட வண்புளிச்ச அப்பமும்
பனங்காய்க் களியுடன்சாபைமாக் குழைத்து
வனை பந்தினைப்போல் நெய்யிற் போட்டுத்
தட்டுத் தட்டாய்ச் சுட்டுமேல் எடுத்துச்
சுளகிற் பரப்பி விலையது கூறும்
கமழ்தரு செம்பனங் காய்ப்பணி யாரமும்
அருவிலை கொடுத்தே அரக்கு மாந்தும்
மாந்தர் வாய்க்கு வெங்கறிப் பாக
உளமுற உதவும் வடையின் கடகமும்
முறுக்கு நல் வாய்ப்பன் மோதகம் இட்டலி
பிட்டுத் தோசை புகழிடியப்பம்
எள்ளுங் கட்டியும் இடித்து நன்கு எடுத்து
நெய்பிழி பாகின் நிகரில் திரணையும்
பாணிப் பனாட்டும் பகர் பனங் கட்டியும்"

என்று தொடரும் வரிகளில் இத்தகைய பலகாரங்கள் பலவும் வரிசையான கடைகளிலே வைத்து விற்கப்படுவதாகக் கூறுகின்றார். இன்றும் கூட பருத்தித்துறை நகரை அண்டிய சந்துப் பாதைகளில் நுழைந்தால் வீடுகளில் மதில் சுவர்களில் ஜன்னல்கள் போட்டு வெள்ளையப்பம் விற்பவர்களைக் காணலாம்.

பனங்களி உண்ணும் அழகினை கவிஞர் ரசிக்கும் தன்மை சிறப்பானது. இவரது "ஈழத்து வாழ்வும் வளமும்" என்ற கட்டுரைத் தொகுதியில் கூட இதனை விலாவாரியாக எழுதியுள்ளார். இக் கவிதையிலே;

"காடியில் தோய்த்த காழ்பனங் கொட்டையைத்
தாயார் தம் கையிற் தாவினர் வாங்கி
வண்டியும் சொக்கும் பனங்களி புரள
வண்டினம் தேனை உண்டல் போலக்
களியினை மாந்திக் காழ்தனைக் கையில்
ஏந்து மிகவலி இன்றித் தயங்கும்....."

என்று சிறார்கள் பனங்களி உண்ணும் அழகினைப் பாடி மகிழ்கின்றார் கவிஞர்.

இப்பாடல் வரிகள் மூலமாக பருத்தித்தறைப் பிரதேச மக்களின் உணவுப் பழக்கங்களை வண்ணமுறத் தீட்டிவைத்துள்ளார்.

கலைகளும் சமயச் சடங்குகளும்

வடமராட்சிப் பிரதேசத்தின் வரலாற்று முதன்மை பெற்ற கோயில்களைப் பற்றி கவிஞர் கூறும் வரிகளிடையே பாரம்பரிய கலைகள் பற்றியும் கூறப்பட்டுள்ளது. செல்வச்சந்நிதி, கந்தவனக் கடவை, வல்லிபுரம், நெல்லண்டைப் பதி ஆகிய தலங்களைப் பற்றிக் கூறும் கவிஞர் செல்வச் சந்நிதியில் நடைபெறும் நேர்த்திக்கான காவடியாட்டத் தினைப் பாடும் போது

"நேர்த்திக் கடன்கள் நிறைவுறும் பொருட்டு
வளைவுறச் செய்து கலிங்கம் வேய்ந்து
நாற்பால் இறகு நலமுறக் கட்டிக்
கைபுனைந்து இயற்றிடும் காவடி எடுத்துக்
தோண்மேல் ஏற்றித் தோமற வைத்து
நிகரில் கீதம் நேர்பட வியல
அதற்கிணை மத்தளம் அதிர்ந்து முழங்க
அளவில் அனுபவித்து அண்ணாவி தாளம்
அமைவுறப் போடும் அவதிக்கு இணையாய்க்
காலினை அசைத்துக் காவடி சுழற்றி
மயில்போல் அசைவுற்று இயல்பால் ஆடும்
ஆட்டக் காவடி எடுப்போர் ஒருபுறம்
முள்ளு மிதியடி கொண்டும் அடியினை
உறுத்த அணிந்தே ஒண்பூக் காவடி
ஒருதோள் ஏற்றி"......

என்று பாடுகின்றார்.

பருத்தித்துறையில் தும்பளை, நெல்லண்டை, மாதனை ஆகிய இடங்களில் இன்றும் நாட்டுக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூத்துகள் கோயில்களிலே முதன்மையான சடங்குகளாக நிலவி வருகின்றன.

"கூத்துப் பார்க்க கூர்நிலா வேளையில்
சேர்த்துப் பலரைச் சிந்துகள் பாடிக்
கையில் தாளம் கணக்குறத் தட்டி
ஆர்ப்பொடு தெருவில் ஆடவர் பெண்டிர்
நெல்லண்டை நோக்கி நல்ல சோடினை
செய்யும் பெரிய தம்பியின் புதல்வன்
நாடகத் தமிழை நன்கனம் உணர்ந்தோன்
ஆடலும் பாடலும் அமைவரும் ஆசான்
அண்ணாவித்தம்பையன் அருமையாய்பழக்கிய
விலாசம் பார்க்க வெற்றிலை அருந்தி
விரைந்து விரைந்து நடப்போர் குழாமும்"........

என்று கூத்துப்பார்க்கச் செல்பவர்கள் பற்றிப் பாடி வைத்துள்ளார்.

பருத்தித்துறையில் கலைகள் செழித்து வளர்ந்திருந்ததனை – அங்கு இசை, நடனம் பெற்றிருந்த வளர்ச்சியை கவிஞர் பாடிப் பதிவு செய்துள்ளார்.

"வைகறை யாமம் வளம்பெறப் பண்களைக்
கைவல் பாணர் கற்றுக் கொடுக்க
இசையொடு கீதம் இயம்பும் சிறார்கள்
நசையொடு யாழில் நல்கிடும் ஓதையும்
நாகசரத்தில் நலம் பெறும் ஓதையும்
வேய்ங்குழல் தன்னில் வியம்புமின் கானம்
முழவினில் எழுதரு மொய்யமை ஓதை
நளினமோ டாடு நாடக மகளிர்
ஒன்னுதற் கன்னியர் ஒப்பிலா நடனம்
பழக்குடி பாடும் பண்மை கீதம்
முழங்கு தண்ணுமை தழங்கு தாளம்
இன்னிசை ஒலிகள் பண்ணிடும் ஓதையும்"

என்ற வரிகளில் யாழ்மீட்டும் சிறார்கள், கைவல் பாணர்கள், நாதஸ்வரம், புல்லாங்குழல் வாசிப்போர், முழவிசைப்போர், நடனமாதர், தண்ணுமை தாளம் இசைப்பவர் வாழ்ந்து கலைகள் வளர்த்த இடமாக பருத்தித்துறை விளங்கியதை காட்டியுள்ளார்.

பொதுவாக கிராமிய வாழ்வின் பிரிக்க முடியாத ஒரு அம்சமாக கிராமிய தெய்வ வழி பாடும் அது சார்ந்த சடங்குகளும் அமைகின்றன. பேயோட்டுதல், குறிசொல்லுதல், பூக்கட்டுதல், மைபோட்டுப்பார்த்தல், காய்வெட்டுதல் எனப் பல சடங்குகள் இன்றுங்கூட நிலவுகின்றன. இத்தகைய சடங்கு ஒன்றினைப் பாடுங் கவிஞர்,

"பேய்க்காட்பட்டுப் பெருந்துயர் எய்திடு
மாந்தர் தமக்கு மாற்றது வாக
மடைபல பரப்பி உடுக்கினை அடித்து
மேலான வாசான் வாலாயம் இட்ட
வனதே வதையை வளமுற அழைத்துக்
காய்பல வெட்டிக் கழிப்புக் கழித்துப்
பேயதைப் போக்கும் யேயுரும் ஓதையும்"

எனப் பாடியிருப்பதும் நோக்கத்தக்கது. இத்தகைய குணமாக்கற் சடங்குகள் கிராமியத்தின் உளவியலோடு "அப்பிரதக் சித்தியாகி" விட்ட சூட்சுமம் இன்றைய வளர்ச்சி பெற்ற சமூகங்களிலும் வியக்கவைக்கும் ஓர் அம்சமாக நின்றுவிட்டது.

சமூகப் பிரிவுகள்

தமிழரிடையே நிலவிவரும் சாதிப் பாகுபாட்டு முறையானது கிராமிய மக்களிடையே மிக ஆழமாக வேரூன்றியுள்ளது. வடமராட்சியில் இத்தகைய சாதிஇறுக்கம் மேலும் உச்ச நிலையில் நிலவி வந்துள்ளது. அத்தோடு ஆகமமரபு சார் நடைமுறைகள் உள்ள ஆலயங்கள் தாழ்த்தப்பட்ட சாதிப் பிரிவினர்க்கு மூடப்பட்டிருந்தது. இன்றும் அவ்வாறு உள்ளது. காலத்துக்குக் காலம் ஆலயப் பிரவேசங்கள் நடந்து வந்துள்ளன. இதனையும் காதலியாற்றுப் படையில் தரிசிக்க முடியும். செல்வச் சந்நிதி ஆலயம் ஆகமமரபு சாரா வழிபாட்டுக்குரியது. இவ் ஆலயத்தின் அடையாளத்தை;

"சாதிப்பிரிவு சாதியாது எவரும்
சரிவரக் குழுமிச் சரவண பவனைக்
....
வழுத்தி வரம் வேண்டும் வான்பதி யாரருள்
பழுத்த செல்வச் சந்நிதி தனக்குங்"...............

என்று இரண்டு வரிகளில் எம்முன் விரித்து வைக்கிறார் பேராசிரியர் அவர்கள்.

மேலும் பருத்தித்துறையை அண்டிய பிரதேசங்களில் பல்வேறு சமூகப்பிரிவினர் வாழ்விடங்கள் இருந்ததாகக் கூறுகின்றார்.

"அறவோர் மடமும் ஆதுலர் பள்ளியும்
அன்ன சாலையும் அந்தணர் வீடும்
துறவோர் இருப்பும் தேவர் கூட்டமும்
மருத்துவர் இருக்கையும்வணிகர் இருக்கையும்
நாடக மகளிர் நீடுயர் இல்லமும்"..........

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று தொடரும் வரிகளில் தொழிலை மைய மாகக் கொண்ட சமூகப்பிரிவினர் வாழ்ந்திருந்த தனை ஆசிரியர் எடுத்துக் காட்டுகின்றார்.

மரபு வழிக் கல்வி முறை

வடமராட்சியின் மரபு வழியான கல்விப் பாரம்பரியத்தின் சிறப்பினை பலரும் ஆய்வு செய்துள்ளனர். பேராசிரியர் தனது குருவுக்கு பெருமை சேர்க்கும் வழியாக அத்தகைய கல்வி முறையினை அறிமுகம் செய்கின்றார். சிவசம்பு புலவர், முத்துக்குமாரசுவாமி போன்ற மூதறி வாளரை அடைந்து இலக்கணம் கற்கும் முறை மையினை கூறுகிறார். சிறார்கள் இலக்கணம் கற்கும் ஓசையினைக் கூறும்போது,

"கோதில் இலக்கணக் கோவிந்தன் என்னும்
குமார சாமிப் புலவன் தன்னிடம்
இலக்கணம்கற்கும் இளஞ்சிறார் ஓதையும்"—

எனப்பாடுகின்றார். அத்தோடு சாரதா பீடத்திலே தமிழுடன் ஆரிய மொழிக் கல்விக்கு முதன்மை கொடுத்துக் கற்பிக்கப்பட்டதெனவும் கூறுகின்றார்.

நகைச் சுவை உணர்வு

பேராசிரியர் அவர்களின் கவிதை நடை மிகவும் நளினமானதொன்றாகும். பல இடங் களில் எளிமையாக நகைச்சுவை உணர்வுகளை சேர்த்துள்ளார். காவியத் தலைவனை நாடிவரும் யாழ்ப்பாணத்துத் தலைவி அச்சுவேலியைத் தாண்டி வல்லை வெளிக்கு வரும்போது துரத்தும் நாய்களை தன் வளத்துக்கு எடுப்பதற்கு ஓர் உபாயம் கூறுகின்றார். அதாவது;

"குதிரைபோல் நின்று குரைத்திடு நாய்கள்
உன்தனை நோக்கி உறுமி எதிர்த்திடின்
சிந்தனை கலங்கிச் சோ்பயம் எய்திடேல்
வயிரவன் தன்னை மனதினில் நினைந்தவன்
செயிர்தீர் மந்திரம் தெரிவுறக் கிளப்பின்
காலுக்கிடையில் வாலைக் குழைத்து
களிமிக அடைந்து உன்காலடி முகந்து
முறையாய் அடங்கி முகத்தினை நோக்கும்"

என்ற வரிகளில் வயிரவருக்கும் நாய்க்கும் உள்ள தொடர்பினை ஹாசிய உணர்வுடன் வெளிப் படுத்துகின்றார்.

மந்திகை என்ற இடத்தில் ஒரு தோட்டத்தில் நிற்கும் வெருளியைப் பற்றி தலைவிக்குக் கூறுவதாக அமைந்த பகுதியிலும் இத்தகைய நகைச்சுவை உணர்வு வெளிப்படுகின்றது.

"கத்தரி அடர்ந்து காய்த்திடு வளமுடைத்
தோட்டத்துள்ளே திடமுற நின்று
பூட்டிய வில்லும் பிடித்த கையினர்
வெள்ளைச் சட்டை மேலே அணிந்து
தலையில் தொப்பி பொலியப் போட்டுத்
துள்ளு மீசை தோன்று முகத்தில்
நெரித்த புருவத் துருத்த கோபக்
கனலெழு கண்ணில் குறித்த பார்வையர்
மாக்களை வெருட்டு மரபுடை வீரர்
தம்மைக் கண்டு தடுதடுப் புற்று
நெஞ்சு நடுங்கி நீ பயம் எய்தேல்,
அவரே
கத்தரித் தோட்டம் காத்திடு முறையினர்
வெருளி என்னும் பெருமையாளர்"

என்று கத்தரித் தோட்டத்து வெருளியை "பெருமையாளர்" என்று அறிமுகப்படுத்திய நயம் இன்புறத் தக்கது. ஒரு போர்வீரனை அறிமுகப்படுத்தும் நளினம் தொனிக்கும் வரிகள் இவை.

ஏனைய அம்சங்கள்

ஏறத்தாழ ஐம்பது, அறுபது வருடங்களுக்கு முந்திய யாழ்ப்பாணத்து வாழ்வின் கோலங்கள் ஏராளமாக காதலியாற்றுப்படையில் பதிவாகி யுள்ளன. தெருமூடி மடம், ஆதீண்டுகுற்றி, ஆலயங் கள், முறைச்சந்தை, கோடு, துலாமிதித்தல் போன்ற கிராமிய மணங்கமழும் அம்சங்கள் கூறப்பட்டுள்ளன.

இன்றும் பருத்தித்துறையில் தெருமூடி மடங்கள் உள்ளன. அத்தோடு தெருமூடிமடம் இருந்த இடங்கள் "தெருமூடி மடத்தடி" எனக் குறிக்கப்படுகின்றன. இவை பற்றி கூறும்போது,

"வழி நடை போகும் மக்களு மாக்களும்
வெயிலால் வாடித் துயரடையாது
முகடு பாய்ச்சி மூடி உயர்த்தித்
திண்ணை வகுத்துக் கட்டிய நேர்தெரு
மூடி மடங்கள் வரிசையாய் திகழும்"

எனப் பாடியுள்ளார்.

இன்றும் கூட சில வீடுகளில் வெளிப்புற மதில் சுவருடன் பாதையில் செல்லும் ஆடுமாடு கள் களைப்பு நீங்க தண்ணீர் குடிப்பதற்கென தொட்டிகள் அமைத்து தண்ணீர் நிறைத்து விடும் மரபு உள்ளது. அக் காலத்தில் ஆடுமாடுகள் உடல் அரிப்பை உரோஞ்சித் தீர்ப்பதற்கென ஆதீண்டு குத்திகள் அமைக்கப்பட்டிருந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தண்ணீர் பந்தருந் தருமக் கிணறும்
ஆதீண்டு குற்றியும் அரும் பூஞ் சோலையும்"
என்ற வரிகள் இதனை விளக்குகின்றன.

தெருமூடிமடம், ஆதீண்டு குற்றி என்பன அக்காலத்து மக்களிடையே பரோபகாரம், மனிதா பிமானம் என்பவற்றுக்கு வழங்கப்பட்ட முதன்மையை உணர்த்தும் அடையாளங்களாக கருத முடியும்.

துலாமிதித்து அதிகாலை வேளையிலே பயிர்களுக்கு நீர்பாய்ச்சும் முறையினைப் பாடுவதாக,

"கொழுநன் மிதித்த துலா,
கோதை இறைத்த பட்டை".........
என்று தொடரும் வரிகள் உள்ளன.

சிறு சந்தைகளான ஆயங்கள் இருந்துள்ளன என்பதை,

"கரப்புக் குத்திக் கருவண் டிறாலைப்
பற்றிப் பறியில் வைத்து விற்கும்
இடத்துக் கருகே இருக்கும் ஓராயம்"
என்று பாடப்பட்டுள்ளது.

பருத்தித்துறையில் இன்றும் "கிராமக் கோட்டடி" என்று ஒரு இடத்தின் பெயர் வழங்கி வருகின்றது. அக்காலத்தில் யாழ்ப்பாண சமூகத்தில் 'கோடுகள்' முதன்மையான இடங்களாக விளங்கி வந்தன. "கோட்டுப் புராணம்" என ஒரு இலக்கியமும் தோன்றி யுள்ளது. காதலியாற்றுப்படையிலும் அக்காலத்துக் 'கோடு' பற்றிக் கூறப்பட்டுள்ளது.

"மெய்யதில் அழகுற மேலுடை அணிந்து
கையதில் அதற்கிணைக் கருங்குடை பிடித்து
தலையது தன்னில் தலைப்பா தாங்கி
ஒரு கமுக் கட்டில் உறுதிகள் கொண்டு
முறைசெய் மன்றம் முறையுடன் ஏகு".........
என்று அந்த வரிகள் நீண்டு செல்கின்றன.

ஈழத்தில் வல்லை வெளிபற்றி எத்தனையோ கவிஞர்கள், கதாசிரியர்கள் பாடியுள்ளனர். இலங்கையர் கோனின் 'வெள்ளிப் பாதசரம்' வல்லை வெளிக்களத்தை பயன் படுத்தியது. பேராசிரியரும் யாழ்ப்பாணத் திலிருந்து வரும் தலைவியின் வல்லை வெளியூடான பயணத்தை கூறும் போது விரிவாக பாடியுள்ளார். சங்க காலத்துப் பாலை நிலத்து தன்மை வல்லை வெளிக்கு உள்ளதாக பாடல் வரிகள் அமைந்து விடுகின்றன.

ஆங்காங்கே யாழ்ப்பாணத்து மண்மணத் துடன் சொற்கள் வந்து விழுந்துள்ளன. பறி, ஆத்தை, ஆத்துப்பறந்து, கிடந்திடு, அவதி, கொத்தியாத்தை என ஏராளமான சொற் பிரயோகங்கள் வந்துள்ளன.

முடிவுரை :

இவ்வாறு ஒரு நெடுங்கவிதை அல்லது இலக்கியம் என்பதற்கு அப்பால் சென்று பண்பாடு பற்றிய நீண்டநாள் ஆய்வின் வழி, அப்பண்பாட்டின் பண்பாட்டுக் கோலங்களை (Patterns of Culture) பதிவு செய்யும் ஆய்வுக் கட்டுரையில் அமைய வேண்டிய விடயங்களை இலக்கிய வடிவத்துள் இலாவகமாக நுழைத்து தான் வாழ்ந்த பிரதேசத்தின் பண்பாட்டு அம்சங்களை எதிர்காலத்தில் நின்று நிலைக்கச் செய்ததுடன், எதிர்கால சந்ததியினர்க்கு கையளித்துச் சென்ற பெரும் பணியை பேராசிரியர் காதலியாற்றுப்படை மூலம் செய்துள்ளார்.

❏

வாசித்து விட்டீர்களா ?

"கொக்கிளாய் மாமி"

(பரிசுச் சிறுகதைத் தொகுப்பு)

'ஞானம்' ஆசிரியருடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளுங்கள்.
விலை ரூபா - 150/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நூல் : வழி
[தமிழீழப்பெண்களின்சிறுகதைகள்].
ஆக்கநோக்கு : பெண்நிலை சார்ந்தவை
வெளியீடு : கப்டன் வானதி வெளியீட்டகம்
கிளிநொச்சி
விலை : ரூ 165/=

தமிழீழப் பெண்களின் பதின்மூன்று சிறுகதைகள் இச் சிறுகதைத் தொகுப்பிலே இடம் பெற்றுள்ளன. இவற்றில் ஐந்து கதைகள் போராளிப் படைப்பாளிகளால் எழுதப்பட்டவை. தங்கள் மனங்களை ஊடுருவிய அல்லது உள்நுழைந்த கருக்கள் பலவற்றை இங்கு இவர்கள் கதையாக்கியிருக்கிறார்கள். வன்னி மகள், சிவாஜினி சிவசங்கரி, கிருஷ்ணவேணி, குமுதினி ஆகிய எழுத்தாளர்களின் சிறுகதைகள் சமூகத்தின் மனச்சாட்சியைத் தொட்டு உலுப்புவனவாய் இருக்கின்றன. குமுதினி எழுதிய பயணம் – அவலத்தின் உச்சமாய் அமைந்திருக்கிறது. ஒரு பெண்ணின் அகவலிமை நேர்த்தியான முறையில் வெளிக் காட்டப் பட்டிருக்கிறது. அத்துடன் வீறு கொண்டன வாகவும் அமைந்துள்ளது.

காலங்காலமாய் சமூகத்தில் புரையோடிக் கிடக்கும் ஓர் அநாகரிகத்தை கட்டி நிற்கிறது சந்திரா அற்புதலிங்கத்தின் 'வழி' என்ற கதை. இரு போராளிகளின் மத்தியில் ஏற்பட்ட மென்மையான காதலுணர்வை குறைக்காமலும் மிகைப் படுத்தாமலும் யதார்த்தத்துடன் உணர்வு பூர்வமான முறையில் தெளிவு படுத்தியுள்ளார் ஆசிரியர். கதையைப் படித்துமுடிக்க முகம் தெரியாத அவ்விரு போராளிகள் மீது மரியாதை கூடும் அளவுக்குக் கதையை நகர்த்திச் செல்கின்றார். இக்கதையாசிரியர் அமரராகி விட்டார் என்று எண்ணும் போது நெஞ்சை நெருடுகிறது.

மலைமகளின் 'புலிவாலைத் தேடி' என்ற சிறுகதை ஒரு காலத்தைப் பதிவு செய்யும் வகையில் அமைந்துள்ளது. தன் மனத்திலுள்ள எண்ணக்கருவை தனக்கே உரிய தொனியில் சொல்லும் ஆற்றல் கைவரப்பெற்றவராகத் தெரியவருகின்றார். இலக்கியத்திற்கு முன்னு தாரணமாய் காட்டக்கூடிய எத்தனையோ படைப்புக்கள் வெளிக்கொண்டுவர கப்டன் வானதி வெளியீட்டகம் பெருமுயற்சி எடுத்திருக் கின்றது. பாராட்டப்படவேண்டிய விடயம்.

கதை நகர்வுகள் நகர்ந்துசெல்லும் விதம் படைப்பாற்றுலுக்கு முன்னுதாரணங்களாகக் காட்டப்பட்ட போதிலும், பெரும்பாலான கதைகள் பெண்களின் இயல்புநிலைகளை வெளிப்படுத்துவனவாகவேயுள்ளன. போர்க் காலச் சூழ் நிலையில் வாழ்ந்தவர்கள் புலம் சார்ந்த வாழ்க்கையின் அவலங்களையும் போராளிகளின் உணர்வுகளையும், விலைமதிக்க முடியாத தியாகங்களையும் கருப்பொருளாக உள்வாங்கித் தம் படைப்புக்களை ஆக்கித் தந்துள்ளனர்.

'முதல் பயிரின் நினைவோடு ஆண்டு ஐந்தில்' என்ற மகுடத்தின் கீழ் கப்டன் வானதி வெளியீட்டகத்தின் வெளியீட்டுரையும், 'ஆத்மாக் களின் துடிப்பு' என்ற உள்ள உணர்வுகளை ஆதிலட்சுமி சிவகுமாரும் 'விதி' யில் இணைத்துள்ளமை நூலுக்கு பொலிவு தேடித் தந்துள்ளது.

- சுமதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நூல் : 'சிவலயம்'
[திரு. வீ. ஏ. சிவஞானம் பற்றிய நினைவுகள்]
பதிப்பாசிரியர் : வீ. ஏ. சிவஞானசுந்தரம்
வெளியீடு : கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி கொழும்புக் கிளை பழைய மாணவர் சங்கம்
விலை : ரூ 130/=
முகவரி : 16, இன்னர் பெயர் லயின் றோட், தெகிவளை.

'**சி**வலயம்' இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்தில் முன்னாள் தமிழ் கட்டுப்பாட்டா ளராகப் பணியாற்றி பலசாதனைகள் படைத்த பெரியார் அமரர் வி. ஏ. சிவஞானம் அவர்கள் பற்றிய பல்வகைப்பட்ட விடயங்கள், புகைப் படங்கள் ஆகியவற்றை உள்வாங்கி வெளி வந்துள்ளது. பல்துறைசார் அறிஞர்களின் கட்டுரைகளும் இச் 'சிவலயம்' நூலுக்கு அணி சேர்த்துள்ளன.

இந்நூலின் பதிப்பாசிரியர் திரு. வீ. ஏ. திருஞானசுந்தரம் அவர்கள் காப்புறுதித்துறை யிலும் ஒலிபரப்புத் துறையிலும் பணியாற்றி முத்திரை பதித்தவர். தனது தம்பி ஒரு சிறந்த ஓவியர் அமரராகி விட்டார் என்று கூறும் தொகுப் பாசிரியர் இந்நூலை தன் தம்பி மனோரஞ்சி தனுக்குச் சமர்ப்பணம் செய்துள்ளார்.

இந்நூலில் 'சொல்லும் நா' என்ற மகுடத்தில் அமரர் வீ. ஏ. சிவஞானத்தைப் பற்றி பேராசிரியர் கா. சிவத்தம்பி தனது கட்டுரையில் "சிவஞானத்தின் உண்மையான வல்லமை களுள் ஒன்று அவர் ஹார்மோனியம் வாசிக்கும் திறமை. அதனை வாசிக்கும் போது ஒரு தொழில்வன்மையாளரைப் போலவே (Professional) வல்லபத்துடன் அவ்வாத்தியத்தை வாசிப்பார். இந்தத் திறமை அவருக்குப் பல சிங்கள நண்பர்களைத் தேடிக் கொடுத்தது. பல அற்புதமான கலை நிகழ்ச்சிகளைத் தயாரிக்க உதவியது." என்று எழுதியுள்ளார்.

திருமதி ஞானம் இரத்தினம், திரு. திருலிங்கநாதன், 'கவனத்திற்குரிய கலைஞன்' என்ற தலைப்பில் ஏ. எம். ருஹியா, கவிஞர், திரு. எஸ். எம் கமால்தீன், திரு. ஏ. கே. கருணாகரன், திரு அருணா செல்லத்துரை, திரு. ஏ. எச். எம். அஸ்வர், கலாசூரி ஆர். சிவகுருநாதன், திரு. எஸ். ரி. தம்பிராஜா ஆகியோர் வழங்கிய கட்டு ரைகள் பலவும் இந்நூலில் இடம் பெற்றுள்ளன.

நிழலாடும் நினைவுகளில் – 'மக்கள் கலை மாமணி' அமரர் வீ. ஏ. சிவஞானம் வாழ்ந்த காலத்து புகைப்படங்களில் முக்கியமானவை இடம் பிடித்துள்ளன. அத்துடன் அவர் ஆக்கங் கள் பலவும் நூலில் இணைக்கப்பட்டுள்ளன.

இந்நூலின் பின் அட்டையில் "காற்றைக் கருவிகொண்டு கலை படைத்த வித்தகர்கள்" என்ற மகுடத்தில் திரு. வீ. ஏ. சிவஞானத்துடன் முப்பத்தொரு வித்தகர்களின் புகைப் படங் களுள் பிரசுரிக்கப்பட்டுள்ளன. 'சிவலயம்' எல்லோரும் படிக்க வேண்டிய ஒரு நூல்.

- அருந்தவன்

நூல் : 'ஓர்மம்'
[சிறுகதைத் தொகுப்பு]
ஆசிரியர் : வேல் அமுதன்
விலை : ரூபா - 200/=
முகவரி : 8 /3/ 3 மெற்றோ மாடிமனை
55வது ஒழுங்கை, கொழும்பு - 06.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் பிறந்த மண்ணை பெருமையுடன் நேசிக்கும் எழுத்தாளர் வேல் அமுதன் "எம் குரும்பசிட்டி அன்பு மாதாவின் பாதாரவிந்தங் களில் இந்நூல் சமர்ப்பணம்" என்று முதலில் கூறியுள்ள கருத்து மனங்கொள்ளத்தக்கது.

"நிகழ்வுகளின் பாதிப்பு ஏற்படுத்தும் மனக்காயங்கள் அநேகமாக காலத்தால் தேற்றம் பெறுகின்றன. இருப்பினும், சில சமயங்களில் சிலவற்றின் பாதிப்பு மன மேல் மட்டத்தை ஊடறுத்து, அதன் ஆழ்நிலையை அடைந்து, மனப்போக்கின் பாதையையும், பருமனையும், வேகத்தையும் புரட்சிகரமாக மாற்றி சம்பந்தப்பட்டவரைப் புதியவராக மாற்றி யமைக்கும் இயல்பு கொண்டதுமாக அமைந்தும் விடுகின்றது." என்று 'என்னுரையில் ஆசிரியர் கூறிய கூற்றுக்களை உள்வாங்கிக் கொண்டு நூலை நோக்குகின்றேன். இருவர் அணிந்துரை வழங்கி யுள்ளார்கள். முன்னாள் தினக்குரல் ஆசிரியர் ஆ. சிவ நேசச் செல்வன் அவர்கள் – "அறிவும் உணர்வும் கலந்த சாதனைகளாகியுள்ளமைக்கு இவருடைய இவ்வாக்கங்கள் சாட்சியாக அமைகின்றன" என்றும், "ஈழத்துச் சிறு கதைத் துறைக்கு வேல் அமுதனின் 'ஓர்மம்' தொகுதி நிறைவைச் சேர்க்கும்" என்று கலாநிதி க. குணராசாவும் (செங்கை ஆழியான்) கூறியுள்ளார்கள்.

மானுடம் சாவதில்லை, ஆத்ம சுகம், காகித ஓடம், உள்ளொளி, நற்சிந்தனை, திருவிளையாடல், ஓர்மம், கலை உள்ளம், பிறந்தநாள் பரிசு, ஒட்டுண்ணி ஆகிய பத்து சிறுகதைகள் இந் நூலில் இடம் பெற்றுள்ளன. 'காகித ஓடம்' என்ற கதையில் ஆசிரியர் கடிதங்கள் மூலம் கதையை நகர்த்திச் செல்லு கின்றார். 'நற்சிந்தனை' ஆசிரியரின் உள்ளக் குமுறலை வெளிக்காட்டுவதாக அமைந்துள்ளது. "நெஞ்சு கொதிக்குது சேர். சூடு சுரனை உள்ளவனுக்கு கொதிப்பு வருந்தானே சேர். ஓடி ஓடி உழைத்த உண்மை உழைப் பாளியை உதாசீனம் செய்யக்கூடாது சேர். அது பெரிய பாவம். நீங்கள் செய்தது ஒரு கலை ஞனை உயிரோடு சமாதி கட்டியதற்கு சமன் சேர்". திருவிளையாடலில் ஆங்கிலத்தில் பேசும் வரிகள் கூடுதலாக இருப்பதைக் காண முடிகின்றது.

இந்நூலின் ஆசிரியர் அறுவடை, வைகறை, மாரீசம், வாழும் வழி ஆகிய நூல்களைத் தந்துள்ளார். 'வழித்துணை' "சிறுகதைத் தொகுப்பும் நிச வாழ்க்கைச் சிக்கல்களின் அழகிய சித்தரிப்பு இது" என்று குறிப்பிட்டுள் ளார். எப்பொழுதும் எதையும் புதிதாகவும், புதுமையாகவும், அழகாகவும், சிறப்பா கவும், செய்யத் துடிக்கும் வேல் அமுதனின் 'ஓர்மம்' மிக அழகான அட்டைப் படத்துடன் சிறப்பாக வெளிவந்துள்ளமை பாராட்டுக்குரியது.

தற்போது திருமணசேவை ஆற்றுப் படுத்து நராக வெற்றிகரமாகச் சமூகப் பணியில் ஈடு பட்டுவரும் வேல் அமுதனிடமிருந்து இலக்கிய உலகம் மேலும் பல படைப்புகளை எதிர்பார்க்கிறது.

சிவபுத்திரன்

நூல் :'சிந்தனையைக் கிளறும்

சிரித்திரன் மகுடி'

ஆசிரியர் : மாமனிதர் சிரித்திரன்
சி. சிவஞானசுந்தரம்
தொகுப்பாசிரியர் : திக்கவயல் சி. தர்மகுலசிங்கம்
(ஆசிரியர் சுவைத்திரள்)
விலை : ரூபா 150/=
வெளியீடு : சுவைத்திரள் நகைச்சுவை ஏடு
9, தாமரைக் கேணி வீதி,
மட்டக்களப்பு.

'**க**டந்த 45 வருடங்களாக கார்ட்டூன் துறையிலும், சிந்தனைத்துறையிலும் தனி முத்திரை பதித்த சிந்தனாவாதி திரு. சி. சிவ ஞானசுந்தரம் அவர்கள். 'சிரித்திரன்' என்ற சஞ்சிகை மூலம் தமிழ்ப் பேசும் மக்களை சிந்திக்க வைத்தவர்; சிரிக்கவைத்தவர். கார்ட்டூன்படங்கள் மூலம் நகைச் சுவையை வெளிக் கொணர்ந்து கருத்துக்கள் மூலம் சிந்தனையைத்தூண்டியவர். அவர் இன்று நம்மிடையே இல்லை. அவர் சிரித்திரன் சஞ்சிகை ஒவ்வொன்றிலும் தவறாது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Mr & Mrs. டாமோதரன் மூலம் வாசகர்களை சிரிக்கவைத்து மகிழ்ந்தவர். அவருக்கு உதவியாக அவரது துணைவியார் திருமதி கோகிலம் அவர்களும் சிரித்திரன் சஞ்சிகைக்காக உழைத் தவர். சோக்கிறட்டீஸ் என்ற பெயரில் அவரது துணுக்குகள் சிரித்திரனுக்கு அணி சேர்த் துள்ளன. நூற்றுக் கணக்கான எழுத்தாளர்களை உருவாக்கிய பெருமை அவருக்குண்டு. திருமதி கோகிலம் சிவஞான சுந்தரம் அண்மையில் அமரராகி விட்டார். அவருக்குக் காணிக்கையாக திக்கவயல் சி. தர்மகுலசிங்கம் அவர்கள் "சிந்தனையைக் கிளறும் சிரித்திரன் மகுடி" என்ற இந்த நகைச் சுவை, அங்கதக் கைநூலை நமக்குத் தந்துள்ளார்.

கடந்த 25 வருடங்களாக "சிரித்திரன்" சஞ்சிகையில் அதன் ஆசிரியர் திரு. சி. சிவஞானசுந்தரம் எழுதிய 'மகுடி' என்ற பகுதியை அணு அணுவாக ரசித்த ரசிகர்களில் நானும் ஒருவன் என்று என்னுரையில் கூறிய தொகுப் பாசிரியர் இலக்கியச்சுடர் திக்கவயல் சி. தர்மகுல சிங்கம் மிகச் சிரமத்துக்கு மத்தியில் இந்த நூலை வெளிக் கொண்டு வந்துள்ளார்.

உ+ம். 1 கே : மகுடியாரே .... எது நல்ல நாடு?
ப : மதுசாரம் விபச்சாரம் இல்லாத நாடே கலாசாரம் மிகு நல்நாடு.
2 கே : இலங்கையில் இன்று எது விலை? எது மலிவு?
ப : பெற்றோல் விலை, விபத்து மலிவு.

எவ்வளவு பொருத்தமான பதில்கள். இது போன்ற பல கேள்வி பதில்களை இந்த மகுடி நூலில் தரிசிக்கலாம்.

- சுதர்சன்



நூல் : 'நாட்டுக்கருடன் பதில்கள்'
ஆசிரியர் : சிதம்பரப்பிள்ளை தர்மகுலசிங்கம் (திக்கவலயல் தர்மு)
முகவரி : திக்கவயல், அல்வாய் வடமேற்கு, அல்வாய்
விலை : ரூபா 200/=

'நாட்டுக்கருடன், என்ற பதம் யாழ்ப் பாணத் தமிழன் சொல்லாட்சியில் கோழிக் குஞ்சைப் பிடிக்கும் பருந்தைக் குறிக்கும். அதனையே நான் ஒரு நல்ல சொல்லாகக் கருதி எனது கேள்விபதிலில் தலையங்கமாகப் போட்டுள்ளேன். கேள்வி – பதிலில் முன்னோடி கள் சிலருண்டு. சுதந்திரனில் குயுத்தியார் என்ற பகுதியில் சாதனை செய்த திரு. எஸ். டி. சிவநாயகம், மகுடி என்ற பதில் மூலம் சாதனை நிலைநாட்டிய சிரித்திரன் ஆசிரியர் திரு. சிவ ஞானசுந்தரம் ஆகியோர் இந்தத்துறையில் தமிழில் முன்னோடி களாகத் திகழ்ந்துள்ளார்கள். இதனால் கேள்வி பதில் உலகம் எப்படி நேற்று இருந்தது என்பதை விளக்கும் முகமாக இரு வரது கேள்வி பதில்களிலும் சிலவற்றை எடுத்து ஆண்டுள் ளேன். இது ஒப்பீட்டு அடிப்படையில் படிக்கும் மாணவர்கட்கும் உதவிசெய்யும் எனக் கருது கின்றேன் என்று நூலாசிரியர் தனது முன்னுரை யில் குறிப்பிட்ட பகுதி ஈண்டு கவனிக்கற்பாலது.

'சுவைத்திரள்' என்ற ஆசிரியரது நகைச் சுவைச் சஞ்சிகையில் கொடுத்த கேள்வி– பதில் பகுதியே இன்று புத்தக வடிவில் வெளிவந்துள்ளது.

நல்ல ஒரு விமர்சகரான திரு. புலோலியூர் சதாசிவம் அவர்கள் கூறியுள்ள சில கருத்துக்கள் இங்கே நினைவு கூரத்தக்கன. "கலைகளின் பண்பு பணியாற்றிய நுட்பங்களைக் கற்காமலேயே கலைஞர்கள் கலைகளைப் படைப்பதையும் நாம் கண்கூடாகக் காண்கின்றோம்.

இதுவே கலையின் தனிச்சிறப்பு. கலைகள் யாவும் மனித அனுபவங்களின் தொகுப்பு ; வாழ்வியலின் வெளிப்பாடு" என்று 'நகைச்சுவை எழுத்துக்களும் வடிவங்களும்' என்ற பகுதியில் ஆசிரியர் மேற்கூறப்பட்டதைத் தந்துள்ளார்.

'நாட்டுக் கருடன்' பதில்கள் பகுதி 01

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடக்கம் பகுதி 15 வரை 300 மேற்பட்ட கேள்வி – பதில்கள் இடம்பெற்றுள்ளன. ஆசிரியரின் பதில்கள் ஆளுமையுள்ள ஒரு எழுத்தாளனின் பதில்களாக அமைந்துள்ளமை வரவேற்கத்தக்கது. பல்வகைப்பட்ட, பல்துறை சார்ந்த அறிவு பூர்வமான பதில்கள் கொண்ட இந்நூல் படிப்பவர்கள் எல்லோருக்கும் ஓர் உந்து சக்தியாக அமையும் என்பதில் சந்தேக மில்லை. 'சிரித்திரன்' ஆசிரியருடன் இருந்த அனுபவமும் சுதந்திரன் ஆசிரியரின் பதில்கள் மூலம் பெற்ற சிந்தனைகளும் ஆசிரியருக்குப் பக்கபலமாக இருந்திருக்கின்றன. வருங்கால சமுதாயத்தை நல்வழிப்படுத்த ஆக்க பூர்வமான பணிகளை தொடர்ந்தும் ஆசிரியர் இலக்கியச்சுடர் திக்கவயல் சி. தர்மகுலசிங்கம் ஆற்றுவார் என நம்புவோம்.

- சிவ மனோகரன்

கண்டியில் கலாஞ்சலி

கண்டி சத்தியசாயி கலாலயம் 24.09.2005 சனிக்கிழமை "கலாஞ்சலி" என்னும் பரத நாட்டிய நிகழ்வு ஒன்றினைக் கண்டி இந்து கலாசார மண்டபத்தில் வெகு சிறப்பாக நடாத்தியது. இலங்கைக்கான இந்தியாவின் உதவித் தூதுவர் கௌரவ K. R. ராஜன்பிள்ளை பிரதமவிருந்தினராக கலந்து சிறப்பித்தார். முக்கியஸ்தர்களின் மங்கல விளக்கேற்றலுடனும், கண்டி கதிரேசன் கோவில் சிவாச்சாரியாரின் பூசை வழிபாடுகளுடனும் விழா ஆரம்பமாகியது.

சாந்தி சமாதானம், கோலாட்டம், கீர்த்தனம், திருவாசகம், குழந்தைகளின் குரல், மழையினை வரவேற்றல், பாரதிபாடல், மாட்டுவண்டிப் பிரயாணம், அன்பே கடவுள் ஆகிய மகுடங்களில் ஆடல் நிகழ்வுகள் நடைபெற்றன. இறுதியாக மங்களம் நிகழ்ச்சி நன்றியுரை ஆகியவற்றுடன் விழா இனிதே நிறைவு பெற்றது. நிகழ்ச்சிகள் மிகவும் தரமானவையாக அமைந்திருந்தன. இந்து கலாசார மண்டபத்தில் உள்ள ஏறக்குறைய எண்ணூறு ஆசனங்களும் பார்வையாளர்களால் நிறைந்து காணப்பட்டன. ஒவ்வொரு நிகழ்ச்சி முடிவிலும் அவர்களின் கரகோஷம் வானைப் பிளந்தது.

பருத்தித்துறையைச் சேர்ந்தவரான நடன கலா வித்தகர் திருமதி உமா சிறீதரன் மலையகத்தில் பரதக் கலையை வளர்க்க வேண்டும் என்ற உயரிய நோக்கம் காரணமாக கண்டி மாநகரில், 1999ம் ஆண்டிற் சத்தியசாயி கலாலயம் என்ற நடனப் பள்ளியை ஆரம்பித்தார். அன்றிலிருந்து இன்று வரை நூற்றுக் கணக்கான மாணவ மாணவிகள் இப் பள்ளியிற் பரதம் பயின்று பரிட்சைகளிலும் சித்தியடைந்து வருகின்றனர்.

திருமதி உமா சிறீதரனும் ஏனைய முக்கியஸ்தர்களும் கண்டியில் வருடா வருடம் "கலாஞ்சலி" நிகழ்ச்சியை வெற்றிகரமாக நடாத்தி வருவது மகிழ்ச்சிக்குரிய விடயம் ஆகும்.

- கா. தவபாலச்சந்திரன்

அமைப்பாளர், கண்டி சத்தியசாயி கலாலயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

New Devi JEWELLERS

No. 269, Galle Road,
Wellawatte,
Colombo - 6, Sri Lanka.
Tel: 2580011, 4518206
E-mail: devi269@yahoo.com

திருமண சேவை

தங்கள் தேடல் பொருத்தமான மணமகளா? ... கவலையே வேண்டாம்! வேல் அமுதனிடம் 690 மணமகள்மாரின் கடிதக்கோப்புக்கள் இன்று கைவசம் உண்டு. 690 கடிதக்கோப்புக்களுள் 140 வெளிநாட்டு மணமகள்மார்; 550 உள்நாட்டு மணமகள்மார். அதிகுறைந்த மணமகளின் வயது 18; அதிகூடிய மணமகளின் வயது 52. இன்னுமா தயக்கம்? !... இன்றே பிரபல திருமண ஆற்றுப்படுத்துநர், 'சுயதெரிவுமுறை' முன்னோடி குடும்பசிட்டியூர் மாயெழு

வேல் அமுதனுடன் தொடர்பு கொள்ளுங்கள் !
சந்திப்பு முன்னேற்பாட்டு ஒழுங்குமுறையில் மாத்திரம் !

மேலதிக விவரங்களுக்கு :
திங்கள் புதன், வியாழன், வெள்ளி கிழமை நாட்களில்
மாலை மணி 4.30–8.30 வரையான நேரகாலத்துள் தொடர்பு கொள்க!
தொலைபேசி: 2360488
தொலைபேசி/ தொலைநகல்: 4514396

முகவரி:
Reputed Marriage Facilitator
Kurumpasiddiyoor Mayelu Vel Amuthan
8/3/3 Metro Apartment,
(Via 33rd Lane, Opposite Wellawatte Police)
55th Lane,
Colombo-06

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org